2842

T.N.L.A Debates

Official Report

Vol VI

No 5

7th June 1985

(C)

211,31 N85
N85·6·5
136399

78/85

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2842
24 ... 1986
எழும்பூர் சென்னை-600 008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMILNADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, 1985 ஜூன் 7, தொகுதி VI-எண்-5

**Friday the 7th June 1985- Volume VI-No-5.**

சட்டமன்றப் பேரவை செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George,
Madras-600 009

விலை-ரூ.3.50 காசுகள்] Price Rs. 3-50paise

ப
4211.31 N85
N85. 6-5
136399
சென்னை 600 008.

உள்ளடக்கம்

1985 ஜூன் 7.

24 பிப் 1986

| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— உடுக்குறியிட்ட வினாக்கள் | 645—684 |
| 2. அறிவிப்புகள் — | |
| (அ) வினாக்களுக்கான விடைகளை துறைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைத்தல் .. .. .. | 648 |
| (ஆ) பேரவை அலுவல் மாற்றம் .. | 695 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— திருச்சி மத்திய சிறையில் ஏற்பட்ட தீ விபத்து சம்பவம் | 685—695 |
| 4. கவன ஈர்ப்புகள்— | |
| (அ) மின் கட்டண உயர்வு ... .. | 696 |
| (ஆ) காவிரி நதியின் தூய்மையைப் பாதுகாக்க நடவடிக்கை .. .. .. | 700 |
| 5. அரசினர் சட்டமுன் வடிவு— மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு 1985 | 703—770 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 755—770 |
| டாக்டர் கே. சௌரிராஜன் | 703—708 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் | 709—713 |
| திரு. அ. ரகுமான்கான் | 713—731 |
| திரு. மா. சின்னராசு | 731—735 |
| திரு. டி. ஆர். வேங்கடரமணன் | 735—739 |
| டாக்டர் கே. சமரசம் | 739—745 |
| திரு. கோ. வீரய்யன் | 746—751 |
| திரு. ஆ. கா. அ. அப்துல்சமத் | 752—753 |
| திரு. பொ. உத்திராபதி | 753—755 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 770 |

1985 ஜுன் 7, வெள்ளிக்கிழமை

வைகாசி 25, குரோதன—திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.''

முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையை விட நல்லதாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

திண்டுக்கல் கால்நடை மருந்தகம்.

154—(*வினா எண் 680)—திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல் நகரில் உள்ள கால் நடை மருந்தகத்தை மருத்துவ மனையாக உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் நகரில் உள்ள கால்நடை மருந்தகம் மருத்துவமனையாக உயர்த்தப்பட்டு 1-9-1984 முதல், கால்நடை மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனையாக உயர்த்தியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் முன்பு மருந்தகமாக இருந்த சமயத்தில் அந்த இடம் எப்படி இருந்ததோ அதே நிலையில்தான் இப்போதும் இருக்கிறது. அதேபோல முன்பு எந்த அளவில் மருந்துகள் அளிக்கப்பட்டு வந்ததோ, அதே அளவில்தான் இப்போதும் அளிக்கப்படுகிறது. ஆகவே முழுமை யாக அதை மருத்துவ மனையாக்கி கொடுக்கக் கூடிய சகல வசதி களையும் செய்து தருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் அந்தக் கருத்துக்களை யெல்லாம் மையமாக வைத்துக் கொண்டு, இதற்காக 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உள் நோயாளி களுக்காக ஷெட்டுகள் கட்டுதல், கால்நடை உதவி மருத்துவர் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஆகியோருக்கு குடியிருப்புக் கட்டுதல், மருந்துகளை அதிகமாக வாங்குதல் போன்ற வசதிகளை செய்து தருவதற்காகத்தான் இந்த 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி புதியதாக ஏற்படுத்தக் கூடிய அந்த கால்நடை மருத்துவமனைக்கு தனிப்பட்ட இடம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்கள் எதனுடைய அடிப்படையில் வழங்கப்பட்டு நடந்துவருகிறது. புதியதாக இந்த நிதியாண்டில் கால்நடை மருந்தகங்களை துவக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: கிராமங்களில் இருக்கக் கூடிய கால்நடை மருந்தகம் என்பது 20 ஆயிரம் கால்நடைகள் அந்தப் பகுதியில் இருந்தால் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் என்று தேசீய விவசாயக் குழு பரிந்துரை செய்திருக் கிறது. ஆனால் தற்போது நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு 10 ஆயிரம் கால்நடைகள் இருந்தாலே அந்தப் பகுதியில் மருந்தகம் துவக்கலாம் என்ற கருத்துருவை ஆய்ந்துக் கொண்டிருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை என்றாலும் மாண்புமிகு அமைச்சரிடத்திலே தகவல்கள் இருக்கும் என்ற நம்பிக்கையில் கேட்கிறேன். எனது தொகுதியில் உள்ள சுரண்டை என்னும் பகுதியில் கால்நடை மருத்துவமனை இந்த ஆண்டில் துவக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்காக ஒரு தனிக் கேள்வியையே எழுப்பியிருக்கிறார்கள். உரிய நேரத்தில் அதற்கு உரிய பதில் தரப்படும்.



திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை கிளை நிலையங்கள், அதாவது சப். சென்டர்கள் புதியதாக ஆரம்பிப்பது தற்போது நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதாக அறிகிறேன். இப்போது தேவைப்படும் இடங்களில எப்படி கால்நடை மருந்தகங்களை துவக்குகிறோமோ அதேபோப் கால்நடை கிளை நிலையங்களையும் தேவையான இடங்களில் துவக்குவதற்கு அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்-

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற அடிப்படைப் பிரச்னைகள் பலவற்றை ஆராய்ந்து வருகிறோம். வருகிற 7ஆம் தேதி இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீது அரசினுடைய கருத்து தெரிவிக்க இருக்கிறோம்.

திரு. த. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சப்-சென்டர்களாக இருக்கிற அந்த இடங்களில் எல்லாம் இருக்கிற லைவ்-ஸ்டாக் அசிஸ்டெண்டுகளுக்கு அங்கேயே வசிப்பதற்கு இடம் இல்லை அவர்களுக்கு நிரந்தரமாக அங்கேயே வசிக்கும் வகையில் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்தால், அந்தப் பகுதியிலே இருக்கிற கால்நடைகளை நிரந்தரமாக பராமரிக்க அவர்களுக்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே அதை ஏற்படுத்தித் தர அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை உதவி மருத்துவர் மற்றும் கால்நடை ஆய்வாளர்கள் ஆகியோருக்கு அந்தந்தப் பகுதியிலேயே குடியிருப்புகளைக் கட்டித் தரவேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. கட்டம் கட்டமாக, படிப்படியாக அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும்.

டாக்டர் த. முகம்மது சலீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெர்மனியிலிருந்து பசுக்கள் வாங்குவதாக ஏற்கெனவே கூறப்பட்டது. எவ்வளவு பசுக்கள் எப்பொழுது வருகிறது? அது யார் யாருக்கு வினியோகம் செய்யப்படும், எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே இது சம்பந்தமாக மானியக் கோரிக்கையின் போது முழுத் தகவல்கள் இந்த கண்ணியமிக்க சபைக்கு அளிக்கப்படும்.

## புதிய கால்நடை மருத்துவ மனைகள்

155—(*வினா எண் 834)—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த நிதியாண்டில் புதிய கால்நடை மருத்துவ மனைகள் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் பால்வளத்தை மேலும் பெருக்குவதற்கு பால்வளத் துறையும், கால்நடைத் துறையும் இணைந்து செயல்படுகிற விதத்திலே நல்ல திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அந்த விழுமிய நோக்கத்தோடு தான் இன்றைக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பால்வளத் துறை, கால்நடைத் துறை ஆகிய இரண்டு துறைகளும் ஒரே அமைச்சருடைய பொறுப்பிலே வைத்து தொண்டு புரிய அனுமதித்துள்ளார்கள்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாநிலத்தில் கால்நடை மருத்துவ மையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை கிளை நிலையங்களில் ஆய்வாளர்கள் பற்றாக்குறை இருப்பதை அரசு அறியுமா? அந்த இடங்களில் கால்நடை மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, இதுபோன்ற கருத்துருக்கள் எல்லாம் அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது. மானியக் கோரிக்கையின் போது தெளிவுபடுத்தப்படும்

2. அறிவிப்புகள்

(அ) வினாக்களுக்கான விடைகளை துறைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு வினா எண் 156க்கு பதில் துறையிடமிருந்து பேரவைச் செயலகத்திற்கு வரவில்லை வினாக்கள் அனுமதிக்கப்பட்டு துறைகளுக்கு அனுப்பட்டு 42 நாட்களுக்கு பின்தான் அவை பட்டியலில் சேர்க்கப்படுகின்றன. எனவே, வினாக்களுக்கான விடைகளை அதற்குள் பேரவை செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும், வினாக்கள் பேரவையில் எடுத்துக் கொள்ளும் வரை விடைகளை அனுப்பாது இருப்பது தவிர்க்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.



கைத்தொழில் ஆசிரியர்களது ஊதியம்.

156—(*வினா எண் 321.)—திரு. செ. செம்மலை மற்றும் திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கைத்தொழில் ஆசிரியர்களின் (Craft Instructor) ஊதிய வேறுபாட்டை நீக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லையென்று சொன்னாலும், இந்தக் கைத்தொழில் ஆசிரியர்கள் ஒரே பயிற்சிக் கல்லூரியில் படித்து, ஒரே கல்வித் தகுதி பெற்று பணிபுரிகிற இடங்களைப் பொறுத்து இந்த ஊதிய வேறுபாடு தற்போது இருந்து வருகிறது. நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரிகிற கைத்தொழில் ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிகிற கைத்தொழில் ஆசிரியர்களுக்கும் கிட்டத்தட்ட அடிப்படை சம்பளத்தில் 70 ரூபாய் அளவிற்கு வேறுபாடு இருக்கிறது. ஆகவே ஒரே கல்வித் தகுதியுள்ளவர்களிடம் இந்த டிஸ்கிரிமினேஷன் தேவையில்லை என்ற அடிப்படையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசாங்கத்திற்கு அவர்கள் பல வேறு சமயங்களில் கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை நியாயத்தின் அடிப்படையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து அந்த ஊதிய வேறுபாட்டை நீக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த கைத்தொழில் ஆசிரியர்கள் கோரிக்கைகள் நான்காவது ஊதியக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே குழுவினுடைய அறிக்கை அல்லது பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்ததற்குப் பிறகு அதன்மீது அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

தஞ்சை மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி

157—(*வினா எண் 830)—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பொறியியற் கல்லூரி துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை பகுதியில் வெளிநாட்டில் இருக்கிற தமிழர்கள் உதவியோடும், இங்கே இருக்கிற தமிழர்கள் உதவியோடும் சுயநிதித் திட்டத்தில் பொறியியல் கல்லூரி துவங்க முன் வருவார்களானால் அரசு அதற்கு அனுமதி அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு விதித்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்கள் வருவார்களானால் அதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வினா எண். 166 இப்போது எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.

ஆலந்தூர் சாலையில் புதிய மேம்பாலம்

166—(*வினா எண் 917)—திரு. சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை 146-வது வட்டம், ஆலந்தூர் சாலையில் இருந்து கத்திப்பாரா சாலை செல்லும் வழியில் உள்ள தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைக்க மாநகராட்சி அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் இப்பணிகள் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : ஆம். சைதை 146வது வட்டம் ஆலந்தூர் சாலையில் இருந்து கத்திப்பாரா சாலை செல்லும் வழியில் உள்ள ஆலந்தூர் தரைப்பாலத்தை மேம்பாலமாக உயர்த்தும் திட்டம் மாநகராட்சியால் பரிந்துரை செய்யப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-10)

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலத்திற்கு திட்டமிடப்பட்ட தொகை எவ்வளவு? இது 1981-லே பரிந்துரை செய்தது என்று சொன்னார்கள். ஆகவே 4 வருடம் ஆகியும் காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன? என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கத்திப்பாரா தரைமட்டப்பாலமும், ஜாபர்சான்பேட்டையில் உள்ள தரைமட்டப் பாலமும் ஆகிய இரண்டு பாலங்களையும் மேம்பாலமாக உயர்த்தவேண்டும் என்று சொல்லி, 120 லட்சத்திற்கான திட்டத்தை அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அரசு அதை பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. நிதி ஆதாரத்தைப் பொறுத்து, அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கிண்டியையும், சைதையையும் இணைக்கின்ற மிகப் பெரிய பாலமாக அது விளங்கிக்கொண்டு இருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அந்த வழியாக கிண்டித் தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகளுக்குச் செல்லவேண்டும். குறிப்பாக மழைக்காலங்களில் அவர்களால், அந்தப் பாதையில் செல்ல முடியவில்லை. ஆகவே இது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாலமாக கருதப்படுகிறது. எனவே இந்த ஆண்டிலே அதற்கான நிதியை ஒதுக்கி, அந்தப் பணியைத் துவக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நிதி ஆதாரத்தைப் பொறுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 158 முதல் 162 வரை இறுதியாக எடுத்துக்கொள்ளப்பெறும்.

கரூர் திண்டுக்கல் அகல ரயில் பாதை.

163—(*வினா எண் 5)—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர்-திண்டுக்கல் அகல ரயில்பாதை அமைக்கும் பணி இதுவரை எந்த அளவுக்கு நடைபெற்றுள்ளது என்ற தகவல் இவ்வரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) இப்பணி எப்போது நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கரூரிலிருந்து திண்டுக்கல் வரை புதிய அகல இருப்புப் பாதை அமைக்கும் பணியில் நில எடுப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கரூர்—திண்டுக்கல் பிரிவில் கரூரிலிருந்து பாளையம் வரை 30 கி. மீட்டர் தூரத்திற்கு மண் வேலையும், பாலங்கள் கட்டும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளன. போதிய நிதி வசதி கிடைப்பதைப்பொறுத்து பாளையம் வரை

1985-ம் ஆண்டு மத்தியிலும், பாளையம்-திண்டுக்கல் பகுதியில் மார்ச் 1987லும் புதிய அகல இருப்புப் பாதை அமையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்திலிருந்து கரூர் வழியாக திண்டுக்கல் வரை பிராட்கேஜ் ரயில் பாதை அமைப்பது பற்றி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, கரூர்—திண்டுக்கல் வரையில்தான் என்று தெரி வித்திருக்கிறார்கள். எனவே இதை சேலம் வரையில் நீட்டிப்புச் செய்ய அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கரூர்-திண்டுக்கல் இடையிலே அமைக்கும் ரயில் பாதையை நாம் சிரமப்பட்டுத்தான் செய்யவேண்டியிருக்கிறது. இதை சேலம் வரை நீட்டிக்க வேண்டுமானால் மத்திய அரசாங் கத்தோடு பேசித்தான் செய்யவேண்டும்.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் திண்டுக்கல் அகல ரயில் பாதையோடு தூத்துக்குடியை கருரோடு இணைக்கும் அகல ரயில் பாதை துவக்க விழா எல்லாம் நடை பெற்று நீண்டகாலம் ஆகிறது. அது எந்தக் கட்டத்தில் இருக்கிறது? எப்போது வேலை முடியும் என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கரூர்—திண்டுக்கல் அகல ரயில் பாதையைப் பொறுத்த ஒன்று. மற்ற விவரங்களைப் பற்றி விவரம் வேண்டு மானால் தனியாகக் கேள்வி போட்டால், விளக்கமான பதிலைச் சொல்ல இயலும்

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இந்த மன்றத்திலே இந்தக் கேள்வி கேட்கப்பட்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, கரூர்-திண்டுக்கல் அகல ரயில் பாதை சேலம் வரை நீட்டிப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என்று சொன்னார்கள், ஆனால் இப்போது பதில் சொல்லும் போது, மத்திய அரசோடு பேசித்தான் அதைத் தீர்க்கவேண்டும் என்று சொல்கிறார்கள். எனவே தமிழக அரசு இதுகுறித்து, மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திற்கு நாம் பரிந்துரை செய்த உடனே அவர் களிடமிருந்து சரி என்று பதில் வந்தால் இப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது. ஆயிரக்கணக்கான இடங்களி லிருந்து இப்படிப்பட்ட வேண்டுகோள்கள், மத்திய அரசுக்கு வந்து கொண்டிருக்கிறபோது, நாம் பேசித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.



## சாலை விபத்துகள்

164—(*வினா எண் 336)—திரு. கு. சுப்பராயுன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சமீப காலமாக அதிகமாகிவரும் சாலை விபத்துக்களைத் தடுக்க அரசின் திட்டம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துக்களைக் குறைக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன, அவையாவன

(1) போக்குவரத்து விதிகளை திறமையாக அமுல் படுத்துதல்.

(2) சாலைகளையும் அதன் சந்திக்கும் இடங்களையும் திட்டமிட்டு அமைத்துப் பராமரித்தல்.

(3) போக்குவரத்துக் கல்வியின் மூலம் பொதுமக்களுக்கு அறிவூட்டுதல்

(4) சாலையின் மையத்தில் தடுப்புச் சாதனங்கள் அமைத்தல்.

(5) வண்டிகள் போக்குவரத்தையும் பாதசாரிகள் நடமாட்டத் தையும் முறைப்படுத்த, சாலை சந்திப்புகளிலும், பாதசாரிகள் சாலையைக் கடந்து செல்லுமிடங்களிலும் போக்குவரத்துக் காவலர்கள் நிறுத்தப்படுகின்றனர். அத்துடன் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள் முதலியன கட்டப்படுகின்றன.

(6) போக்குவரத்து விதிகள் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூற பிரச்சார மோட்டார் வண்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

(7) மெதுவாகச் செல்லும் வாகனங்களும் கனரக வண்டிகளும் சாலைகளில் குறிப்பிட்ட நேரத்தில்தான் செல்ல வேண்டும் என்று முறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

(8) சாலைகளில் பாதசாரிகள் கடக்கும் பாதைகள் எவை என்பதையும், பேருந்து நிற்குமிடங்கள் எவை என்பதையும் குறிப்பிட்டு அடையாளம் காட்டப்பட்டு இருக்கிறது.

(9) சாலைப் பாதுகாப்பு குறித்து கருத்தரங்குகள் நடத்தப் படுகின்றன. காவல் துறையைச் சேர்ந்த போக்குவரத்து விதிகள் செயற் பிரிவு பணியாளர்களுக்கு பம்பாயிலுள்ள போக்குவாத்துப் பயிற்சி நிறுவனம் போன்ற பயிற்சி நிறுவனத்தில் தனிப் பயிற்கி அளிக்கப்படுகிறது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைய விவரங்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம் கடந்த காலத்தில் தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளைப் பார்க்கும்போது பஸ்களால் விபத்துக்கள் அதிகமாக ஏற்பட்டு உயிர் சேதம் ஏற்படுவதும், லாரிகளால் அதிகமான அளவுக்கு விபத்துக்கள் அதிகரித்து வருவதாகவும் இருக்கிறது. பெரிய நகரங்களாக உள்ள இடங்களில் எல்லாம் கடைகளை ரோடின் இரண்டு பக்கமும் குறுகலாக வைத்து போக்குவரத்து பாதிக்கக்கூடிய அளவுக்கு தடைகளாக இருக்கின்றன. அதேபோல் ரோடுகளில் பெரும்பாலான இடங்களில் வேலிகளை வைத்து அதிகமான அளவுக்கு மரங்களை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள், இப்படிப் பல்வேறு காரணங்களால் இந்த மாதிரி விபத்துக்கள் ஏற்பட்டு உயிர் சேதம் அதிகமான அளவுக்கு ஏற்படுகிறது. இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாக இதற்கு என்று ஒரு படை போல ஒரு குழுவை அமைத்து இந்த மாதிரி காரியங்கள் நடக்காமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவக்களே, பல இடங்களில் கடைகளை நெருக்கமாக வைத்து அந்த ரோடுகள் குறுகலாக ஆக்கப்படுகின்ற நிலைமை இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். சில கிராமப்புற பகுதிகளில் வேண்டுமானால் மரங்கள் செடிகள் வளர்ந்து சாலைகளில் நெரிசல் ஏற்படுகிறது. ஆனால் கடைகளைப் பொறுத்தவரையில் அப்படி வரக்கூடாது என்று நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருந்தாலும் சில நேரங்களில் கடுமையான நடவடிக்கை எடுத்து அப்படி கட்டி இருப்பதை எடுக்கும்போது அதற்கும் அரசுக்கும் கெட்ட பெயர் வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து இருக்கிறார்கள். இருந்தாலும் சாலைகளில் கடைகளை கட்டுவதோ அல்லது அந்த இடங்களில் ஆக்கிரமிப்புப் பணிகளை அவர்கள் கட்டாயமாகச் செய்யக் கூடாது என்பதற்கு தீவிரமான நடவடிக்கையை இந்த அரத எடுத்துக்கொண்டிருக்கிறது. அது மட்டும் அல்லாமல் ஒரு படை தனியாக இன்றைக்கு அமைக்கப்படுமா என்று கேட்டு இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு வாய்ப்பு கிடைத்து இருக்கிற காரணத்தால் நான் சொல்ல விரும்புகிறேன், அரசு எவ்வளவு பெரிய காரியத்தை இதில் செய்தாலும் எவ்வளவு கோடிக்கான ரூபாயை இதில் செலவு செய்தாலும் இந்த சாலை விதிகளை கடைபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் வரவில்லை என்று சொன்னால் நிச்சயமாக அதை தடுப்பது என்பது மிக கடினம். வேண்டுமானல் எல்லோரையும் திருப்திச் செய்வதற்கு நான் அதை செய்கிறேன் இதை செய்கிறேன் என்று சொல்லலாமே ஒழிய எவ்வளவு சட்ட திட்டங்கள் இருந்தாலும் படித்தவர்கள், தெரிந்தவர்கள் வாகனங்களை இயக்கிக்கொண்டு இருப்பவர்கள்,





அந்த சட்ட திட்டங்களை கடைப்பிடிக்கவில்லை. இங்கே சிக்னலில் கூட நிற்பதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். வேகமாக போய்விடலாம் என்ற முயற்சியை எடுக்கிறார்கள். வண்டிகளில் அடித்தப் பின்பு அது அரசின் பிரச்சினையாக முடிந்து விடுகிறது. எனவே, அஜாக்கிரதையாக அந்த சட்ட திட்டங்கள் தெரிந்து இருந்தும் அதை கடைபிடிக்காத காரணத்தால் தான் இந்த நிலைமை ஏற்படுகிறதே தவிர நான் அவர்களைப் பற்றி சொல்வதற்கு தயங்குகிறோம். ஒரு வேளை அவர்கள் நம்மைப் பற்றி தவறாக நினைத்துவிடக்கூடும் என்பதற்காக சொல்வதற்கு தயங்குகிறோம். இன்றைக்கு நான் இதை கடுமையாக சொல்வதற்கு காரணம் இது வெளியில் வரவேண்டும், அவர்கள் இதை தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இதை சொல்கிறேன். எனவே சென்னையில் கூட இதை கொஞ்சம் கடுமையாக ஆக்கலாம் என்று கூட முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே இன்றைக்கு அதை சொல்வதன் மூலமாக அதில் ஒத்துழைப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சமீப காலமாக சாலை விபத்துக்கள் வருவது குறித்து பல ஆலோசனைகளை, தடுப்பு நடவடிக்கைகளை எடுத்ததாகச் சொல்கிறார்கள் சென்னை போன்ற நகரப் பகுதிகளில் சைக்கிளில் ஒருவருக்கு மேல் அதிகமாக 2, 3 பேர் செல்வதால் சென்னை போன்ற நகரப் பகுதிகளில் ஏராளமான சைக்கிள் இருப்பதன் காரணத்தால் விபத்துக்கள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா? ஆகையால் சென்னை போன்ற நகரப் பகுதிகளில் ஒருவருக்கு மேல் சைக்கிளில் அதிகமான பேர் செல்லக் கூடாது என்று அரசு தடை விதிக்குமா என அறிய விரும்புறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்ளே, சைக்கிளில் இரண்டு பேருக்கு மேல் போனால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். இரண்டு பேர் போவதால விபத்து நடக்கும் என்று நிச்சயமாக சொல்ல முடியாது. இன்னும் சொல்லப் போனால் 2 பேர் போகும்போது கொஞ்சம் பாதுகாப்பாக கூட இருக்கிறது. முதலில் போகிற ஆள் கொஞ்சம் தடுமாறினால் பின்னால் போகும் ஆள் வேகமாக கீழே இறங்கி அதை பிடித்து நிறுத்திக் கொள்கிறார். 3 பேர் போகும்போது தான் பிரச்சினை ஏற்படும் என்று கருதுகிறேன். எனவே 2 பேர் போவதை தடுக்கின்ற யோசனை அரசுக்கு இல்லை. அது சாதாரண மக்களுக்காக அந்த வசதியை நாம் செய்து கொடுத்து இருக்கிறோம். ஆனால் சாலை விதிகளை கடைப்பிடிப்பார்களே ஆனால் நிச்சயமாக இந்தப் பிரச்சினை 75 சதவீதம் குறைந்து விடும் என்று நான் நம்புகிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சாலை விபத்துக்களில் அதிகமான அளவுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மூலம் வாகனங்கள் ஈடுபடுகிற காரணத்தால் சாலை விபத்துக்கள்

ஏற்பட்டு அதனுடைய நஷ்டஈடு வழக்குகளில் அரசின் வழக்குகளாக பல தேங்கி இருக்கின்றன. அதிலே இப்போது புதிய மத்திய அரசினுடைய அந்த இன்ஜூரன்ஸ் ஆக்ட்னுடைய அமெண்டுமெண்டுபடி மரணம் அடைந்தவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாயும், காயம் அடைந்தவர்களுக்கு 7,500 ரூபாயும் குறைந்த பட்சம் நிர்ணயத்ததின் காரணமாக அந்த குறைந்த பட்ச நிர்ணயத் தொகையை பலரும் பெற்றுக்கொள்ள தயாராக இருந்தும்கூட அரசினுடைய வழக்குகள் விரைவாக முடிக்கப்படாததன் காரணமாக அந்த வழக்குகள் தேங்கி கிடக்கின்றன. இதை கருத்தில் கொண்டு ஒரு Directorate of Motor Accident Claims என்று மொத்தமாக எல்லா போக்குவரத்துக் கழகத்திற்கும் சேர்த்து ஏற்படுத்தி இந்த வழக்குகளை விரைவாக முடிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–20)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் தான் அதிகமாக விபத்துக்கள் நடக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அது அவ்வளவு சரியான கருத்து என்று என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பேருந்துகள் அதிகமாக இதிலே இருக்கிறது, எனவே அதிலே விபத்துக்கள் வரும்போது அதிகமாக வருகிறது என்று வெளியே விளம்பரப்படுத்தினால் சரியாக இருக்காது. இன்றைக்கு விபத்துக்கள் என்பது ஓட்டுநர்களால் மட்டும் நடக்கிறது என்று நினைத்து விடக்கூடாது. அல்லது வண்டிகள் சரியில்லை, அதனால்தால் என்று சொல்லிவிட முடியாது. வேறு பல காரணங்களினால்கூட விபத்துக்கள் நடக்கின்றன. எனவே, அதைத் தடுக்கத் தான் ஏறகனவே கருத்துக்களைச் சொன்னேன். தாங்கள் சொல்லியபடி காம்பன்சேஷன் கொடுக்கவேண்டியது பற்றி தனியாக ஆய்வு செய்து முறையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்பகுதிகளில் போடப்பட்டிருக்கின்ற ஹைவேஸ் ரோடுகளில் அந்தத் தார் ரோடுகளானது, தரைமட்டத்திலிருந்து 1 அடி வரை உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. இரண்டு வாகனங்கள் ஒன்றையொன்று எதிர்த்து வரும்போது, வாகனத்தின் டயர் கீழ்ப்பகுதியில் இறங்கினால், தார் பகுதியானது மேடு போல் இருக்கிறது. அது டயரை வெட்டி சேதப்படுத்தி விடும் என்ற காரணத்தினால், இரண்டு பேருமே, தார் ரோட்டிலிருந்து கீழே வண்டியை இறக்கத் தயங்குகிறார்கள். அதன் காரணமாக. வேகமாக வருகிறவர்கள், ஒருவருக்கொருவர் • அவன் போகட்டும், இவன் போகட்டும் என்று நேரே வந்து விபத்துக்கள் நிறைய நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. எனவே, தாழ்வாக இருக்கிற பகுதியை ரோடின் லெவலுக்கு சரியானதாக ஆக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய ஆலோசனை ஏற்கனவே



நடைமுறையில் இருந்தாலும், சில இடங்களிலே அப்படிப்பட்ட தவறுகள் இருக்கத்தான் செய்கின்றன. அதனை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவது ஓட்டுநர்களால் மட்டுமல்ல என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது உண்மையும் கூட. சாலைகளிலே செல்கின்ற—நடைபாதையிலே செல்கிறவர்களும் சரி, சைக்கிள் போன்ற வாகனத்திலே செல்கிறவர்களும், வழியில் வண்ண, வண்ண விளம்பரங்கள் கண்ணைக் கவருவதாலே, அவைகளைப் பார்த்து குறுக்கே நடந்து செல்கிறபோதும், அதைக் கண்டு களிக்கிற நேரத்தில் சில நிமிடங்கள் மயங்கி விடுகிறார்கள். எனவே, சாலை ஓரங்களில் இருக்கிற மிகப் பெரிய விளம்பரங்களை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்:

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, வண்ண விளம்பரங்களைப் பார்த்தே கட்டுப்படுத்திக் கொள்ளமுடியாதவர்கள், உண்மையிலேயே வரக்கூடியவர்களைப் பார்த்தால் என்ன செய்வார்கள் என்று தெரியவில்லை. அது மட்டும் காரணம் என்று சொல்ல முடியாது. கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக எடுக்கமுடியும். மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனையைப் பற்றி யோசிக்கலாம்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துகளுக்குப் பல காரணங்கள் இருந்தாலும், ஓட்டுநர்களும் ஒரு முக்கியமான காரணம். ஏனென்றால், ஓட்டுநர்கள் சில நேரங்களில் சரியான பயிற்சியைப் பெறாமல் லைசென்சைப் பெற்று வண்டிகளை ஓட்டுவதற்கு வந்துவிடுகிறார்கள். அதற்கு அடுத்தபடியாக, அவர்கள் மது அருந்திவிட்டு வாகனங்களை செலுத்த வருகிறார்கள், அதற்கு அடுத்தாற்போல், அதிவேகமாக, ஏறத்தாழ 80 கிலோ மீட்டர், 90 கிலோ மீட்டர், 100 கிலோ மீட்டர் என வேகமாகச் செல்கிறார்கள். இந்த மூன்று காரணங்களால் விபத்துக்கள் அதிகமாக நடக்கிறது என்று நடைமுறையில் பார்த்துக்கொண்டு இருக்கின்றோம். எனவே. ஓட்டுநர் உரிமை, ஹெவி வெஹிக்கில்ஸ் வாகனங்களுக்கும், லாரி ஆகட்டும், பஸ் ஆகட்டும், அனைத்து உரிமையை போக்குவரத்துக் கழகமே, நன்கு பயிற்சி பெற்றவர்களுக்குத் தான் அந்த லைசென்சை வழங்கி, மது அருந்தியவர்கள் எல்லாம் வாகனங்கள் ஓட்டுவதற்கு தடையை விதித்து, கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு. திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்லிய அத்தனை கருத்துக்களுக்கும் ஏற்கனவே அரசாங்கத்தாலே கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது தான் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக டிரைவர் டிரெயினிங்

ஸ்கூலை ஆரம்பித்திருக்கிறார்கள். அது 12 இடங்களிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதிலே உருவாக்கப்படுகின்ற டிரைவர்கள், போக்குவரத்துக் கழகங்களுக்கே போதாத நிலை இருக்கிறது. அதனை விரிவாக்கி. இன்றைக்கு அத்தனை ஓட்டுநர்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுடைய சார்பாகவே, பயிற்சி கொடுக்கவும், வெளியிலே யாரும் பயிற்சி கொடுக்கக்கூடாது; போக்குவரத்துக் கழகத்திலே பயிற்சி கொடுக்கப்படுகின்றவர்களுக்குத்தான் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று ஏதாவது ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவரவும், அதற்குக் கொஞ்ச காலம் ஆகும். கொஞ்ச காலத்திற்கு முன்னாலேயே செய்து இருந்தால் பிரச்சினை இப்போது தீர்க்கப்பட்டிருக்கும். இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம், நிச்சயமாக 7,8 ஆடுண்க் காலத்திற்குள்ளே அந்த நடைமுறையைக் கொண்டுவர முடியும் என்று கருதுகிறேன். எனவே, ஓட்டுநர்கள் மட்டுமே காரணம் என்று சொல்லிவிட முடியாது. அவர்கள் செய்கின்ற தவறையும் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை ரோடுகளில் அரசியல் கட்சித் தலைவர்களை வரவேற்பதற்காக ஆர்ச்கள் போடுகிறார்கள். இதனால் விபத்ததுகள் ஏற்படுகின்றன, ரோடுகளில் தளம் அமைக்கிறார்கள். இதனாலும் விபத்துக்கள் வருகின்றன. அதேபோல் ப்ளாட்பாரமே இல்லாத அளவிற்கு கோவில்கள், கடைகள், வீடுகள் எல்லாம் கட்டுகிறார்கள். ப்ளாட்பாரங்களில் நடக்க முடியாமல் விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே இவற்றையெல்லாம் அப்புறப்படுத்துவதற்கு இனிமேலாவது அரசியல் கட்சித் தலைவர்களை வரவேற்க ஆர்ச்கள் அமைக்கக் கூடாது என்று உத்தரவு போடுவதோடு போக்குவரத்து விதிகளுக்குப் புறம்பாக நடப்பவர்களின் லைசென்ஸ்களை ரத்து செய்வதோடு இப்படி விபத்தில் இறப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. திடீரென்று நடு ரோட்டில் ஐயையோ என்று உயிர் போகக் கூடிய ஏழை எளிய மக்களுக்கு பத்தாயிரம் ரூபாய் என்று உயர்த்திக் கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத் சாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை நல்ல யோசனையாகத்தானிருக்கிறது. ஆனால் அதனை எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளுமா என்று தெரியாது. அப்படி ஏற்றுக்கொள்ள வைப்பார்களானால் நிச்சயமாக அது வரவேற்கக்கூடிய ஒன்றாயிருக்கும். அதில் ஒன்றும் பிரச்னையில்லை. அது விபத்துக்களைத் தடுப்பதற்கு வாய்ப்பாகவும் இருக்கும். இன்னொன்று பணம் கொடுப்பது பற்றி கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே அதற்கு ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கூடலூர் இ. வி. வேலு: தலைவர் அவர்களே, மக்கள் நன்மையைக் கருதி பூந்தமல்லி பகுதியில் நெடுஞ்சாலைக்குச்



சொந்தமான நிலத்திலிருந்து அகற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் தமிழகம் முழுவதும் உள்ள நகர்ப்பகுதிகளுக்கு அமல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, எங்கெங்கே அந்தப் பிரச்னை இருக்கிறது என்பதைப் பார்த்து அந்த இடத்திற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை அன்பரசன்: தலைவர் அவர்களே, சாலை விபத்துக்கள் அதிகமாக இரவு நேரங்களில்தான் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் இரவு நேரங்களில் வருகிற பேருந்துகளாக இருந்தாலும் சரி; லாரிகளாக இருந்தாலும் சரி ஏழெட்டு விளக்குகள் போடப்பட்டு எதிரே வருகிற வண்டிகளோடு மோதுகிற அளவிற்கு விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதற்கும் கடலூர்-சித்தூர் பாதை, பண்ருட்டி நெல்லிக்குப்பம் போகும் பாதை இவற்றில் அங்கிருக்கிற விவசாய மக்கள் கேழ்வரகாக இருந்தாலும், நெல்லாக இருந்தாலும், சோளமாக இருந்தாலும் தானியங்களை எல்லாம் ரோடில் போட்டு அடிக்கிற காரணத்தினால் பல விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பாக உள்ளது. அதை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனைகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். விவசாயிகளைப் பொறுத்தவரையில் அதைச் செய்யக்கூடாதுதான், என்றாலும் அவர்களைத் தடுக்கிற போது அவர்கள் வேறு இடமில்லாமல் தடுமாறுகிறார்கள். அந்தப் பிரச்னையும் இருக்கிறது. அதையும் கவனத்தில் கொண்டுதான் முறையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். லைட்டைப் பொறுத்து கடுமையான நடவடிக்கைகள் எடுக்க ஏற்கனவே அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்விக்கான பதிலை ஒன்றரை பக்கங்கள் படித்திருக்கிறீர்கள். 47-(ஆ) விதியின்கீழ் அப்படி ஒன்றரைப் பக்கம் போகிறது என்றால் பதிலை மேஜை மீது வைக்கவேண்டும். இதை எல்லா அமைச்சர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஒன்றரைப் பக்கங்களுக்குக் கொஞ்சம் குறைவுதான்.

## மதனத்தூர் அருகே கொள்ளிடத்தின் குறுக்கே பாலம்.

165—(*வினா எண் 403)—டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி த. பழூர் ஒன்றியத்தில், மதனத்தூர் கிராமத்தின் அருகே கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி: தலைவர் அவர்களே, கொள்ளிடத்திலே அணைக்கரையில் மதனத்தூரையும் நீர்த்தநல்லூரையும், இணைக்குமுகத்தான் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாலத்திற்கு அதிகமாகச் செலவாகாது; சில கோடி ரூபாய்கள் செலவாகும். கும்பகோணம் ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக விளங்குகின்றது. அதை ஜெயங்கொண்டத்தோடு இணைப்பதற்கு இது ஒரு பெரிய வாய்ப்பாக இருக்கிறது. இதன் பின்னர் விருத்தாச்சலத்தோடு இணைக்கலாம். சேலம் வரை இந்தப் பாதை தொடர்ந்து செல்லும். அமைச்சர் அவர்கள் ஊருக்கும் செல்லும். அந்த முறையில் அதை ஏற்றுக்கொண்டு மறுபரிசீலனை செய்து, வியாபாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து போக்குவரத்து வசதிக்கு முக்கியத்துவம் கொடுத்து இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே; இதற்கு மூன்றரைக் கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் கொஞ்சம் என்று. இல்லை என்று சொன்னால் அவர்களுக்கு அலர்ஜி ஏற்படும். எனவே எதிர்காலத்தில் நிச்சயமாக அது ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

*டாக்டர் ந. மாசிலாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் அணைக்கரையில் கட்டப்பட்டுள்ள பாலம் பிரிட்டிஷ்காரன் காலத்தில் கட்டப்பட்ட பாலமாகும். இப்போது அதற்கு வயதாகி வயோதிகம் ஏற்பட்டு, வியாதியும் வந்துவிட்டதாக அறிகிறேன். அதனுடைய தன்மை, நிலை, வலுவு ஆகியவற்றைப் பற்றி அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். அந்தத் துறையைச் சார்ந்தவராக இருப்பதினால், அப்படிப்பட்ட அணைக்கரை பாலம் பழுதடைந்திருப்பதை செப்பனிடுவதற்குப் பதிலாக, போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கின்ற சூழ்நிலையில் பக்கத்தில் உள்ள இடத்தை பரிசீலித்து, அதன் மீது பாலம் அமைக்க அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இப்போது அதனுடைய வலிமை என்ன என்பதைப் பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. வியாதி வந்துவிட்டதாகச் சொல்கிறார். அது டாக்டருக்குத்தான் தெரியும். அவர் டாக்டர். எனவே என்ன வியாதி என்பதைப் பற்றி அவரிடம் நான் கேட்டு தெரிந்துகொள்கிறேன். அதைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே கேட்டு, அதற்குப் பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.



## 'நகரத்தார்' சமுதாயத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.

167—(* வினா எண் 429)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'நகரத்தார்' சமுதாயத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) மற்றும் (ஆ): அவைத் தலைவர் அவர்களே, 'நகரத்தார்' சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் கோரிக்கை மேற்கண்ட இனத்தவர்களால் தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, 'நகரத்தார்' சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் 1978 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாட்டில் நமது செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வி. அவர்களிடம் பிற்பட்டோர் பட்டியலில் தங்கள் சமுதாயத்தைச் சேர்க்க வேண்டுமென்று கோரிக்கையை கொடுத்திருக்கிறார்கள். அந்த சமுதாயம் தற்போது வாழ்ந்து கெட்ட நிலையில் இருக்கிறது. அவர்கள் அந்தமான், சிலோன், பர்மா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் நல்ல முறையில் வியாபாரம் செய்து, அந்த ஊர்களில் வீடுகள், நிலங்கள் வாங்கி வைத்திருந்ததை தற்போது விற்றுவிட்டு, தற்போது வரதட்சிணை கொடுமையால் இங்கு இருக்கும் வீடு, நிலங்களையும் விற்றுவிட்டு ஏழ்மை நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆதலால், அந்த சமுதாயத்தை பாதுகாக்கின்ற முறையில், அந்த சமுதாயத்தைச் சார்ந்த ஏழை எளிய மாணவர்கள் படிக்க வசதியும், வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையில் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன்—அரசின் ஆய்வில் உள்ளது என்று. முதலில் சொன்ன பதில்தான் இதற்கும் பொருந்தும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது பிற்பட்ட நல அம்பாசங்கர் குழுவினால் பிற்பட்ட சமுதாயத்தினருக்கு பாதிப்பு ஏற்படும்

என்று பிற்பட்ட மக்களிடையே பரவலாக வெளியில் பேசப்படுகிறது. அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் பட்டியலிலே 31% ஆக இருந்ததை, 50 ஆக உயர்த்தி டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையை வெளியிட்டிருக்கிறார்கள். பிற்பட்ட மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாத வண்ணம் இந்த அரசு பார்த்துக் கொள்ளும்.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிறிஸ்துவ வன்னியகுலத்தைச் சார்ந்தவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படி வந்திருக்கிறது என்றால், அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'நகரத்தார்' சமுதாயத்தைப் பற்றிய கேள்விதான் இது. எனவே, வேறு தனி கேள்வி போட்டால், அதற்கு விவரமான பதில் அளிக்கப்படும்.

## காளப்பநாயக்கன்பட்டிக்கு பாண்டி ஆற்றுநீர்.

168—(* வினா எண் 230)—**திரு. சி. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் காளப்பநாய்க்கன்பட்டி அருகிலுள்ள புதுக்குளத்துக்கு பாண்டி ஆறு தண்ணீரை வாய்க்கால் மூலம் திருப்பிவிட அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் காளப்பநாய்க்கன்பட்டி அருகிலுள்ள புதுக்குளத்திற்கு பாண்டி ஆறு தண்ணீரை வாய்க்கால் மூலம் திருப்பி விடுதல் தொடர்பாக ஆய்வுப் பணிகள் எதுவும் செயல்படுத்தப்படவில்லை.

**திரு. சி. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காளப்ப நாயக்கன்பட்டி அருகிலுள்ள புதுக்குளத்திற்கு பாண்டி ஆறு நீரை திருப்பி விடும் திட்டம் பல ஆண்டு காலமாக ஒரு சிலரால் தடைபடுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் காளப்பநாயக்கன்பட்டிப் பகுதியிலும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கும், அந்தப் பகுதியிலுள்ள 10,000 ஏக்கர் நிலத்திற்கும், வறண்டு இருக்கும் 1,000 கிணறு



களுக்கும் பாசனம் பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு இனிமேலாவது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் சிறப்பைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். என்னிடமும் தனியாக சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, துரிதமாக ஆய்வு மேற்கொள்ள ஆணை இடப்படும்.

**திரு. சி. சிவப்பிரகாசம்:** துணைத் தலைவர் அவர்களே, தற்போது காளப்பநாயக்கன்பட்டி ஏரிக்கு கொல்லிமலையிலிருந்து தண்ணீர் வந்துகொண்டு இருக்கும் சிறிய வாய்க்கால்களைச் சில பெரிய விவசாயிகள் ஆக்கிரமித்துத் தண்ணீரைத் தடுத்து அந்தத் தண்ணீரை தங்களுடைய நிலங்களுக்குத் திருப்பி விடுகிறார்கள். இதனால் அந்தப் பகுதியிலே தண்ணீர் வரத்துக் குறைந்து சிறிய விவசாயிகள் மற்றும் ஆயிரக்கணக்கான கிணறுகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே அந்த ஆக்கிரமிப்பை அகற்றவும் தடைகளை நீக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையால் பராமரிக்கப்படுகின்ற ஏரிகளாக இருந்தாலும் ஆறுகளாக இருந்தாலும் கால்வாய்களாக இருந்தாலும் அவை ஆக்கிரமிக்கப்படுகின்ற நேரத்திலே கட்டாயமாக அவற்றை அகற்ற வேண்டுமென்ற ஆணை அரசால் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின் அடிப்படையிலே அந்த ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை வருவாய்த் துறையும் பொதுப்பணித் துறையும் சேர்ந்து செயல்பட வலியுறுத்தப்படுவார்கள்.

**திரு. த. பழனி:** துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையிலே விவசாயம் மற்றும் இதரப் பணிகளுக்குப் பயன்படுகின்ற நிலங்களை அகற்றினால் பரவாயில்லை. ஆனால் பொதுப்பணி துறைக்குச் சொந்தமான இடங்களிலே 10, 20 ஆண்டுகளாக குடிசைகளைப் போட்டுக்கொண்டு வாழ்கின்ற ஏழை எளிய விவசாய மக்களை அப்புறப்படுத்தக்கூடாது என்பது அரசின் பரிசீலனையில் உள்ளதா? அப்படிப்பட்டவர்களுக்கு அரசு அந்த நிலங்களிலே 2, 3 சென்ட் என்று கையகப்படுத்தி நிலத்தைக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** துணைத் தலைவர் அவர்களே, நாட்டிலே தேவையான காலி இடங்கள் நிறைய இருக்கின்றன. நீர் நிலைகளைப் பராமரிப்பதைப் பொறுத்த மட்டிலும் அது நாட்டிற்கு தேவையான ஒன்றாகும். ஆகவே

அப்படிப்பட்ட இடங்களையொட்டி கரைகளை வலுவிழக்கச் செய்யக்கூடிய முறையிலே குடிசைகளைப் போடுவதும வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவதும் நல்லதல்ல. நீர்நிலைகளின் கரைகளைப் பராமரிப்பது என்பது அந்த அந்தக் கிராமத்திலே உள்ளவர்களுக்கு வெள்ளத்திலிருந்து பாதுகாப்புக் கொடுக்கின்ற முறையிலே அமையும். ஆகவே குளக்கரைகளிலே, ஏரிக்கரைகளில்ல குடிசைகளைப் போடுவதைப் பாதுகாத்து அந்த இடங்களை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கும் எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம்.

169—(* வினா எண் 364)—டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ்: துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம் ஏற்கெனவே செயல்பட்டு வந்தது. அது நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே தாழ்வான பகுதியிலிருக்கின்ற நீரை மேட்டுப் பகுதிக்குக் கொண்டு வந்து அதன் மூலமாக 71 குளங்கள் நிரப்பப்படுவதுடன், கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கர் விவசாயத்திற்கும் அது பயன்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதைக் கருத்தில்கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய முறையிலே — அந்தப் பகுதியிலே அடிக்கடி குடிநீர்ப் பிரச்சினையும் ஏற்படுகிறது, அந்தத் திட்டம் ஏற்படுகிறபோது—குடிநீருக்கும் அது பயன்படும் என்பதால் அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து நிறைவேற்ற முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே நீரேற்றுப் பாசனம் என்று சொன்னால் பள்ளத்திலிருந்து மேட்டுப்பாங்கான பகுதிகளுக்குத் தண்ணீரைக் கொண்டு செல்வது தான். அந்த முறையிலே இந்த வினாவிலே குறிக்கப்பட்டிருக்கும் இடத்திற்கும் வசதி செய்து தரப்பட்டிருந்தது என்றாலும் பின்னாலே போடப்பட்ட பல்வேறு



திட்டங்கள் அடிப்படையிலே வேறுவிதமான பாசன வசதி செய்து தருகின்ற வாய்ப்பு இருந்ததன் காரணமாக அந்த மாற்றம் செய்யப்பட்டது. அந்த அடிப்படையிலே ஏற்கெனவே பயன் அடைந்துவந்த விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டத்தின் கீழ் வந்த ஒரு பகுதி சித்தாறு—பட்டணங்கால் திட்டத்தில் ஏற்கெனவே கொண்டுவரப்பட்டு பயன்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதரப் பகுதிகள் கோதையாறை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படுகின்ற வகையிலே தலைமைப் பொறியாளர் திட்டம் தயாரித்து வருகிறார். உலக வங்கி உதவியுடன் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற பயனுள்ள திட்டம் வேறு விதமாக நிறைவேற்றப்பட்டதாக அமையும்.

(முற்பகல் 9-40)

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்ட உலக வங்கியின் திட்டத்தின் கீழ் செயல்படுத்துவது என்பது பாராட்டுக்குரியது. ஆனால், அதே நேரத்தில் அது கடைவரம்பு பகுதி மாதிரி கடைசியாக அமைந்து இருக்கிறது. சித்தாறு—பட்டணங்கால் மூலம் வரும் தண்ணீரும் கடைசிவரையில், விவசாயிகளுக்கு என்ட் வரையில் போக முடியவில்லை. அதைப் போல, கோதையாறு திட்டத்தின் மூலம் கொண்டு வருவது பற்றியும் சொன்னார்கள். அதுவும் விவசாயிகளுக்குக் கடைசி வரையில் சென்று சேரும் அளவிற்கு இருக்காது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதைப்பற்றி மறுபரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தையும் அந்தத் திட்டங்களையும் சம்பந்தப்படுத்தாமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைமடைப் பகுதி வரையில் தண்ணீர் செல்வதில்லை என்று தெரிவித்தார்கள். கோதையாறு பாசனத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நவீனப்படுத்துகின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது. அப்படி நவீனப்படுத்தப்பட்டபிறகு கோதையாறு பாசனத் திட்டத்தில் இருக்கும் தலைமடைப் பகுதி முதல் கடைமடைப் பகுதி வரையில் தண்ணீர் போகின்ற அளவிற்கு இருக்கும். அந்த அடிப்படையில் ஏற்கனவே விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டத்தின் மூலம் பயன் அடைந்த பகுதிகளுக்கும் பயனைத் தரலாம் என்றுதான் அரசு உத்தேசித்திருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டம் அமலில் இருந்தது. ஆனால் மின்சாரச் செலவு அதிகம்

ஆகிறது என்பதால் அது நிறுத்தப்பட்டதால் ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ள சொந்தக்காரர்கள்—பல சிறு சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதால், மின்சாரம் அதிகமாகத் தேவைப் படுகிறது என்பதை வைத்துக் கொண்டு நிறுத்தப்பட்டிருப்பதால் அதை கோதையாறு மாடர்னைசேஷன் ஸ்கீம் அமல் படுத்தப் படும் வரையில் இம்ப்ளிமெண்ட் செய்ய முன்வருமா? அதைப் போல, பரளியாறு நீரேற்றுப் பாசனத் திட்டத்தையும் கோதையாறு மாடர்னைசேஷன் ஸ்கீமில் சேர்த்து இம்ப்ளிமெண்ட் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரளியாறு திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால் நன்றாக இருக்கும். ஆனால், இந்த திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த நீரேற்றுப் பாசனத் திட்டத்திற்கு மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு அதற்குரிய மின்சாரக் கட்டணம் அதிகமாகக் கட்டப்பட வேண்டிய நிலையில் நிறுத்தப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அது எந்த அளவிற்குச் சரியானது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத்தைப் பயன்படுத்தாமலே, ஏற்கனவே பயன் அடைந்திருந்த ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசன வசதி செய்து தர வேறு வாய்ப்புகள் இருந்தால் அதைப் பயன்படுத்தி அரசு பாசன வசதி செய்து தந்தால் அதில் தவறு என்ன இருக்கிறது என்பதைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை.

**திரு. கோ. வீரய்யன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். வேறு பாசன வசதி செய்து கொடுத்தால் அதை ஏற்றுக் கொள்வதில் தவறு இல்லை. மின்சாரக் கட்டணத்தால் ஏற்படும் பளுவைக் காட்டி அந்தப் பாசனம் நிறுத்தப்படாமல் இருக்குமா? அதைப் போல, மின்கட்டணம் கட்ட வேண்டுமென்ற காரணத்தால் திருப்பூண்டி வேளாங்கண்ணியில் இருந்த இறைவைப் பாசனப் பகுதிகளில் நிறுத்தப் பட்டிருக்கிறது. ஆகவே மின் கட்டணத்தால் பாதிக்கப்படுகிறது என்ற நிலைமையைக் காட்டி நிறுத்தப்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தற்போது என்னிடத்தில் பதில் இல்லை. பொதுவாகச் சொல்ல வேண்டும் என்றால், இந்த திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். ஏற்கனவே மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப் படுகிறது என்பதற்காக மட்டும் இந்தத் திட்டம் மாற்றப்படவில்லை. ஏற்கனவே பட்டணங்கால் திட்டத்தின் மூலம் ஒரு



பகுதியினர் பயன் அடைந்து கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பகுதியினர் பயன் அடைய வேண்டுமென்று தான் அரசு முயற்சிக்கிறதே தவிர, திடீரென்று இந்தத் திட்டத்தின் மூலம் பெற வேண்டிய பயனை நிறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான மக்களுக்குக் குடிநீர் வசதி கிடைக்கும். தாம்பிரபாணி ஆற்றில் எப்பொழுதும் தண்ணீர் கிடைக்கிறது. அந்தத் தண்ணீர் முழுவதும் கடலுக்குச் செல்கிறது. இந்த லிப்ட் இர்ரிகேஷனைச் செயல்படுத்துவதன் மூலம் குடிநீர்ப் பிரச்னை ஓரளவிற்குத் தீரும். இதற்காக அதிக அளவிற்குப் பணம் செலவழிக்கப்படத் தேவையில்லை. மோட்டார் தான் ஃபிக்ஸ் செய்ய வேண்டியிருக்கிறது. ஒன்று அல்லது இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்து இந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்துறை நீரேற்றுப் பாசனம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வந்தது என்பதையும் அது செயல்முறையில் சரியான பாசனத் திட்டமாக இல்லாததன் காரணத்தால் தான் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தான் வேறு சிக்கனமான முறையிலே மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### வருஷநாடு பகுதியில் வைகை ஆற்றின் குறுக்கே புதிய அணை

170—(*வினா எண் 371)—**திரு. இரா. முத்தையா** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி தொகுதி வருஷ நாடு பகுதியில் வைகை ஆற்றின் குறுக்கே இன்னொரு அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்** : துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) முதல் நிலை அறிக்கை அரசுக்கு வந்துள்ளது. அது அரசின் ஆய்வில் உள்ளது.

## வெள்ளத் தடுப்புப் பணிகள்.

171—(*வினா எண் 390)— திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு பொது பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டு மன்னார் கோயில் தாலுக்காவில் ஏற்படும் வெள்ள பாதிப்பினை தடுக்க வடிகால் வாய்க்கால்களை செப்பனிட அரசு உத்தேசித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. யா. சை.மு. யூசுப் : துணைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த காட்டுமன்னார் கோயில் தாலூகாவில் மழை பெய்யும் போதெல்லாம் வெள்ளங்கள் ஏற்பட்டு காட்டுமன்னார் கோயிலைச் சேர்ந்த வடவார் உள்கரை உடைக்கப்படுகிறது. அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார் கோயில் தாலுக்காவில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப் பாதிப்பினைத் தடுக்க வடிகால் வாய்க்கால்களைச் செப்பனிட மதிப்பீடுகள் தயாரிக்க தல அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கின்றது என்று முதுநிலை துணைத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதே போன்று காட்டுமன்னார் கோயில் வெள்ளியங்கால் ஓடை பல ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாகி, வெள்ளத்தால் வருகின்ற தண்ணீர் வடிவதற்கு முடியாத நிலையில் நெல்லியேந்தல் ஓடை உடைக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான குடும்பங்களும், பல்லாயிரக்கணக்கான விளைநிலங்களும் பாதிக்கப்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு வெள்ளியங்கால் ஓடையிலுள்ள அக்கிரமிப்புகளை அகற்ற இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, இப்படிப்பட்ட ஓடைகள், ஏரிகள் ஆக்கிரமிப்புப் பரவலாக இருக்கின்றது. ஏற்கனவே முந்தைய கேள்விக்குப் பதில் அளிக்கக் கூடிய நேரத்தில் கூடச் சொன்னேன். அந்த முறையில் ஏரிகள், கால்வாய்கள்



ஆக்கிரமிப்புகளை அகற்ற முயன்ற அளவு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதிலே அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு எல்லோரும் ஒத்துழைப்பு தருவார்களானால அது தமிழ்நாட்டிற்கும் நல்லது. அரசுக்கும் நல்லது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில், குறிப்பாக நதிகளில் ஏற்படக் கூடிய வெள்ளப் பெருக்கு காரணமாக, மாநிலத்திலே உள்ள பல பகுதிகளிலுள்ள விவசாயிகள், அதிலும் குறிப்பாக, ஏழை விவசாயிகள், கடுமையாகப் பாதிக்கப்படுவதால் நீர்ப்பாசனத் திட்டம் பொறுத்த அளவில், வடிகால், வாய்க்கால்களைச் செப்பனிடுவதற்கு ஒரு பிரத்தியேகமான 'பிரையாரிட்டி' முன்னுரிமை கொடுத்து, அதை மாநிலம் முழுவதும் அமுல்படுத்த ஒரு திட்டம் தீட்டி செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடிகால், வாய்க்கால்கள் அத்தனையையும் ஒரே நேரத்திலே முழுமையாக நவீனப்படுத்த வேண்டுமென்று சொன்னால் அது இயலாத காரியம். அப்படியே நாம் ஒரு வாதத்திற்காக மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஏற்றுக் கொண்டால் கூட அதை அமுல் படுத்துவதற்குப் போதுமான தொகை வேண்டும். அது கிடைக்காது. அப்படியே தொகை கிடைத்தாலும் தளவாடங்கள், மற்றைய பொருள்கள் ஒரே சமயத்தில் கிடைக்காத சூழ்நிலை உருவாகும். இருக்கிற நிதியை பயன்படுத்தி, பணிகளைச் செய்யக் கூடிய சூழ்நிலையில், தண்ணிரைவிட முடியாத சூழ்நிலையும், அந்தத் திட்டத்தை அமுல்படுத்த முடியாத சூழ்நிலையும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பெய்கின்ற மழையில் சுமார் 65 சதவீதம் காட்டுமன்னார் கோயில் தாலுகாவிலும் சிதம்பரம் தாலுகாவிலும் பெய்வதன் காரணமாக, 1977-ல் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சுற்றிப் பார்த்த பிறகு, அங்கே ரூ.5 கோடி அளவிற்கு நெற்பயிர் சேதமாக இருப்பதைத் தடுப்பதற்காக, அங்கே எல்லா வாய்க்கால்களிலும் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வருஷம் பூராவும் பெய்கின்ற மழை வடிகின்ற குடியிருப்பு பகுதியாக இருக்கிற காரணத்தால், சிதம்பரம் தாலுகா, காட்டுமன்னார் தாலுகா ஆகியவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி, வாய்க்கால்களை வெட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன். ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய முயற்சிகளை இந்த அரசு

மேற்கொள்ளும். அந்த நேரத்தில் உள்ளூர் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் எல்லோரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

**திரு. கே. அன்பழகன்:** துணைத் தலைவரவர்களே, பல இடங்களில் ஏரிகள், ஓடைகளை உடைத்து, நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்து, உழவடை செய்கிறார்கள். அத்தகைய ஆக்கிரமிப்புகளை நீக்குவது மட்டுமல்லாமல் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள்–சிவில் கிரிமினல் நடவடிக்கைகள்—எடுக்க சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** துணைத் தலைவரவர்களே, இதுபற்றி ஏற்கெனவே அரசு ஆய்வு செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ராஜாபாபு:** துணைத் தலைவரவர்களே, போளூர் தொகுதியில் செண்பகத்தோப்பு அணைக்கட்டும் திட்டம் 1977-ல் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தும் இது வரையில் அந்த அணை கட்டப்படவில்லை. அதற்கு இந்த ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போட்டால் நன்றாக இருக்கும். எப்படியாயினும் 27–ந்தேதி மானியக்கோரிக்கை வருகிற அன்று தெரிந்துவிடும்.

172—(*வினா எண் 607)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் காலனூரில் வைகை நதியில் மதகு கட்டி பெரும் அளவாக வரும் வெள்ளத்தை ஒழுங்குபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

(இ) இதன் மதிப்பீடு என்ன?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவரவர்களே, வைகை அணையில் பெருவெள்ளம் வரும்போது அதிக அளவில் வீணாகச் சென்று கடலில் கலக்கிறது. அந்த நீரைத் தேக்கி வைத்தால் 3 ஆண்டுகளுக்கு போதுமான தண்ணீர் விவசாயத்திற்குக் கிடைக்கும், தட்டுப்பாடு இருக்காது. அதனால்



வறட்சியான இராமநாதபுரம் மாவட்டத்திலும் தஞ்சை மாவட்டத்தைப் போல் மூன்று போகம் சாகுபடி செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையும் சட்டமன்ற உறுப்பினரும் இன்னாள் அமைச்சருமான அருமை அண்ணன் இராமசாமி அவர்களுடைய கோரிக்கையும் அத்திமுத்து நீர்த்தேக்கம், காலனூர் அருகே ஒரு நீர்த்தேக்கம் ஆகியவற்றை அமைத்தால் நலமாக இருக்கும் என்பது. தலைமைப் பொறியாளர் அந்த இடங்களைப் பார்வையிட்டார்கள். ஆனால் இதுவரையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இதிலே என் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்;** துணைத் தலைவரவர்களே, காலனூர் நீர்த்தேக்கத்தின் வைகைப் படுக்கையில் கட்டுவதற்கு மிகுந்த செலவு பிடிக்கும். அதைவிட குறைந்த செலவில் அந்தப் பகுதியில் மக்கள் தேவையை நிறைவேற்ற வாய்ப்பு இருக்கிறது. இந்த முறையில் இந்த அரசு இந்தத திட்டத்தை மேற்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவரவர்களே, இந்த வைகை தண்ணீர் பெருமளவில் வேஸ்டாகி, கடலில் கலக்கிறது. வைகை அணையைக் கட்டும்போது அரசாங்கத்தில் ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். மேற்குத் தொடர்ச்சி மலையில்தான் நீர் வரத்து உற்பத்தியாகிறது. மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருக்கிற வைகை அணைத் திட்டம் விரிவுபடுத்தப்படும்போது ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் தண்ணீர் விடும் வாய்ப்பு ஏற்பட்டு அதன் மேலும் விவசாயத்திற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் வருஷாவருஷம் தண்ணீர் வீணாகக் கடலில் சென்று கலப்பதைத் தடுத்து, கால்வாய் மூலம் வைகை அணையிலிருந்து தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** துணைத் தலைவரவர்களே, மூலக்கேள்வி இராமநாதபுரம் காலனூரில் வைகை நதியில் மதகு கட்டி வெள்ளத்தை ஒழுங்குபடுத்துவது பற்றியது அதற்கான பதிலைச் சொன்னேன். இருந்தாலும் அந்தத் திட்டத்தின் பயன் எவ்வளவு அதிகமாகப் பயன்படுத்தப்பட முடியுமோ அந்த அளவுக்கு பயன்படுத்துவதுதான் இந்த அரசின் நோக்கமே தவிர வேறல்ல. ஒரு திட்டத்தின் வாயிலாக தண்ணீரை அதிகமாக பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது என்று தெரிந்தால் நில அளவை எல்லாம் பார்க்கப்பட்டு, சரியாக இடம் கிடைக்குமானால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. அ. பிரணவநாதன்: துணைத் தலைவரவர்களே, கடந்த 1979 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் இராமநாதபுரம் மாவட்டத்தில் செல்லுகிற வரலாற்றுச் சிறப்புமிக்க வைகை ஆற்றில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு, 6 ஆண்டுகள் ஆன பின்னாலும் அந்த உடைப்புகள் அடைக்கப்படாமல்; இப்போது செல்லுகிற தண்ணீர் எல்லாம் வீணாகி, கடலில் சென்று கலப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி கேட்டால் விளக்கமாகப் பதில் தரப்படும்.

### இடமிச்சி கால்வாய்த் திட்டம்

173—(*வினா எண் 673)—திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தாலுக்காவில் உள்ள இடமிச்சி கால்வாய்த் திட்டம் மூலம் பாலேஸ்வரம் அணைக்கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டம் எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டம் தற்பொழுது தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

(ஆ) ஆய்வு முடித்த பிறகு மதிப்பீடுகள் தயார் செய்து தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களுக்கு அனுப்பி உள்ளார்கள். பரிசீலனைக்குப் பின் இந்த மதிப்பீடுகளுக்கு அரசின் அனுமதி கிடைத்ததும் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. க. நரசிம்மபல்லவன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கின்றபோது செய்யாற்றிலிருந்து உத்திரமேரூர் ஏரிக்கு வருகின்ற தண்ணீரைப் பொறுத்தவரையில் பாதகம் ஏற்படாத அளவில் அந்த அணையைக் கட்டுவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, ஆய்வு மேற்கொள்ளப்படுகின்ற சூழ்நிலையில் இத்தகைய கோரிக்கைகள் உள்ளடங்கிய அத்தனை நிலைமைகளும் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

### மாநில சட்டக் குழு

*158—(வினா எண் 195)—திரு. மா. சின்னராசு: மற்றும் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில சட்டக் கமிஷன் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, (அ) மாநிலச் சட்ட ஆணையம் அமைப்பது பற்றிய செயற்குறிப்பு (proposal) அரசின் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது.

(ஆ) இச்செயற்குறிப்பின் மீது முடிவு எடுத்தற்குப் பிறகு, விவரங்கள் அவைக்குத் தெரிவிக்கப்படும்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இன்று நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கின்ற சட்டங்கள் அவ்வளவும் நாம் அடிமைப்பட்டுக்கொண்டிருந்த ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் தான். அப்போது ஏற்படுத்தப்பட்ட சட்டங்களைத்தான் அவ்வப்போது அமென்ட்மெண்ட்ஸ் மூலமாக அதை விரிவாக்கிக் கொண்டு வந்திருக்கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டம் ஒரு இருட்டறை என்று சொன்னார்கள். ஆனால் அதைவிட எந்த விளக்காலும் அதனை வெளிச்சத்திற்குக் கொண்டு வரமுடியாத நிலைமைதான் இருந்துகொண்டிருக்கின்றது. எனவே இத்தகைய சட்டங்களை பொதுமக்கள் அதாவது சாதாரண மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய அளவில் நடைமுறைக்கு ஏற்றதாக ஆக்க சட்டத்தின் சரத்துக்களை இன்றைக் தேவைகேற்ற அளவில், அரசின் கொள்கையை நிறைவேற்றய கூடிய அளவில் மாற்றியமைப்பதற்கு இந்தச் சட்டக் கமிஷனுடைய தேவை அவசியமானதாகும். ஆகவே விரைவில் அதனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா? அந்த சட்டக் கமிஷ்னில் நீதித்துறையைச் சார்ந்தவர்கள் இடம் பெறுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே. மைய அரசு இதுபோன்ற ஒரு ஆணையத்தை அமைத்து மைய அரசின் சட்டங்களை மாற்றியமைக்கத் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அதையெட்டித்தான் மாநில அரசும் மாநிலச் சட்டங்களில் தேவைப்படுகின்ற திருத்தத்தைச் செய்யவும். நீக்கிவிடவேண்டிய சட்டங்களை நீக்கிவிடவும் தேவையான சீர்திருத்தங்களைச் செய்யவும், நீதிபரிபாலனத்தின்

வழக்குகள் விரைவாகச் சிக்கனச் செலவிலே முடிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் இதுபோன்ற வழிவகைகளைப் பற்றி எல்லாம் ஆராய்ந்து தக்க பரிந்துரைகளைச் செய்கின்ற வகையில் ஒரு ஆணையத்தை அமைப்பது என்று அரசு முடிவு செய்து இருக்கின்றது. அதற்குத் தக்க நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும். அதிலே நீதிபதிகளும், சட்ட வல்லுநர்களும் இடம் பெறுவார்கள்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே இருக்கினற சட்டங்களைப் பொறுத்த வரையிலே ஒரே பொருள் குறித்த இரண்டு மூன்று சட்டங்கள் இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமை இருப்பதன் காரணத்தால் வழக்குகளைத் தொடருகிற அதிகாரிகள் அவர்கள் நோக்கத்திற்குத் தக்கவாறு எவ்வாறு வேண்டுமானாலும் தண்டனை அளிக்கின்ற வகையில் நிலைமை இருக்கின்றது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால் ஸ்டோன் த்ரோயிங் குற்றத்தைப் பொறுத்தவரையில் ஐ.பி.சி. யிலும் இடம் இருக்கின்றது; ஸ்பெஷல் எனக்ட்மென்ட்டும் இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகள் பல்வேறு சட்டங்களில் இருக்கின்றன. 1957-ஆம் ஆண்டு மாநிலச் சட்டக் கமிஷன் அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தை அன்றையதினம் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லியும் கூட அது அப்படியே காலதாமதப்படுத்தப்பட்டுக் கொண்டுதான் வருகிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பு கூட மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எனவே அதை விரைவில் அமைத்துத்தர அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—00)

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது குறித்து சற்று ஆழமாக அரசு ஆய்ந்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதை போன்ற குறைபாடுகள் இல்லாமல் இல்லை அவற்றை நீக்குவதற்காகத்தான் ஆணையம் ஒன்று அமைத்து மாநிலஅரசின் சட்டங்களையும், மைய சட்டங்களை ஒட்டியிருக்கிற மாநிலச் சட்டங்களையும் மாற்றித் திருத்திக் கொண்டுவருவதற்கும், நீதி நிர்வாகத்தில் சீர்திருத்தம் ஏற்படுத் தவும். எண்ணம் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கயிருக்கிறது.

மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய துணை கண்டம் முழுவதும் வழக்குகள் தங்கியிருக்கின்ற சூழ்நிலையில், பல்வேறு மாநிலங்களிலே யிருந்தும், மையஅரசுக்கு ஜுடிஷியல் ரி-பார்ம்ஸ் கமிஷன்



அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. நமது மாநிலத்தில் அமைக்க இருக்கிற சட்டக் கமிஷன் சட்டங்களை ஆய்வு செய்வதோடு, பைசல் ஆகாமல் வழக்குகள் தேங்கியிருப்பதை தவிர்ப்பதற்கும், நீதி சம்பந்தமான நிர்வாக சீர்திருத்தங்களை செய்வதற்கும், இந்தச் சட்டக் கமிஷனிலேயே வரையரை வைத்து, வரையறுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசைப் பொறுத்த வரைக்கும் உயர்நீதி மன்றம், உச்சநீதி மன்றம் ஆகியவற்றில் நடைமுறைகளில் எப்படி கடைபிடிக்க வேண்டும் என்பதற்கு ஏற்கெனவே நியமிக்கப்பெற்ற ஆணையத்தின் மூலமாக அறிக்கையைப் பெற்று நடவடிக்கை எடுத்து வருகிறது. சப்-ஆர்டினரி ஜுடிஷியலைப் பொறுத்த வரைக்கும், மாநில அரசு அது குறித்து நடவடிக்கை எடுக்க உள்ளது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள் சில நேரங்களில் நீதிபதிகளால் குறைகூறப்படுவதும், சில நேரங்களில் ஸ்டிரக்-டவுன் செய்யப்படுவதுமான நிலைமையைப் பார்க்கிறோம், (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. மா. சின்னராசு: அதைத் தவிர்க்கின்ற வகையில் கொண்டு வருகின்ற சட்டங்களை சட்டமன்றத்திலே நிறைவேற்றக் கொண்டு வருவதற்கு முன்னாலேயே, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு, கன்சல்டேடிவ் கமிட்டி அமைத்து அதில் ஆய்வு செய்து, பிறகு நிறைவேற்றச் செய்வதற்கான வகையில் அரசு வழி வகைக்கான ஆய்வு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட பிறகு அதனுடைய வேலிடிட்டி குறித்து நீதிமன்றம் செல்வதை தடுக்க முடியாது. அப்படி நீதிமன்றத்தில் பலமுறை பலரால் எடுத்துச் சென்றாலும் கூட, 99 சதவீதம் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வ. உ. சிதம்பரனார் உபயோகித்த செக்கு.

159—*(வினா எண் 339)— திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய சிறைச்சாலைக்கருகில் வைக்கப் பட்டுள்ள ''செக்கு'' வ. உ. சிதம்பரனார் கோவைச் சிறையில் பயன்படுத்தியதா?

(ஆ) ஆம் எனில் அதனை நினைவுச் சின்னமாக்கி பாதுகாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, (அ) கோயம்புத்தூர் மத்திய சிறையிலுள்ள செக்கு மறைந்த சுதந்திர போராட்ட வீரர் திரு வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களால் இழுக்கப்பட்டதாகும்.

(ஆ) இந்த செக்கினை கோயம்புத்தூர் மத்திய சிறையில் நினைவுச் சின்னமாக வைத்து, அதற்கென ஒரு கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது விடுதலை வீரர் திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையினுடைய செக்கை நினைவுச் சின்னமாக வைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். நான் அதற்காக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நினைவுச் சின்னம் வைக்கப் படுகிறபோது, எப்படி வெள்ளைக்காரர்களால் கைது செய்யப் பட்டு சாட்டையடி வாங்கி எப்படி கஷ்டப்பட்டு அந்தச் செக்கை இழுத்தாரோ, அதே நிலையில், மக்கள் பழைய வெள்ளைக்காரனுடைய கொடுமையை புரிந்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு அந்த நினைவுச் சின்னத்தை உருவாக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா அத்தோடு இந்த நாட்டின் விடுதலைக்காக மாபெரும் போராட்ட நடத்தி தியாகம் செய்த அந்த விடுதலைப் போராட்ட வீரர், சிதம்பரனாரின் திருவுருவப் படத்தை நமது சட்டமன்றத்திலே திறந்து வைக்கவும் சிந்திப் பார்களா? நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நிலையில் நான் செக்கை நினைவுச் சின்னமாக வைப்பது சம்பந்தமாக அது எங்கு வைக்கப்படும் என்பதற்காக மட்டும்தான் பதில் அளிக்கக்கூடிய நிலையில் இருக்கிறேன். செக்கைப் பொறுத்த வரையில், சிறைச்சாலைக்குள்ளேயே நினைவுச் சின்னமாக வைக்க தக்க நடவடிக்கை எடிக்கப்பட்டு வருகிறது. இரண்டு செக்குகளை சிதம்பரனார் அவர்கள் இழுத்தார்கள். ஒன்று அரசினர் தோட்டத்தில் உள்ள ராஜாஜி மண்டபத்தில் வைக்கப்பட்டிருக் கிறது. இன்னொன்றை கோவைச் சிறையிலே வைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு வ. உ. சிதம்பரனார் வெள்ளையன் ஆட்சியை எதிர்த்துப் போராட்டம் நடத்தியக் காலத்தில் சிறைச்சாலையில் செக்கு இழுத்தார் என்று அதை நினைவுச் சின்னமாக வைக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுக்க இருப்பதைப் பற்றி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கோவை



மத்திய சிறைச்சாலையிலே இருக்கிற அந்த செக்கை அவர் செக்கு இழுத்த இடத்திலேயே நினைவு மண்டபம் கட்டி, சிறைச் சாலைக்கு உள்ளேயே வைக்கப் போகிறீர்களா? அல்லது சிறைச் சாலைக்கு வெளியிலே மண்டபம் கட்டி அதிலே வைக்க அரசு உத்தேசித்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையினுடைய உள்புறமாக தனியாக அதற்காக ஒரு கூடம் அமைத்து அங்கு அதை நினைவுச் சின்னமாக வைக்க வேண்டுமென்ற செயல் குறிப்பு 1973 ஆம் ஆண்டு ஏற்கப்பட்டு அதன் அடிப்படையில் தற்போது 27 ஆயிரத்து 500 ரூபாய் செலவில் நடவடிக்கை எடுக்கப்படயிருக் கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்தச் செக்கு சிறைச்சாலைக்குள்ளேயே வைக்கப்படுமென்று தெரிவித் தார்கள். என்போன்ற சிறைச்சாலைக்கு போவதற்கு வாய்ப் பில்லாதவர்கள் அந்தச் செக்கை பார்க்க இயலாமல் போய் விடும். ஆகவே பொதுமக்கள் எல்லோரும் பார்க்கக்கூடிய வகையில் ஒரு பொதுவான இடத்தில் அந்தச் செக்கை வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே பொதுமக்கள் பார்ப்பதற்கு வசதியாக இன்னுமொரு செக்கு இராசாசி மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

### காட்டுமன்னார் கோயில் முனிசிப் மற்றும் மாஜிஸ்திரேட் நீதி மன்றங்கள்

160—(*வினா எண் 395) திரு சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்கோயிலில் முனிசீப் கோர்ட்டும், மாஜிஸ்திரேட் கோர்ட்டும் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.

திரு சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான காட்டுமன்னார் கோவில் தாலூக்காவாக ஆக்கப்பட்டு பல வருடங்கள் ஆகியும் கூட அங்கேயுள்ள சுமார் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்களுடைய

வழக்குகளை சந்திப்பதற்கு காட்டுமன்னார் கோவிலிலிருந்து 40 கிலோமீட்டர் தூரமுள்ள பரங்கிப் பேட்டைக்கும், சுமார் 25 கிலோமீட்டர் தூரமுள்ள சிதம்பரத்திற்கும் செல்ல வேண்டியுள்ளது. இந்த நிலையை மாற்றி வழக்குகளைச் சந்திப்பதற்கு கோர்ட்டுகளுக்கு செல்ல வேண்டுமானால், காட்டுமன்னார் கோவிலிலேயே சந்திப்பதற்கு தனியாக ஒரு உரிமையியல் மாஜிஸ்திரேட் கோர்ட்டும், குற்றவியல் மாஜிஸ்திரேட் கோர்ட்டும் அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, உரிமையியல் வழக்குகளைப் பொறுத்தவரையில் சிதம்பரத்திலே சிதம்பரம் பகுதிக்கு உட்பட்ட பகுதியில் டிஸ்ட்டிரிக்ட் மூன்சீப் கோர்ட் கவனித்து வருகிறது. குற்றவியல் வழக்குகளைப் பொறுத்தவரையில் சிதம்பரத்திற்கு உட்பட்ட பகுதியில் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் கவனித்து வருகிறது. இதுகாறும் அந்தப் பகுதியில் நீதிமன்றம் வேண்டுமென்ற கோரிக்கை பொதுமக்களிடமிருந்தோ அல்லது அந்தப் பகுதியிலிருந்து வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்தோ கூட வரவில்லை. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்திருக்கிற கருத்தினுடைய அடிப்படையில் அரசு உயர்நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பை பெற்று தக்க நடவடிக்கை அந்த அடிப்படையில் எடுக்கும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவில் ஒரு தாலுக் ஹெட்குவார்ட்டர்ஸ் என்று அறிகிறேன். தாலுக்கா தலைநகரங்களில் எல்லாம் மூன்சீப் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று வரதராஜன் கமிட்டி ரிப்போர்ட் சொல்லியிருப்பதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது ஆனால் இந்த வினாவிற்கு பதில் அளிக்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காட்டுமன்னார்கோவிலில் நீதிமன்றம் அமைப்பதற்கு திட்டம் இல்லையென்று சொன்னார்கள். அப்படியென்றால் வரதராஜன் கமிட்டி ரிப்போர்ட் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவாயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, வரதராஜன் கமிட்டியை பொறுத்தவரையில் வட்டம்தோறும் ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று பரிந்துரையைச் செய்யவில்லை. அதை அண்மையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே மாநில அரசு மேற்கொண்டது. ஒவ்வொரு வட்டத்திலும் Civil and Criminal justice should be rendered under one roof என்ற முறையிலே அரசு முடிவெடுத்து ஆணையிட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலே காட்டுமன்னார்கோவில் ஒரு வட்டமாக இருக்கிற காரணத்தால் ஏற்கனவே இருக்கிற முடிவை ஒட்டி அங்கே கண்டிப்பாக நீதிமன்றம் வரும்.



திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியில் கொலைக் குற்றங்கள் சாட்டப்பட்டாலும், அடிதடி தகராறுகள் ஏற்பட்டாலும் கூட அவர்கள் முன்ஜாமீன் பெறுவதற்கு சுமார் 75 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கடலூருக்கு சென்று தான் உரிய வழிமுறைகளை கடைபிடிக்க வேண்டியிருக்கிறது. இதனால் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்களும், அடிதடி தகராறுகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டவர்களும், உடனடியாக முன்ஜாமீன் பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் சிதம்பரத்தி்லயே அந்த வசதியை ஏற்படுத்தித் தர இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிசிபேட்டரி பெயிலுக்காக அருகிலேயே ஒரு நீதிமன்றம், அதுவும் மாவட்ட நீதிமன்றம் வேண்டுமென்று கோருவது சரியல்ல. அது நடைமுறைக்கும் சாத்தியமல்ல.

## கோவை மத்திய சிறைச்சாலை.

161—(*வினா என் 488—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மத்தியச் சிறைச்சாலையை வேறுஇடத்திற்கு மா்றும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மத்தியச் சிறைச் சாலையை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டத்தைத் தன்ளிப்போட அரசு முடிவு செய்துள்ளது.

(முற்பகல் 10-10)

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சியினுடைய பகுதியிலே சுமார் 3½ மைல் சுற்றளவு கொண்டதாகவும் 240 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகவும், இந்த மத்தியச் சிறைச்சாலை வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இதை மாற்றியமைக்கவேண்டும் என்று நான் மேலவையிலே இருந்த காலத்திலே கழக ஆட்சியிலே இதுபற்றிய ஒரு தீர்மானம் இந்த அரசுக்குச் சொல்லப்பட்டு, அதை மா்ற்றியமைப்பதற்கான ஒரு திட்டம் இருந்தது. ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் சொல்கின்ற பதிலிலிருந்து நான் தெரிந்து கொண்டது, மாற்றவேண்டும் என்ற நோக்கம் இருப்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எப்போது என்பதுதான், சரியான காலக்கெடுவை அவர்கள் சொல்லவில்லை.

ஆனாலும் நகரத்தினுடைய மத்தியப் பகுதியிலே இவ்வளவு பெரிய இடத்தில் உள்ள சிறைச்சாலையை மாற்றுவதுதான் கோவை மாநகரத்தினுடைய எதிர்கால வளர்ச்சி திட்டங்களுக்கு நல்லது. ஆகவே டெல்லியிலே கன்னோட் பிளேஸ் என்று ஒன்று இருப்பதைப்போல, இந்தச் சிறைச்சாலையை மாற்றிவிட்டு. பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் என்று கட்டப்படுமானால் கோடிக்கணக்கான ரூபாய் கோவை மாநகராட்சிக்கு வருமானமாக வரும். அரசும் இந்தக் காரியத்தைச் செய்யலாம். தனியார்களுக்கு காண்ட்ராக்ட் என்று சொல்லி கொடுத்தாலும், புதிய சிறைச்சாலை கட்டுகின்ற அந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதுசம்பந்தமாக ஒரு ஆய்வுக் குழு ஏற்பாடு செய்து, இவ்வளவு பெரிய இடத்தை, 240 ஏக்கருக்கு மேல் உள்ள நிலப்பரப்பை, ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற, அந்தச் சிறைச்சாலையை அப்புறப்படுத்தி, அதை மக்கள் பயன்படுத்தத்தக்க அளவிற்கு ஏற்பாடு செய்ய, விரைந்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? அதற்கான ஏற்பாட்டைச் செய்யுமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு இந்தச் சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றிய பிறகு பெரிதாக இடம் இருக்கிற காரணத்தால் ஆக்கப் பணிகளுக்குப் பயன்படுத்தி, மாநகராட்சியினுடைய வருவாயைப் பெருக்க உகந்ததாக அது அமையும் என்ற நோக்கத்தோடுதான் மாநில அரசு இது குறித்து நடவடிக்கை மேற்கொண்டது. காலப்பட்டி கிராமம். கணபதி, விரபாண்டி, மற்றும் கோவைப் புத்து போன்ற இடங்களையும் பார்த்தது. அங்கு, இடத்தைப் பொறுத்தவரைக்கும், இடம் கிடைக்காத ஒரு நிலையும், போதிய அளவிற்கு இடம் கிடைக்காத நிலையில் இருந்து வருகிறது. இந்தச் சிறைச்சாலையைப் பொறுத்தவரைக்கும், தொழிற்சாலைகளை உள்ளடக்கியதாக உள்ள சிறைச்சாலையாக இருக்கின்ற காரணத்தால், இதை மாற்றி, அங்கு அந்த அமைப்புகளை ஏற்படுத்தி குறைந்தபட்சம் 25 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டு, அரசுக்கு தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. நிதிச் செலவு அதிகமாக இருக்கின்ற காரணத்தால் நிதி ஆதாரம் அதிகமாக இல்லை என்ற காரணத்நாலும், இதை தற்போது எடுத்துக்கொள்ளவேண்டாம் என்று அரசு முடிவு செய்து. அதன்மீது தற்போது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

திரு மு. இராமநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற மார்க்கெட் நிலவரப்படி, இந்த மத்திய சிறைச்சாலை இருக்கின்ற இடத்தினுடைய மதிப்பீடு சுமார் 150 கோடியிலிருந்து 200 கோடி ரூபாய் வரைக்கும், இப்போதே அதை விற்பனை செய்வதாக இருந்தாலும் கூட கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்தை வாங்கக்கூடிய



அளவிற்கு மதிப்பீடு செய்யக்கூடிய அளவிற்கு இந்த இடம் இருக்கிற காரணத்தால், அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல். 25,30 கோடி ரூபாய் மட்டுமல்ல—150 கோடி ரூபாய்க்கு மேல்—அந்த இடத்தை விற்பதன் மூலமாக கிடைக்கும், ஆகவே இதை மறுபரிசீலனை செய்ய முடியுமா, என்று மீண்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அரசு எண்ணியிருந்தால், இந்த முறையில் இந்தப் பிரச்னையை எப்போதோ முடித்து இருக்கலாம். தனியார்கள் அந்த இடத்தைக் கேட்கத்தான் செய்கிறார்கள். அதைப்போல அரசாங்கத்தினுடைய பல நிறுவனங்களுக்கும் அந்த இடம் தேவைப்படுகிற காரணத்தால், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசு அமைப்புக்கள் அந்த இடத்தைத் தங்களுக்கு வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்த நிலையில் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற நிதி ஆதாரம் பெறுகின்ற வாய்ப்பு இல்லாமல் போகிற காரணத்தால், 25 கோடி ரூபாய் பிரத்யேகமாக, மேற்கொண்டு செலவு ஏற்பட வழியிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னேன்.

### திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றக் கட்டிடம்.

162—(*வினா எண் 530)—திரு ஆ. பிரேம்குமார் மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர்வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்ட நீதி மன்றக் கட்டிடங்கள் கட்டும் பணி எப்பொழுது முடிவடையும்?

(ஆ) நீதிமன்றக் கட்டிடங்களுடன் 'வழக்கறிஞர்கள் அறைகள்' (Advocate Chamber) கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, (அ) திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டும் பணி தற்போது முடிவடைந்து இம்மாதம் திறப்பு விழா நடைபெற இருக்கிறது.

(ஆ) இல்லை.

திரு ஆ. பிரேம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய மூன்று மாதங்களுக்கு முன்பாக இந்தக் கேள்வியை நான் எழுப்பினேன். இந்த மூன்று மாத காலத்திற்குள்ளாக அந்தக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, நாளை திறப்பு விழா நடத்தக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேசமயத்தில், வழக்கறிஞர்கள் தங்களுக்கு தனியாக சேம்பர் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். திண்டுக்கல்லிலே வழக்கறிஞர்களாக ஏறக்குறைய 300க்கும் அதிகமான பேர்கள் இருக்கிறார்கள். வழக்கறிஞர்களுக்கு என்று தனியாக ஒரு சேம்பர் மிகவும் அவசியமான ஒன்று. தற்போது வழக்கறிஞர்கள் எல்லாம் திண்டுக்கல்—பழனி செல்லுகின்ற அந்த தேசிய நெடுஞ்சாலையிலே தங்களுடைய அலுவலகங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மாவட்ட நீதிமன்றம் அங்கே வந்திருக்கின்ற காரணத்தால் அதிகமான மக்கள் அந்த இடங்களுக்கு வருகின்ற காரணத்தால், போக்குவரத்து நெரிசலும் அந்தப் பகுதியில் இருக்கின்றது. புரட்சித் தலைவர் அவர்களால், அண்ணா மாவட்டமாக அறிவிக்கப்பட்ட பிறகு, திண்டுக்கல் நகரமானது, அந்த மாவட்டத்தின் தலைநகராக அறிவிக்கப்பட்டு இருக்கிற நிலையில், வழக்கறிஞர்கள் சேம்பரானது, மிகவும் அவசியமானதாக கருதப்படுகிறது. எனவே, அரசு உடனடியாக கவனித்து, ஆவன செய்யுமா? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கு சேம்பர் தேவை என்பது மறுக்க முடியாத ஒன்று. அவர்களிடமிருந்து அரசுக்கு கோரிக்கை வந்து உயர்நீதி மன்றத்திற்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது. 11 லட்ச ரூபாய் செலவில் தனியாக அறைகள் அமைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டு இருக்கிறது. அரசு அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

**மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி மாவட்ட தலைநகரங்களில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றங்களில் 200, 300 பேர் வழக்கு தொழில் நடத்துகின்ற வழக்கறிஞர்கள் இருந்தும் அவர்கள் அமர்ந்து தங்கள் வழக்குகளின் விவரங்களை கட்சிக்காரர்களுக்கு சொல்லுகிற வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் திருநெல்வேலி மாவட்டம் அதேபோல் அமைய இருக்கின்ற இந்த அண்ணா மாவட்டத்தின் தலைநகரான திண்டுக்கல் போன்ற இடங்களில் அட்வகேட் சேம்பர் கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. வழக்கறிஞர்களுக்கு இப்படி சேம்பர் கொடுக்கும்போது அதற்கு உரிய வாடகையை நாம் வாங்கி விடுகிறோம். எனவே நிதி பற்றாக்குறை போன்ற இந்த காரணத்தைத் தவிர்க்க எல்.ஐ.சி. அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் இப்படிப்பட்ட கடன் உதவி பெற்றாவது இந்த அட்வகேட்சேம்பர் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில வழக்கறிஞர்களுடைய சங்கத்தினுடைய் பேரமைப்பு இந்த ஆலோசனையை அரசுக்கு தெரிவித்து இருக்கிறது. அறைகள் கட்டுவதற்கு நிதி நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்க அரசு ஆய்ந்து வருகிறது.



**திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தில் சென்னை உயர்நீதி மன்றத்தினுடைய கிளை ஒன்று ஆரம்பிக்கின்ற நடவடிக்கையும், மதுரை மாநகரத்தில் ஏற்கனவே செயல்பட்டுக்கொண்டு இருக்கிற நீதி மன்றங்களில் உள்ள வழக்கறிஞர்களுக்கு அட்வகேட் சேம்பர் வழக்கறிஞர்களுக்கு அறைகளை கட்டுகின்ற நோக்கமும் அரசிடம உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் உயர்நீதிமன்றத்தினுடைய கிளை அமைப்பது குறித்து மாநில அரசு பல முறை மத்திய அரசுக்கு வற்புறுத்தி ஒருவாறு கொள்கை அளவில் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த வழக்கறிஞர்களுக்கு தனியாக அறைகள் அமைப்பது குறித்து மாநில அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கோ. பெருமாள் பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தலைமை மாவட்ட நீதிமன்றத்தில் கிட்டத்தட்ட 300 வழக்கறிஞர்களுக்கு மேல் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு சேம்பர் கட்டித்தரவேண்டும் என்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதையும் கட்டித்தருவதற்கு அரசு பரிசீலனைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்திலிடமிருந்து பரிந்துரை வந்த பிறகு அரசின் நிதி ஆதாரத்திற்கு உட்பட்டு அதை ஆய்ந்து பரிசீலிக்கும்.

**திரு. சி. சுப்புராயர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான உத்தமபாளையத்தில், உத்தமபாளையம் அண்ணா மாவட்ட நீதி மன்றத்திற்கு உட்பட்டது. எனது தொகுதியைச் சார்ந்தவர்கள் மதுரை மாவட்டம் உசிலம் பட்டி Sub-Divisional Judicial Magistrate Court செல்கிறார்கள். உத்தமபாளையத்தில் ஒரு Sub-Divisional Judicial Magistrate Court வேண்டும் என்ற ஒரு கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. அதை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு, சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசிடம் எந்த செயற்குறிப்பும் பரிசீலனையில் இல்லை. அரசு இது குறித்து எதிர்காலத்தில் ஆராயும்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்தில் இப்போது வழக்குகள் அதிகமாக தேங்கியிருக்கிறது. 1979, 1980 ஆம் ஆண்டின்

வழக்குகளைத் தான் இப்போது எடுத்துக்கொண்டு தீர்க்கப்பட்டு வருகிறது. உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகள் நியமன இடங்கள் காலியாக இருக்கின்றன. அதை தமிழக அரசு பரிசீலித்து உயர்நீதி மன்றத்திற்கு நீதிபதிகளை நியமிக்க தலைமை நீதிமன்றத்திற்கு சிபாரிசு செய்து இருக்கிறதா? அப்படி விரைவில் நீதிபதிகளை நியமித்து வழக்குகளை விரைவில் தீர்க்கப்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து உயர்நீதிமன்றமும், மாநில அரசும் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து இருக்கிறது. மத்திய அரசினுடைய முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் உள்ள நீதிமன்றத்தில் அங்கே வழக்கறிஞர்கள் மரத்தடியில் நின்று கொண்டு இருக்கிற அவல நிலையில் இருக்கிறது. எனவே அங்கே வழக்கறிஞர்களுக்கு சேம்பர் கட்டுகின்ற திட்டம் அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா இல்லை என்றால் கட்டுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை நீதிமன்றத்திற்கும், எக்மோர் நீதிமன்றத்திற்கும் ஃபர்ஸ்ட் லைன் பீச்சில் இருக்கும் நீதிமன்றத்திற்கும் வழக்கறிஞர்களுக்காக அறைகள் கட்டுகின்ற செயல்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். பி. மணவாளன் : பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தின் தலைநகர் வேலூரில், நீதிமன்றக் கட்டிடங்களுக்கென தனியாக கட்டிடம் கட்ட உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### திருச்சி மத்திய சிறையில் ஏற்பட்ட தீ விபத்துச் சம்பவம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. சுப்பராயன், பொன் முத்துராமலிங்கம், அ. பிரணவநாதன், ப. பொன்னுரங்கம், சு. பாலன், அ. இரகுமான்கான், கோ. வீரய்யன், ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து ஆகியோர், ''கடந்த 17–5–85 அன்று இரவு திருச்சி மத்திய சிறையில் தி.மு.க. மறியல் தொண்டர்கள் அடைபட்டிருந்த ஓலைக் கொட்டகை தீப்பிடித்தது குறித்தும், அதைத் தொடர்ந்து நடந்த தடியடிப் பிரயோகத்தில் 70-க்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் படுகாயம் அடைந்துள்ளது குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் சிறைச்சாலையில் 17–5–1985-ம் நாள் இரவு 10 மணி அளவில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து இந்த மன்றத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அடிப்படையில் மன்றத்தினுடைய நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இந்தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்கின்ற தீர்மானத்தை மையமாகக் கொண்டு, சில உண்மை நிலவரங்களை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருச்சி சிறைச்சாலையில் சம்பவம் நடைபெற்ற 17-5-85 ஆம் நாள் ஏறத்தாழ 6,000 திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள், இலங்கைப் பிரச்சினைக்காக கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இருந்தார்கள். சிறையிலே அடைக்கப்பட்ட 6,000 தொண்டர்களும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் ஆவார்கள். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர்கள் 'அவுட் வாரண்டை' (out quaranden) என்கின்ற வெளி காவல் கைதிகள் வைப்புக் கூடத்திலும், எஞ்சியுள்ள 4,000 திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் காவல் கைதிகளாக சிறையின் உள் பகுதியிலேயும் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். 4,000 காவல் கைதிகளை உள்ளே வைப்பதற்கு இடம் இல்லாமல், சிறை நிர்வாகம், 400 மீட்டருக்கு 100 மீட்டர் என்கின்ற அளவில் ஒரு பெரிய கீத்துக் கொட்டகை ஒன்றை அமைத்து அதிலே தங்க வைத்திருக்கிறார்கள். 16–5–85-ம் தேதியன்று தலைவர் டாக்டர் கலைஞரவர்கள் காஞ்சியிலே கைது செய்யப்பட்டதையொட்டி, 16-ம் தேதியன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர்கள் உண்ணா நோன்பு மேற்கொகிறார்கள். அதற்குப் பின்னால்

17–5–85-ம் தேதியன்று தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த 4,000 தொண்டர்களும் உண்ணா நோன்பு மேற்கொள்ளுகிறார்கள். உண்ணா நோன்பை முடித்து விட்டு, பின்னாலே இரவு உணவுக்காகச் செல்கின்ற நேரத்தில் பந்தல் தீப்பிடிக்கவும், மின் விளக்குகள் அணையவும், விசில் ஒலி கேட்கவும் எங்கு பார்த்தாலும் உடை அணிந்த சிறை வார்டர்களும், ஆயுள்தண்டனை பெற்ற 'கான்விக்ட் வார்டர்' என்கின்ற அவர்களும், அப்பாவி நிராயுத பாணிகளாக, தாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக சிறை மேற்கொண்ட தொண்டர்களை இரவில் தாக்க முற்படுகிறார்கள்.

அப்படித் தாக்கிய காரணத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 70-க்கு மேற்பட்ட தொண்டர்கள் படுகாயமடைகிறார்கள். அதேநேரத்தில் வார்டர்களில் ஏழு பேர்களும் கான்விக்ட் வார்டர்களில் ஆறுபேர்களும் காயம் அடைகிறார்கள். இவர்களில் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டவர்கள் ஏறத்தாழ 36 திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் படுகாயம் அடைந்தார்கள் என்பதற்காக அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அதேநேரத்தில் ஒரே ஒரு அரசாங்கக் காவலா, சிறைக் காவலர் மட்டும் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார். இதுதான் நடுநிலைப் பத்திரிகை வாயிலாக திருச்சி சிறைச் சம்பவத்தைப் பொறுத்தமட்டில் நமக்குத் தெரிந்த செய்திகளாகும். 18-5-85-ம் தேதி அன்று ஆர். எல். ஹண்டா, ஐ.ஜி. அவர்கள் அந்த மத்திய சிறைக்குச் சென்று பார்வையிட்டு, அங்கு நடந்தவைகளையெல்லாம் பார்வையிட்டு தொடர்புடைய திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களால் அடையாளம் காட்டப்பட்ட ஐந்து கான்விக்ட் வார்டர்களை தனித்தனியாக செல்களில் அடைத்து வைக்குமாறு ஆணையிட்டு விட்டு திரும்புகிறார்கள். ஆனால் நடந்த சம்பவத்தைப் பொறுத்தமட்டில் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில், அந்த சம்பவத்தின் நிலைமைகளை, அந்தச் சம்பவம் நடந்தபோது சிறைக்கூடம் எப்படி இருந்தது என்பதைச்சித்தரித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியை மட்டும் பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு இங்கே படித்துக் காண்பிக்க விரும்புகிறேன். 19-ம் தேதி இட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் இந்தச் சிறைச் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் "Unprecedented scenes of violence were witnessed in the Central Prison here on Friday night following an incident of arson in the prison campus." அந்தச் சம்பவங்கள் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில் வரலாறு காணாத சம்பவம், ஒரு அராஜகம் நடந்திருக்கிறது, சிறை மதில்களுக்குள்ளே நடந்திருக்கிறது என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை குறிப்பிடுகிறது. மேலும் சொல்கிறது. "The entire prison campus was gripped by tension for about three hours." மூன்று மணி நேரம் ஒரே பதட்ட நிலை அந்தச் சிறையிலிருந்ததாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை கூறுகிறது.



"Thirty six DMK volunteers and one jail warder who sustained serious injuries were admitted to Government hospital. There was a pool of blood at the venue of the incidents and the clothes of many of the DMK volunteers admitted in the Hospital had blood stains. அந்த இடத்தைப் பொறுத்தமட்டில, சம்பவம் நடந்த இடத்தைப் பொறுத்தமட்டில் எங்கும் ரத்தக்காடாக இருந்தது. அதுமட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் உடுத்திக் கொண்டிருந்தஆடைகள் அனைத்தும்ரத்தக்கறை தோய்ந்த ஆடையாக இருந்தது என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை தெளிவாகப்படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. இன்னும் அந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை அதுபற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் "The situation was brought under control after two hours of tension and violence." இரண்டு மணி நேர அமளிக்குப் பிறகுதான் சாதாரண நிலைக்குக் கொண்டு வரப்பட்டது, சகஜ நிலைமை இரண்டு மணி நேரத்திற்குப் பின்னால்தான் சிறையில் நிலவியது என்பதை அந்த இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைபடம்பிடித்துக் காட்டியிருக்கிறது. இந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னால் மருத்துவ மனைக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் அனுமதிக்கப்பட்ட பின்னால் தான் பத்திரிகை செய்தி நமக்குத் தெரிவிக்கிறது. அரசாங்கத்தின் சார்பாக நாலாயிரம் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நான் இந்த மாமன்றத்தின் மூலம் அரசுக்குத் தெரிவிப்பதெல்லாம் ஏற்கனவே சிறையில் பந்தல் போடப்பட்டிருக்கிறது. போடப்பட்ட பந்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாலாயிரம் தொண்டர்கள் அங்கே தங்கியிருக்கிறார்கள். அவர்களே பந்தலுக்கு தீ வைத்திருக்கக்கூடும் என்கிற ஒரு செய்தி. இந்த மாமன்றத்தில் உள்ளவர்களிடம் கட்சி மாச்சரியங்களை மறந்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். யாராவது 400-க்கு 100 மீட்டர் பந்தலை அங்கு தங்கிக்கொண்டிருப்பவர்களே தங்கள் பந்தலுக்கே தீ இட்டுக் கொள்கிற நிகழ்ச்சி எங்கேயாவது நடைபெறுமா என்பதை அருள்கூர்ந்து இந்த மன்றத்தில் உள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று உங்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10–30)

எனவே அந்தப் பந்தலுக்குத் தீயிடப்பட்டு அது எரிந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே எடுத்த எடுப்பிலேயே சிறையைச் சார்ந்த அதிகாரிகள் என்ன செய்திருக்க வேண்டும். உடனடியாக எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீ என்றாலும் யாரோ ஒருவர் வைத்துவிட்டார் ஆனாலும் இன்னார் என்று அறிய முடியவில்லை என்றாலும் தீ எரிந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து கடமையுள்ள அதிகாரிகள் உடனடியாக என்ன செய்திருக்க வேண்டும்? தீயணைப்புப் படைக்குத் தகவல் தெரிவித்து தீயை அணைக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டு இருக்கவேண்டும். ஆனால் அந்த அதிகாரிகள் உடனடியாக விசில் அடித்து கான்விக்ட் வார்டர்களையும் சிறை வார்டர்களையும் அழைத்து அந்தத் தொண்டர்களைத் தாக்கியது எந்த வகையிலே

பொருத்தம்? எந்த வகையிலே நியாயம்? எப்படி அது சிறை அதிகாரிகளுடைய நடவடிக்கையை நியாயப்படுத்தும் என்பதைக் கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல; எதிர்த்துத் தாக்கியதாக இன்னொரு செய்தி. சிறை வாயிலுக்கு உள்ளே வருகின்ற நேரத்திலேயே காவல் கைதிகளாக இருந்தாலும், தண்டனை பெற்ற கைதிகளாக இருந்தாலும் என்ன என்ன பொருட்களை வைத்திருக்கிறார்களோ அந்தப் பொருட்களையெல்லாம் சிறை அதிகாரிகள் அதிலும் குறிப்பாக, இரும்புப் பொருளாக எது இருந்தாலும் சாதாரண பிளேடு உள்ளிட்ட ஆயுதங்களையும், மற்றப் பொருட்களையும் வாங்கிக் கொண்டுதான் உள்ளே விடுகிறார்கள் சிறைத் தொடர்பான சட்டமும் அப்படித்தான் சொல்கிறது. எல்லாவற்றையும் வாங்கி வைத்துவிட்டு உடுத்தியிருக்கிற உடையோடு உள்ளே சென்ற தொண்டர்கள் சிறை வார்டர்களையும் கான்விக்ட் வார்டர்களையும் தாக்கினார்கள் என்று சொல்வது எப்படி பொருத்தமான ஆதாரங்களோடு கூடிய வாதமாக இருக்கும் என்பதை இந்த மன்றத்திலே உள்ளவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், நிராயுதபாணிகளாகச் சென்ற அந்தத் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களை கான்விக்ட் வார்டர்களும் சிறை வார்டர்களும் சில அரசியல் நோக்கம் கருதி தாக்கியிருக்க முடியும் என்று நான் சந்தேகப்படுகிறேன். அச்சப்படுகிறேன். பொதுமககள் மத்தியிலும் அப்படிப்பட்ட சந்தேகம் இருக்கிறது. அரசியல் நோக்கம் கருதி தாக்கியிருக்கலாம் என்று பொதுமக்கள் பலரும் அஞ்சுகிறார்கள் அச்சப்படுகிறார்கள். இதை எதற்காகச் செய்திருப்பார்கள் என்று சந்தேகப்படுகிறேன் என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திக் கொண்டிருக்கிற தொடர் போராட்டம் மீண்டும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலே இப்படித் தொடர்ந்து நடைபெற்றால் பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் திரண்டுவிடுவார்கள், சிறை கொள்ளாத அளவுக்கு சிறைகள் நிரப்பப்படுன்ற அளவுக்கு வருவார்கள் என்று கருதிய காரணத்தினாலே அதைத் தடுக்க வேண்டுமென்ற முறையிலே ஒரு பேனிக் சிட்சுவேஷனை (Parlc Sitration) ஒரு பதட்ட நிலையை உருவாக்க வேண்டுமென்று இது நடந்து இருக்கிறதோ என்றுநான் அச்சப்படுகிறேன். என்னுடைய அச்சத்தைப் போக்குவதிலே அரசு ஈடுபடவேண்டுமென்பதற்காக நான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் நிராயுதபாணிகளாக இருந்தவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள், ஆனால் இவர்கள் அவர்களைத் தாக்கினார்கள் என்று சொல்கிற வாதம் பொருத்தமாக அமையாது. நான் இன்னொரு ஆதாரத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். 36 திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே ஒரே ஒரு காயம் பெற்ற சிறைக் காவலர் மட்டுந்தான் மருத்துவமனையிலே



அனுமதிக்கப்பட்டார்; 36 திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்குக் காயம், ஆனால் அதே நேரத்திலே காவலர் பக்கம் ஒருவருக்குத்தான் காயம் என்றால் யார் யாரைத் தாக்கியிருக்கமுடியும் என்பதையும் யார் அதிகமாகக் காயம் அடைந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த மன்றத்திலே உள்ளவர்கள் சாதாரணமாகவே உணர்ந்து கொள்ளமுடியும். திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் இன்றைக்குத் திட்டமிட்டுத் தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் அந்த திட்டமிட்ட தாக்குதலுக்குப் பின்னாலே மனிதாபிமான உணர்வோடு ஆட்சியிலே இருக்கிறவர்கள் நடந்திருக்க வேண்டுமென்பதை நான் எதிர்பார்த்தேன் என்னுடைய எதிர்பார்ப்பு நியாயத்தின்பாற்பட்டது. சிறையிலே ரத்த வெள்ளிக்கிழமை, தமிழகத்திலே ஜாலியன்வாலாபாக் என்றும் பத்திரிகைகள் வர்ணிக்கத்தக்க அளவுக்கு இருக்கிறபோது தொடர்புடைய சிறை அதிகாரிகள் தான் சென்றிருக்கிறார்கள். உண்மையிலேயே மனிதாபிமானத்தோடு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று அரசு எண்ணியிருக்குமேயானால் தொடர்புடைய அமைச்சர் சிறைக்குச் சென்றிருக்க வேண்டும். என்னுடைய எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில்தான் முடிந்தது. சிறைத் தொடர்புடைய அமைச்சர்கள் சென்று விவரங்களை நேரிலே கண்டறிந்து நாட்டிற்குச் சொல்லியிருப்பார்களானால் நாட்டு மக்களுக்கு சந்தேகம் விரைவிலே வெகுவாக நீங்கியிருக்கும்.

அடுத்து, 4,000 திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மீது இன்றைக்கு வழக்குத் தொடாந்திருக்கிறார்கள் என்றால், இதுவரையிலேயும் எந்த வரலாற்றிலேயும் இப்படி நடந்திருக்காது என்று நான் கருதுகிறேன். சிறையிலே உளள 4,000 தொண்டர்கள் சிறையிலே உள்ளவர்களைத் தாக்கினார்கள் என்ற வேடிக்கையான, புதுமையான இதுவரையில் வரலாறு சந்தித்திருக்க முடியாத விநோதமான வழக்கைத் தமிழக அரசு திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் மீது தொடுத்திருக்கிறது. இப்படி வழக்கைத் தொடுத்திருக்கிறார்களே, இதற்கு யார் சாட்சி சொல்லுவார்கள்? சிறையிலே உள்ள அரசு அதிகாரிகள், சிறையிலே உள்ள காவலர்கள், கான்விக்ட் வார்டர்கள் ஆகிய இவர்களைச் சாட்சிகளாகக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மீது இன்றைக்கு வழக்குத் தொடர்ந்திருக்கிறது என்றால், இதைவிட வேடிக்கையான வழக்கு, இதைவிடக் கேவலமான நடவடிக்கை தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் நிச்சயமாக இருக்க முடியாது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சிகளினாலே நாட்டிலே ஒரு பதட்டமான சூழ்நிலை நிலவியிருப்பதால் சபையின் அனைத்து நடவடிக்கைகளையும் ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு இந்த நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் தொடர்புடைய அதிகாரிகளை வேலை நீக்கம் செய்து, பார

பட்சம் அற்ற விசாரணை நடைபெற நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று விவாதிப்பதற்காகவும் இந்த மாமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன் நன்றி, வணக்கம்.

*திரு. கோ. வீரய்யன் :—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மே மாதம் 17–ஆம் தேதி இரவு திருச்சி மத்திய சிறைச்சாலையிலே நடந்த சம்பவங்கள் பற்றி இந்த அவையை ஒத்தி வைத்து அதன் முக்கியத்துவத்தைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காகக் கொடுத்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தின்மீது இந்த அவையினுடைய கவனத்திற்கும் இந்த அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வருகின்ற முறையில் ஒரு சில விவரங்களை இந்த அவையின் முன் வைக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழர்கள் பிரச்னை மீது அவர்களுடைய நிலையில் ஒரு மறியல் போராட்டத்தை நடத்தக் கூடிய நேரத்தில் அந்த மறியலை எப்படி அரசு சந்திப்பது என்று தீர்மானித்து அந்த மறியலிலே ஈடுபட்டவர்களைக் கைது செய்து சிறையில் வைத்துத் தண்டிப்பது என்று அரசு முடிவெடுத்திருக்கின்ற நிலையில் அவர்களைச் சிறையிலே வைக்கும்பொழுது சிறையில் உரிய ஏற்பாடுகளைக்கூடச் செய்யாமல் இருந்திருக்கிறார்கள். குறிப்பாகத் தமிழ்நாட்டில் அனைத்துச் சிறைகளிலும், எட்டு மத்திய சிறைச்சாலைகளை எடுத்துக் கொண்டால் ஏறத்தாழ 12,000 பேர்களை வைப்பதற்கு இடமுள்ள அந்தச் சிறைச்சாலைகளில் அதற்கு முன்னாலே இருக்கின்ற கைதிகளைத் தவிர, இந்த மறியலிலே ஈடுபட்டவர்களை ஏறத்தாழ 25,000 பேர்களையும் சேர்த்து அதிலே வைக்கும்பொழுது குறிப்பாகத் திருச்சி மத்திய சிறைச்சாலையின் கொள்ளளவு இரண்டாயிரத்துச் சொச்சம் பேர்களை வைக்கக்கூடிய அந்த மத்திய சிறைச்சாலையில், இந்த மறியலில் ஈடுபட்ட ஆறாயிரத்திற்கும் மேற்பட்டவர்களையும் சேர்த்து 17 ஆம் தேதியன்று எட்டாயிரத்திற்கும் அதிகமான பேர்கள் அந்தச் சிறையிலே இருந்திருக்கிறார்கள். அப்படியிருந்தவர்களுக்கு, சிறைச்சட்டம் அனுமதிக்கக் கூடிய அளவிற்குரிய இந்த வசதிகளைச் செய்யக் கூட அரசு உரிய கவனமோ, முயற்சியோ எடுக்கவில்லை.

குறிப்பாகப் பார்த்தால், அந்தச் சிறையின் கண்காணிப்பாளரே ஆறு மாத காலமாக இந்தச் சிறைக்கு இல்லாமல், இந்தச் சம்பவம் நடந்தபிறகு இந்தச் சிறைக்குக் கண்காணிப்பாளர் வேறு சிறையிலேயிருந்து மாற்றப்பட்டிருக்கிறார். அந்தச் சிறையின் அதிகாரி இல்லாத நேரத்தில் எட்டாயிரம் பேர்களைக் கொண்டு போய் வைத்து எப்படிச் சமாளிப்பது என்பதைப்பற்றி எந்தஏற்பாடும் இல்லாமல் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள். சிறையில் எல்லாவிதமான வசதிகளும் இருக்க



வேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடியவர்கள் அல்ல நாங்கள் அனைத்துச் சிறையிலும் உள்ள கொடுமைகளை நேரடியாகப் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள் நாங்கள். சிறையில் சங்கடங்கள் இருந்தன என்பதற்காகச் சொல்லவில்லை. இந்த எட்டாயிரம் பேர்களுக்குப் பந்தல் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மே மாதம் 7 ஆம் தேதி தஞ்சை மாவட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் அன்றிரவு திருச்சி சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள் 7 ஆம் தேதியிலிருந்து 17 ஆம் தேதி வரையில் பத்து தினங்கள் எந்தச் சங்கடங்கள் இருந்தாலும், அந்தச் சிறையிலே ஆறாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அந்தச் சங்கடங்களைப் பொறுத்துக்கொண்டு இருந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தரப்பிலே தவறுகள் நடந்திருக்கின்றன என்று சொல்வதற்குக் காரணம் இல்லை என்று கூறுவதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

(முற்பகல் 10–40)

இந்தச் சம்பவம் நடந்ததற்குப் பிறகு நானும் எங்களுடைய கட்சியின் சார்பிலே, கட்சியின் தலைவர் தோழர் திரு. உமாநாத் அவர்களும் அந்தத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு மருத்துவமனையிலே இருந்தவர்களை, சிறையிலே இருந்தவர்களை 20 ஆம் தேதி சென்று பார்த்தோம். 17 ஆம் தேதி இரவு இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்தது. தாக்குதலுக்கு உள்ளான 36 பேர்கள் திருச்சி மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள், 17 ஆம் தேதி இரவு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 20 ஆம்தேதி வரையிலே மருத்துவமனையிலே இருக்கிறார்கள். 17 ஆம்தேதி தாக்கப்பட்டு மண்டை உடைந்து, கைஎலும்பு உடைந்து இரத்தம் வெளியேறி அன்று கட்டியிருந்த துணியோடு, மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டவர்கள், அப்படியே 4 நாட்களும் அந்த மருத்துவமனையிலே வைக்கப்பட்டிருந்தார்கள் என்று சொன்னால் எந்த அளவுக்கு அங்கு கொடுமை இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்:

அந்தப் பந்தலில் தீ எப்படி வைக்கப்பட்டது, யாரால் வைக்கப்பட்டது என்ற சர்ச்சைக்குள்ளே நான் போகவில்லை. ஏனென்றால் அது யார் தரப்பிலே செய்யப்பட்டிருந்தாலும் முழுமையான ஒரு நீதி விசாரணையின் மூலமாக, இந்த அரசுக்கு இந்த அவைக்கு தமிழ்நாட்டு மக்களுக்கு தெரிவிக்கக்கூடிய முறையிலே முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சிறையிலே அடைக்கும்போது உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இருப்பதற்கு இடமும், குடிப்பதற்குத் தண்ணீரும், கழிப்பிட வசதியும் கூட இல்லாத அளவுக்கு 10 நாட்கள் அவதிப்பட்டிருந்துங்கூட, அவர்கள் அமைதியாக இருந்த நேரத்தில், 17 ஆம் தேதி இரவு பந்தலில் தீ பிடிக்க, திடீரென்று மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு, சிறை விசில் ஊதப்பட்டு, தாக்குதல் நடத்தப்பட்டு, சைக்கிள் செயின்களாலும்

இரும்புக் கம்பிகளாலும், விறகுக் கட்டைகளாலும் அடிக்கப்பட்டு எலும்புகள் முறியப்பட்டு, பலர், குறிப்பாக, கலையழகன், ஆர். பி. சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. இளங்கோவன் ஆகியோர் பெரும் அளவுக்குக் காயப்படுத்தப்பட்டு மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருந்தார்கள். அடிப்படை வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படாதது மட்டுமல்ல, இதைப் பற்றி கவனிக்காதது மட்டுமல்ல, அதைப்பற்றி கவலைப்படாதது மட்டுமல்ல, சிறை அதிகாரிகள் கூட இல்லாமல், கவனிப்பதற்கு எந்த ஏற்பாடுகளும் இல்லாமல் அடைக்கப்பட்டு கொடுமைகள் செய்யப்பட்டுள்ளன,

இதுவரைக்கும் எத்தனையோ சிறைக்கொடுமைகள் பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம். சேலம் சிறையிலும், மற்ற சிறைகளிலும் எவ்வளவோ நடைபெற்றன. அவற்றிற்கெல்லாம் உச்சகட்டமாக, 8,000 பேர்கள் இருக்கக்கூடிய இடத்தில் அவர்கள் தங்கியிருக்கக்கூடிய பந்தலுக்கு நெருப்பு வைக்கப்பட்டு, இரத்தக் களமாக்கப்பட்ட காட்சி இதுவரைக்கும் தமிழக சிறை வரலாற்றிலே இருந்தாகச் சொல்ல முடியாது.

அப்படி நடந்திருக்கக் கூடிய கொடுமைகள் மட்டுமல்ல, 4,000 பேர்கள் மீது திருப்பி நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இது எந்த வகையிலும் நியாயம் அல்ல சரியானது அல்ல மிருகத்தனமான மனிதர்கள் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்குச் சம்பவங்கள் நடைபெற்றன. எனவே வழக்குகள் வாபஸ் பெற வேண்டுமென்பதற்கும் நீதி விசாரணை நடத்தப்பட்டு உண்மை தமிழகத்திற்கும் இந்த அவைக்கும் தெரிய வேண்டுமென்பதற்கும் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மத்திய சிறைக்குள்ளே அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் 4541 தி.மு.க கிளர்ச்சியாளர்கள் வைக்கப்பட்டிருந்தனர். 17-5-1985 அன்று சுமார் 7.00 மணி அளவில் கைதி எண், 3402 திரு. ரமேஷ்குமார் சிறைக் கூடத்திலுள்ள கிணற்றில் பொருத்தியிருந்த டீசல் இன்ஜினிலிருந்து டீசலைத் திருடி கோபுரத்திற்கு முன்னால் தன் ஆடையின் மேல் ஊற்றிக் கொண்டு தீயிட்டுக் கொள்ள முயற்சி செய்தார். இதைப் பற்றிக் கேள்விப்பட்ட சிறை அலுவலர் திரு என். ராமன் உடனே அவ்விடத்திற்கு விரைந்து சென்று அவரைக் காப்பாற்றி சிறை மருத்துவ மனையிலேயே முதலுதவி அளிக்க ஏற்பாடு செய்த பிறகு அவரை திருச்சி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.



மேலே கூறப்பட்ட நிகழ்ச்சி நடந்த இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு கிளர்ச்சியாளர்களுக்காக போடப்பட்டிருந்த பந்தல் திடீரென்று தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. இதைக் கண்ணுற்ற சிறை அதிகாரிகளும், காவலர்களும் அந்த இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைத்தனர். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் இவர்கள்மீது கல்லெறிந்து தீயை அணைக்க விடாமல் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதனால் ஒரு அசிஸ்டன்ட் ஜெயிலர், ஆறு சிறைக் காவலர்கள், எட்டு (கைதி) காவலர்கள் காயமடைந்தனர். எனவே, நிலைமையை கட்டுக்குள் கொண்டு வருவதற்காக இலேசாக பலப்பிரயோகம் செய்யப்பட்டு கிளர்ச்சியாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டஇடத்திற்கு அனுப்பப்பட்டனர். பின்பு தீ மேலும் பல இடங்களுக்குப் பரவாமல் அணைக்கப்பட்டது. இந்தத் தீ வைப்பு சம்பவத்தால் அரசுக்கு 70,000 ரூபாய்இழப்பு ஏற்பட்டிருக்கிறது. மேலும் இந்த சம்பவத்தில் பங்கு கொண்ட ஐந்து கைதி காவலர்கள் கிளைச் சிறைக்கு தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் தற்சமயம் திருச்சி மத்தியச் சிறையில் அமைதி நிலவி வருவதாகவும் கூறியுள்ளார். சிறைத் துறைத் தலைவர் தான் சம்பந்தப்பட்ட மருத்துவர்களை நேரில் சென்று பேசி சம்பவத்தில் காயமுற்றவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை உறுதி செய்து கொண்டார். காயம் அடைந்தவர்களில் எவரும் ஆபத்தான நிலையில் இல்லை.

சிறைத் துறைத் தலைவர் மேற்கூறியபடி ஆணையிட்டதற்கிணங்க விரிவான விசாரணை திரு. ஆர்.ஏ.யு. அட்கின்ஸன் அவர்களால் நடத்தப்பட்டது. மேற்படி விசாரணையில் சிறை அலுவலர்களும் சிறை மருத்துவர்களும் நெருக்கடியான நேரத்தில்கூட மிகவும் கடமையுணர்வுடன் பணியாற்றியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. அந்த சம்பவத்தில் 6 சிறைக் காவலர்களும், 8 சிறைக் கைதி காவலர்களும், 96 கிளர்ச்சியாளர்களும் காயம் அடைந்துள்ளனர் என விசாரணை அலுவலர் அறிவித்துள்ளார். ஒரு சிறைக் காவலரும், 36 கிளர்ச்சியாளர்களும் மருத்துவ சிகிச்சைக்காக தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். அதில் 21 கிளர்ச்சியாளர்கள் 19-5-1985 அன்றே மருத்துவ மனையிலிருந்து சிகிச்சை முடிந்து வெளியே அனுப்பி வைக்கப்பட்டனர். மற்றவர்கள் 20-5-1985 அன்று வெளியே அனுப்பி வைக்கப்பட்டனர்.

அந்த கலவரமான சூழ்நிலையில் குறைந்தபட்ச பலப்பிரயோகம்கூட செய்திருக்காவிடில் கல் எறிந்து கிளர்ச்சி செய்த கிளர்ச்சியாளர்களை அவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடத்திற்கு தள்ளிச் சென்றிருக்கமுடியாது. சேதமும் விபத்தும் அதிகமாயிருக்கும். எனவே சிறை அலுவலர்கள் குறைந்தபட்ச பலப்பிரயோகம் செய்தது நியாயமானது என்றும் விசாரணையில் தெரிய வருகிறது.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். தீயை அணைக்கவிடாமல் சிறை அதிகாரிகள் தடுத்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் உண்மை நிலைமை அதுவல்ல. தீயை அணைக்க அதிகாரிகள் சென்றபோது சிறையில் இருந்த கிளர்ச்சியாளர்கள் தடுத்தார்கள் என்று அரசுக்கு தகவல் வந்திருக்கிறது. அரசியல் நோக்கோடு நிகழ்ச்சி எதுவும் நடக்கவில்லை என்பதற்காக இந்த விவரத்தைத் தெரிவிக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலிருந்து கிட்டத்தட்ட 4,435 கிளர்ச்சியாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். திருச்சி மாவட்டத்திலிருந்து 1,720 பேர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அதிலே தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்தவர்கள் 2,407 பேர்களுக்கும், திருச்சி மாவட்டத்திலிருந்து வந்தவர்கள் 1,531 பேர்களுக்கும் சிறையில் 'ஏ கிளாஸ்' கொடுக்கப்பட்டது. நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க அது கொடுக்கப்படுகிறது. உணவைப் பொறுத்தவரையில் ''ஏ கிளாஸ்'' கொடுக்கப்பட்ட நபர் ஒருவருக்கு ரூ. 10.40 காஸ்ட் ஆகிறது. நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு நீதிமன்றமும் ஒருசில நடைமுறைகளைச் சொல்லி, சிலருக்கு ஏ—கிளாஸ், சிலருக்கு பி—கிளாஸ் என்று கொடுக்கப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் தி.மு.க. கிளர்ச்சியாளர்களுக்கு சிலருக்கு ஏ-கிளாசும், சிலருக்கு பி-கிளாசும் சிறையில் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதிலே சில பிரச்சனைகள் ஏற்பட்டிருக்கலாம். ஏனென்றால் திடீரென்று 6,000 கிளர்ச்சியாளர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்வதில் சில சிரமங்கள் ஏற்பட்டிருக்கும். அதைச் சமாளிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. துரித நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் சில குறைபாடுகள் இருந்திருக்கலாம்; எல்லா வசதிகளையும் உடனடியாகச் செய்து கொடுக்க முடியாமல் இருந்திருக்கலாம். ஆனால் இந்த நிகழ்ச்சிக்குக் காரணம் அதுவல்ல.

மேலும் முக்கியமான ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்கும் அவையின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்; அது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அதிகாரிகளே திட்டமிட்டு, அரசியல் நோக்கோடு பந்தலுக்கு தீ வைத்ததன் காரணமாக பலர் காயம் அடைந்திருப்பார்கள் என்ற ஒரு ஐயம் இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. இது தவறான ஐயம். 7–5–1985 அன்று தஞ்சை மாவட்டத்திலிருந்து ஒரு 'பாச்' கிளர்ச்சியாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். கலைஞர் அவர்களை 16 ஆம்தேதி கைதுசெய்தால் நாங்கள் தீ குளிப்போம், சிறைப் பந்தலுக்கு தீ வைப்போம் என்று அந்த கிளர்ச்சியாளர்கள் சொல்லி, அப்போது அங்கே பொறுப்பாளராக இருந்த திரு. துரைசாமி என்பவர்—அவர்தான் சூப்பரின்டென்ட் இன்சார்ஜ்—டிவிஷினல் ஃபயர் ஆபீசருக்கு கடிதம் எழுதியிருக்கிறார் 15-5-1985 அன்று. இதை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.



அதனால் அப்படிச் சொன்னவர்கள் தீ வைத்தார்கள் என்று நான் சொல்லவில்லை. கலைஞரை கைது செய்தால் தீ வைப்போம், நாங்கள் தீயிட்டு தற்கொலை செய்துகொள்வோம் என்று சொன்னதால் அந்த அச்சத்தின் காரணமாக தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் டிவிஷனல் ஃபயர் ஆபீசருக்கு இதை 'கோட்' பண்ணி எழுதியிருக்கிறார்கள் 15–5-1985 அன்று.

(முற்பகல் 10–50)

17 ஆம் தேதி இந்த நிகழ்ச்சி நடந்திருக்கின்றது. எனவே சிறையிலே உள்ள தஞ்சையிலிருந்து வந்த கிளர்ச்சியாளர்கள் கூறிய கூற்றுக்கேற்ப உடனடியாக அரசு டிவிஷனல் ஃபையர் ஆபீசருக்குத் தெரிவித்திருக்கின்றது. அதாவது ஒரு எச்சரிக்கை நடவடிக்கையாக டிவிஷனல் ஃபையர் ஆபீசருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முன்னேற்பாடான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தீ வைப்பதாக அச்சுறுத்தல் வந்தவுடன் தற்காப்பு நடவடிக்கையாக முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் என்ன காரணத்தால் தீ வைக்கப்பட்டது என்பதைப் பற்றிய விசாரணை இன்னும் நடந்து கொண்டு வருகின்றது. அந்த விசாரணைக்குப் பின்னர்தான் உண்மைக் காரணம் என்ன என்பதை அறியமுடியும். எனவே உள்நோக்கத்தால் எதுவும் செய்யப்படவில்லை என்ற வகையில் நடந்த நிலைமைகளை நான் தெரிவித்து இருக்கிறேன். எனவே இதுகுறித்து விவாதிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: மானியக் கோரிக்கைகள் எண் 43 பல்வகை, எண் 58 பல்வகை குறித்த மூலதனச் செலவு, எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் ஆகியவை ஏற்கெனவே அறிவித்தபடி பேரவையின் விவாதத்திற்கும், வாக்கெடுப்பிற்கும் 11-6-1985 ஆம் தேதியன்று எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதற்குப் பதிலாக, 12-7-1985 ஆம் தேதியன்று எடுத்துக்கொள்ளப்பெறும்.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) மின்கட்டண உயர்வு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழகமெங்கும் 1985 ஜூன் 1 ஆம் நாள் முதல் மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதால் மக்களிடம் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

தமிழகத்தில் அனல் மற்றும் புனல் மின்நிலையங்களிலிருந்து கிடைக்கப்பெறும் மின்சாரம் மற்றும் விலைக்கு வாங்கப்படும் மின்சாரம் இவற்றை கலந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி வட மாநிலங்களிலிருந்து ரயில் மற்றும் கப்பல் மூலமாக வர வேண்டி உள்ளது. கடந்த பல ஆண்டுகளாக நிலக்கரி மற்றும் எரி எண்ணெய் விலையும் கப்பல் மற்றும் ரெயில்வே கட்டணமும் பலமடங்கு உயர்வு அடைந்துள்ளது. இதனால் அனல் மின்நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் விலை கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது தற்போது அனல் மின்நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின்விலை யூனிட் ஒன்றுக்கு 55.44பைசாவாக உள்ளது. அதேசமயம் புனல் மின்நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் விலை யூனிட் ஒன்றுக்கு 7.80 பைசாவாக உள்ளது. இதுமட்டுமல்லாமல் மின்வாரியத்தால் விலைக்கு வாங்கப்படும் மின்சாரத்தின் விலையும் உயர்வடைந்துள்ளது. மேற்கூறிய காரணங்களால் மின்வாரியத்தால் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 160 கோடிக்கு மேலாக கூடுதலாக செலவினம் செய்ய வேண்டியுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளின் காரணமாக 1981–82 முதல் மின்வாரியத்திற்கு கீழ்க்கண்டவாறு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.



இழப்பு.
(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| 1981–82 | 176.37 |
| 1982–83 | 210.95 |
| 1983–84 | 233.03 |
| 1984–85 | 201.74 |

3. தொடர்ச்சியாக மின்வாரியத்திற்கு ஏற்பட்டுவரும் பெரும் இழப்பை ஈடு செய்ய மின்கட்டண உயர்வு செய்வது தடுக்க இயலாததாகும். மின்வாரிய கூட்டமைப்பில் அனல் மற்றும் புனல் மின்நிலையங்களிலிருந்து கிடைக்கப்பெறும் மின்சாரம் மற்றும் விலைக்கு வாங்கப்படும் மின்சாரம் குறைவழுத்த பயனீட்டாளர்களுக்கு விநியோகம் செய்யப்படும்போது, அம்மின்சாரத்தின் விநியோக விலை யூனிட ஒன்றுக்கு 80.50 பைசாவாக உள்ளது. எனவே குறைவழுத்த தொழிற் சாலைகளுக்கு விநியோகம் செய்யப்படும் மின்சாரம் மூலம் எந்தவித லாபமும் கிடைப்பதில்லை. குறைவழுத்தத்தின் கீழ் வணிக ரீதியில் பயனடையும் மின் பயனீட்டாளர்கள் தாங்கள் தாங்கிக் கொள்ளும் அளவுக்குத் தக்கதாகவே மின்கட்டணம் விதிக்கவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலேயே மின் கட்டணம் விதிக்கப்படுகிறது. தமிழக மக்களின் பொது நலனிலும் முன்னேற்றத்திலும் பெரிதும் அக்கறை கொண்டுள்ள அரசு 1-6-85 முதல் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரம் உயரழுத்தமாயினும் குறைவழுத்தமாயினும் மின் கட்டணஉயர்வு அளிக்கவில்லை. வீட்டு உபயோக மின்சாரத்திற்கு மின்கட்டண உயர்வு அளிக்கவில்லை. அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களால் நடத்தப்படும் மாணவ விடுதிகள், அநாதை இல்லங்கள், பொதுவழிபாடு செய்யுமிடங்கள், குடிநீர் வழங்குதல், பொதுவிளக்குகள் முதலியவற்றிற்கு மின்கட்டண உயர்வு அளிக்க வில்லை. விவசாயத்தையே நம்பி வாழும் சிறுவிவசாயிகளுக்கும், கிராம பஞ்சாயத்துக்களில் உள்ள குடிசைகளுக்கும் மின்சாரம் தொடர்ந்து இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. ஏனைய மின் பயனீட்டாளர்களுக்கு மட்டுமே மின்கட்டண உயர்வு அளிக்கப் பட்டுள்ளது.

4. மேற்கூறிய சூழ்நிலைகளை உற்று நோக்குங்கால் தற்போது விதிக்கப்பட்டுள்ள மின்கட்டணம் எந்தவிதத்திலும் எந்தத்தரப் பினரையும் பாதிக்கும் அளவில் உயர்வு செய்யப்படவில்லை என்பது தெளிவாகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் எரி எண்ணெய் மற்றும் நிலக்கரி ஆகியவற்றின் விலை உயர்வு காரணமாகவும், கப்பல், இரயில் போன்றவற்றின் கட்டணம் உயர்த்தப்பட்டு இருப்பதன் காரணமாகவும் மின் வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காகத் தான் இந்த கட்டண உயர்வு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்

பட்டிருக்கின்றது. 1983 ஆம் ஆண்டு மே மாதத்தில் 53 கோடி ரூபாயும், 1984 சூன் மாதத்தில் 64 கோடி ரூபாயும், 1985 சூன் மாதத்தில் 77 கோடி ரூபாயும், இப்படியே ஒட்டுமொத்தமாக 198 கோடி ரூபாய் அளவுக்கு மின்கட்டண உயர்வு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது.

மேலும் இதன்காரணத்தால் கோவை, பொள்ளாச்சி, மதுரை, கரூர் போன்ற சிறு தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கும் இடங்களில் 51.5 காசு என்பதிலிருந்து 68 காசாக கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதால், சிறு தொழில் ஸ்தாபனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விலை உயர்வு ஏற்படுவதன் காரணத்தால் விலைவாசி உயர்வு ஏற்பட்டு அதன்காரணத்தால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருப்பதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு மத்திய அரசை அணுகி இரயில் கட்டணத்தைப் பொறுத்தவரையில் ஏதேனும் கன்சஷன் அல்லது சப்சிடி வாங்கி, பொதுமக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் சுமை ஏற்படாமல் இருக்கத் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆண்டுகளில் எந்தெந்த அளவுக்கு உயர்த்தப் பட்டது என்ற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அத்தோடு முந்தைய ஆண்டுகளில் மின் வாரியத்திற் எந்தெந்த அளவுக்கு இழப்பு எற்பட்டிருக்கிறது என்பதையும் சேர்த்துப் பார்த்தால் நிலைமை தெரியும். 200 கோடி, 233 கோடி, 200 கோடி என்றெல்லாம் தொடர்ந்து நட்டங்கள் வந்தாலும் நாம் உயர்த்தி வருவது 53 கோடி, 64 கோடி, 77 கோடி ரூபாய் என்ற அளவுக்குத்தான் இருக்கின்றது. இதன்மூலம் நமக்கு எந்த அளவுக்கு நட்டம் என்பது உயர்ந்து வந்தாலும் அதனால் மக்கள் அதிகமாக பாதிக்கப்படக்கூடாத அளவுக்குத்தான் நாம் கட்டணத்தை உயர்த்திக் கொண்டு வருகிறோம் என்பது தெரியவரும்.

அடுத்து சிறு தொழில்களுக்கு இதன்மூலம் பாதிப்பு ஏற்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள் சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் நாம் இப்போதுஉயர்த்தி யிருப்பது 9 பைசாதான். ஆகவே பாதிப்பு ஏற்படாது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவனஈர்ப்புத் தீர்மானத்திற்கான அறிவிக்கையை இரண்டு உறுப்பினர்கள் கொடுத்திருந்தால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு துணைக் கேள்வி கேட்பதற்குத் தான் அனுமதிக்கப்படும்.



திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே வக்கீல்களும் டாக்டர்களும் தங்களுடைய அலுவலகங்களுக்கு அதிகமான மின்சாரக் கட்டணம் விதிக்கப்படுகின்றது எஸ்று சொல்லி அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கிக் கொள்கிறார்கள். இவ்வாறு வாங்கப்பட்ட தடை மூன்று வருடங்களுக்கு மேல் இருந்தால் மின்சார வாரியத்திற்கு நட்டம் ஏற்படுகின்றது. இந்த நட்டத்தை மின்சார வாரியம் எப்படி சமாளிக்கப்போகிறது. நீதிபதியின் சம்பளத்தில் பிடிக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா? ஸ்டேயை வெக்கேட் பண்ணுவதற்கான நடவடிக்கையை எடுக்க அரசு தயாராக இருக்கிறதா என்பதை கூறுவது மட்டுமல்லாமல். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சம்பளம் பிடித்துக் கொள்ளப்படுமா என்று சொல்லக்கூடாது. ஏனென்றால் they are not accountable here.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, திருட்டுத்தனமாக மின்சாரம் திருடப்படுவதால் மின்சார வாரியத்திற்கு லட்சக் கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே கள்ளத்தனமாக மின்சாரத்தை திருடிக் கொண்டு போகிறவர்களைக் கண்டு பிடிக்க தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்படுமா? அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க சட்டத்திருத்தம் கொண்டு வர அரசு முயலுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மின் கட்டணத்தைப் பொறுத்தவரையில் வழக்கு மன்றத்திற்கு சென்று தடை பெற்று கட்டணத்தை கட்டாமல் இருப்பார் களேயானால் மின் வாரியம் இயங்குவது மிக சிரமமான காரியம். மின் கட்டணம் என்று மட்டும் அல்ல அரசுக்கு கட்ட வேண்டிய, அல்லது அரசுக்கு வருவாய் தரத்தக்க இனங்களில் நீதிமன்றங்கள் தடை விதிக்கிற போது அந்த வருவாயைக் கட்டச் சொல்லி விட்டு, அதற்குப் பிறகு அவர்கள் எந்த தீர்ப்பை தருவார்களேயானாலும் நாம் அதை ஏற்றுக் கொண்டு, வேண்டுமானால் அந்தப் பணத்தை திரும்பக் கொடுத்துவிடலாம், அல்லது குறைவாக கட்டணம் என்று தீர்ப்பு கொடுத்து விட்டாலும் கூட, அதிகமாகக் கட்டியதை பின்னால் சரி செய்துக் கொள்ளலாம். ஆனால் விதிக்கின்ற கட்டணத்தை வாங்குவதையே தடை விதிக்கிறபோது நாம் போடுகிற திட்டங்கள் தீட்டுகிற வரவு செலவு மதிப்பீடுகள் ஆகியவை பாதிக்கப்படுகின்றன. இருந்தாலும் நீதிமன்றத்தினுடைய தனிப் பட்ட ஆளுகைக்கு உட்பட்டது குறித்து நாம் எதுவும் சொல் வதற்கில்லை. எனவே இது மிகவும் சிக்கலான கேள்வி என்பதை மட்டும் பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பொருட்கள் என்று இருந்தால் திருடு போவது இயல்பு. அதேபோல மின்சாரத்தையும் திருடுகிறவர்கள் இருக்கிறார்கள். அதைக் கண்டுபிடிப்பதற்கு தனிப்பட்ட அமைப்பே மின் வாரியத்தில் இருந்து வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. டி.ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப கிளாரிபிகேஷன். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீதிமன்றத்தின் ஆளுகைக்கு உட்பட்டதை கேட்கக் கூடாது.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் இதிலே வராது.

(ஆ) காவிரி நதியின் தூய்மையைப் பாதுகாக்க நடவடிக்கை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''காவிரி நதியில் குறிப்பாக மேட்டூர், பவானி, ஈரோடு போன்ற பகுதிகளில் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் கழிவு நீர் கலப்பதால் அந்நதி தூய்மை இழந்து சுகாதாரக் கேடு, தாவர மற்றும் உயிரின அழிவு ஏற்பட்டு வருகிறது என்று ''சென்னை விஞ்ஞானக் கழகம்' ஆய்வு செய்து கண்டுள்ளதால் காவிரி நதியின் தூய்மையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

காவிரி ஆற்றின் தன்மையை ஆராயவும், மனிதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கண்டறியவும் மத்திய அரசின் விஞ்ஞானத் தொழிற்நுட்பத் துறையின் தேசிய சுற்றுப்புற திட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் மனிதனும், இயற்கைச் சூழலும் பற்றிய திட்டத்தில் 1976 ஆம் ஆண்டு ஆய்வு செய்யப்பட்டது. தொழிற்சாலைகளும், உள்ளாட்சிகளும் கழிவுநீரைக் காவிரி ஆற்றில் பல இடங்களில் வெளியேற்றுவதனால் நீரின் தன்மையும் நீர்வாழ் உயிரினங்களும் பாதிக்கப்படுவதாக இக்குழு அறிவித்தது. தொழிற்சாலைகள் தங்களது தொழிற்சாலை கழிவுநீரை வெளியிடுவதற்கு முன்னர் சுத்திகரிப்பு செய்து வெளியிடவேண்டும் என்று இக்குழு பரிந்துரைத்துள்ளது. மேலும், உள்ளாட்சி மன்றங்களும் தங்களது கழிவு நீரை சுத்திகரிப்பு செய்து வெளியிட நடைமுறைப்படுத்தும்படியும் வலியுறுத்தியுள்ளது. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தை செயல்படுத்தும் வகையில் அரசு 19-2-1982 நாளைய ஆணை எண் 340—ல் 27—2—1982 முதல் தமிழ்நாடு மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியத்தை அமைத்தது. இது தற்போது



136399
சென்னை-600 008.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் என மறு பெயரிடப்பட்டுள்ளது. காவிரி மற்றும் கிளை நதிகளின் கரையோரங்களில் தற்போது இயங்கி வரும் தொழிற்சாலைகள் தங்களது கழிவுநீர் தொழிற்சாலைக் கழிவுநீரை வெளியேற்றுவதற்கு 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் வாரியத்தின் அனுமதியைப் பெறவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. கழிவுநீர் வெளியிடுவதற்கான அனுமதியைப் பெற விண்ணப்பித்துள்ள தொழிற்சாலைகளுக்கு இசைவளிக்கப்பட்டு, வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கு ஏற்ப கழிவுநீரை சுத்திகரித்து வெளியேற்ற காலக்கெடு அளிக்கப்படுகிறது. தொழிற்சாலைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவுவது பற்றிய முன்னேற்ற அறிக்கை வாரியத்தால் கண்காணிக்கப்படுகிறது.

சென்னை அறிவியல் நிறுவனம், காவிரியாற்றுப் படுகைச் சுற்றுப்புறச் சூழல் திட்டம் மற்றும் இணைப்பு வளர்ச்சி பற்றிய கருத்தாய்வு ஒன்று கொடைக்கானலில் 1985 ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்தியதில் பல்கலைக்கழகங்களும் அரசுத் துறைகளும் பங்கு கொண்டன. காவிரி ஆற்றுப் படுகை பற்றிய ஒழுங்குப்படுத்தப்பட்ட முழுமையாக்கப்பட்ட சுற்றுப்புறச் சூழல் திட்டத்தின் கீழ் கருத்துக்கள் தயாரிக்கப்பட்டு, நிதி உதவி பெறும்பொருட்டு இந்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்படலாம். இக்கருத்துருவில், காவிரியாற்றின் நீரின் தன்மை, இயற்கைச் சுத்திகரிக்கும் திறன் ஆகியவற்றின் ஆய்வு உள்ளடங்கியது. நீர்நிலைகளில் கழிவுப் பொருட்கள் வெளியிடுவதைக் கட்டுப்படுத்தவும், மாசினைக் கட்டுப்படுத்தவும் அரசு 6-2-1984 நாளிட்ட சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத்துறை ஆணை எண் 1-ல் அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள், நீர்நிலைகள், நதிகள், ஆறுகள், கிணறுகள், அணைக்கட்டுகள் முதலியவற்றிலிருந்து 1 கி. மீ. தூரத்திற்குள் அமைக்கக்கூடாது என்று ஆணையிட்டுள்ளது. 5-9-1984 நாளிட்ட சுற்றுப்புறத் தூய்மையைக் கட்டுப்பாட்டுத்துறை ஆணை எண் 41-ல் சுத்திகரிக்கப்படாத கழிவுகளை வெளியேற்றுவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராயவும், மாசுப்பிரச்சினையைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் ஆணையாளர் மற்றும் அரசு செயலர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இது குறித்துத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள நடைமுறைகளையும், எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் காவிரி நதியை தூய்மைப் படுத்துவது என்பது நமது அரசால் மட்டும் செய்யக் கூடிய காரியம் அல்ல. காரணம் காவிரி நதி என்பது அண்டை மாநிலங்களிலேயும் பாய்ந்து கொண்டிருக்கிற ஒரு ஜீவ நதி. எனவே, என்னதான் நாம் அந்தக் காவிரி நதியை

தூய்மைப்படுத்த நடவடிக்கை எடுத்தாலும், பக்கத்து மாநிலத்திலே அது தூய்மை கெடுமானால் நம்முடைய பகுதியிலேயும் அது தூய்மை கெடுவதற்கு வாய்ப்பாக அமைந்து விடும். எனவே ஒட்டு மொத்தமாக இன்றைக்கு ஒரு முடிவுக்கு கொண்டு வர கங்கை நதியைத் தூய்மைப் படுத்த மைய அரசு ஒரு மாஸ்டர் பிளானை ஆய்வுசெய்து, தயாரித்து, ஹை லெவல் கங்கா பேசின் அத்தாரிட்டி என்று ஏற்படுத்தி இருப்பதைப் போல நம்முடைய நதிக்கும் இப்படிப்பட்ட ஒரு அத்தாரிட்டியை ஏற்படுத்துவதற்கு, மைய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருசெம்மலைஅவர்கள் சொன்னது மாதிரி, இந்தக் காவிரி ஆறு கர்நாடக மாநிலத்திலேயிருந்து, இங்கே வருகிற காரணத்தாலே, கர்நாடக மாநிலத்திலேயும் அதைத் தூய்மைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் அதிகாரப் பூர்வமாகச் சொல்லிக் கொள்ள முடியவில்லை என்றாலும் கூட, அந்த மாநிலத்திலேயும் என்வயர்ன்மெண்டல் பொல்லூஷன் கன்டிரோல் ஆக்ட் என்ற சட்டம் செயல்பட்டு வருவதால், அங்கேயும் அதற்குரிய நடவடிக்கையை எடுத்துக் கொள்வார்கள் என்றே கருதுகிறோம்.

சமீபத்திலே கொடைக்கானலிலே ஜனவரி 10 ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை நடைபெற்ற கருத்தரங்கிலே ஈக்கோ டெவலப் மெண்ட் ஆப் காவிரி பேசின் என்று அதற்கான ஒரு வொர்க் ஷாப் ஏற்படுத்தி, அந்தப் பிரச்னையை ஒட்டு மொத்தமாகக் கவனிக்க வேண்டும் என்ற பரிந்துரையைத் தந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

அந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மத்திய அரசிற்கு அனுப்பி இருக்கிறோம். இது அந்தக் கட்டத்தில் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், நாம் ஏற்கனவே பிப்ரவரி மாதம் ஆறாம் தேதி 1984 ஆம் ஆண்டு ஒரு ஆணை பிறப்பித்து இருக்கிறோம். அந்த ஆணையின் அடிப்படையில் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் காவிரி நீரில் விடப்படுவதற்கு முன்னால் முறையாக சுத்திகரிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை சட்டவரையறைகளுக்கு உட்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆணைப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு ஆற்று நீரிலே கலந்து* வெளியேறும் இடத்தில் அந்த நீர் மாதிரியை அதாவது சாம்பிள் எடுத்து அதில் எவ்வளவு பி. ஓ. டி. கன்டென்ட் இருக்கிறது என்பதை பார்த்து நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் தற்போது நகர்ப்புற கழிவுநீரை சுத்திகரிக்காமல் ஆற்றில்— ஏனென்றால் பாக்டரி மட்டுமல்லாமல் சில நகரங்கள் கூட



ஆற்றின் ஓரங்களில் இருப்பதால், அந்த நகர்ப் புற கழிவுநீர் ஆற்றிலே போய் கலந்துவிடக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அந்த நகரங்களில் இருக்கிற, அந்த நகரத்தின் எல்லைக்குள்ளே இருக்கின்ற அதிகாரிகளிடத்தில் வற்புறுத்தப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற திட மாசுப் பொருள்கள் வெளியேறுவது குறித்து விரிவாக ஆராய ஒரு குழு நியமிப்பதுபற்றி ஒரு ஆணை பிறப்பிக்கப்படும். இந்த வகையிலே நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். இன்னும் இதில் யாராவது தவறு செய்வார்களானால் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கும் அரசாங்கம் தயாராக இருக்கிறது.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு

### மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு 1985.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1985—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த சட்ட முன்வடிவு *(சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 28/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மதுவிலக்கு திருத்தச் சட்ட முன்வடிவிலே நடக்கிற விவாதத்திலே பங்கு கொள்வதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசாங்கம் மதுவிலக்கை மீண்டும் அமுலுக்கு கொண்டு வருவோம் என்று அளித்த வாக்குறுதிகள் என்னவாயிற்று, என்று மற்றக்கட்சிகள் கேட்பதைப் போல நான் இங்கே கேட்பதற்கு வரவில்லை. அதை ஒரு விவாதத்திற்குரிய பொருளாகவும் எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. காரணம் சமுதாயத்திலே சூழ்நிலைகள் மாறிப் போய்க்கொண்டிருக்கிற நேரத்திலே மக்களுடைய அபிலாஷைகள், எண்ணங்கள் முதலியவற்றைப் பிரதிபலிக்கிற நிர்பந்தமான சூழ்நிலையில் அரசாங்கம் இருந்து கொண்டிருக்கிறது. ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. States men think of the next generation and the politicians think of the next election. என்று சொல்வார்கள். தலைசிறந்த ஆட்சியாளர்கள் வருகிற தலைமுறையைப் பற்றிச் சிந்திப்பார்கள். தலைசிறந்த அரசியல் வாதிகள் அடுத்து வருகிற தேர்தலைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள் என்பது அந்தப் பழமொழி. மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்குப் பிறகும், கர்மவீரர் காமராஜர் அவர்களுக்குப் பிறகும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகும், தமிழகத்திலே தலைசிறந்த ஆட்சியாளர்கள் என்று சொல்வதற்கு யாரும் இருப்பதாக என்னுடைய கருத்துப்படி

* 1985—ம் ஆண்டு ஜூன் 5—ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இல்லை. நாம் எல்லோரும் தலைசிறந்த அரசியல்வாதிகளாகத் தான் திகழ்கிறோமே தவிர தலைசிறந்த ஆட்சியாளர்களாக நாமில்லை என்பதை மெத்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற காரணங்களிலிருந்து, இந்தத் திருத்தத்தின் அவசியத்தையும், அவசரத்தையும் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. முன்பு சொன்னதைப் போல நிர்வாண மாக நபர்கள் உள்ள ஒரு நகரத்திலே, ஆடையணிந்து கொண்டு செல்கிறவர்கள் பைத்தியக்காரர்கள் என்று கருதப்படுவார்கள் என்பதைப் போல தமிழகத்திலே இந்த சமுதாயத்திலே ஏராளமானவர்கள் குடிக்க கற்றுக் கொண்டு விட்டார்கள். குறிப்பாக எந்த ஒரு கிளாஸ் ஆப் சொசைட்டியும் இதற்கு விதிவிலக்கு அல்ல. அரசாங்கத்தில் உள்ள அதிகாரிகள், காவல் துறையைச் சேர்ந்தவர்கள், இன்னும் பேராசிரியர்கள், மாணவர்கள், இன்னும் சொல்லப் போனால், கிட்டத்தட்ட ஒரு கோடி பேர்கள் குடிப்பதை ஒரு ஸ்டேடஸ் சிம்பளாக வைத் திருப்பது என்ற துர்பாக்கியமான ஒரு நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது என்பதை நான் மிகுந்த வேதனையோடும், வருத்தத் தோடும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக ஏழைகள் வாழ்கின்ற பகுதியில் பெண்கள் கூட குடிக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனால் ஒட்டு மொத்தமாகப் பார்க்கின்றபோது, நேற்றைய தினம் தொலைக்காட்சியிலே நீங்கள் எல்லாம் பார்த்திருப் பீர்கள். அஷிஸ் என்ற மிகச் சக்தி வாய்ந்த போதைப்பொருள் 5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருள் நம் நாட்டுக்குக் கடத்தப்பட்டது. ஒரு பாகிஸ்தான் நேசனல், சீக்கியர் உடையிலே மாறுவேடம் அணிந்து இதைக் கடத்தி வந்தார் என்றும், 5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்த அஷிஸ் என்ற போதைப்பொருள் கஸ்டம்ஸ் அதிகாரிகளால், கண்டு பிடிக் கப்பட்டது என்பதையும் நாம் தொலைக்காட்சியிலே பார்க்கிற போது, இதைவிடக் கொடுமையான அஷிசுக்கு இந்த மக்கள் அடிமையாகாமல் இந்த மட்டும் குடியோடு நிறுத்திக் கொண் டிருக்கிறார்களே என்று என்னைப் போன்றவர்கள் சந்தோஷப் பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே வேதனை யோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் இப்போது இருக்கின்ற சூழ் நிலையில் இந்த அரசாங்கத்தினுடைய வருவாயை எப்படிப் பாதுகாக்கவேண்டும், அதிகரிக்க வேண்டும் என்ற கடமை உணர்வு எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள எங்களுக்கும் உண்டு. இங்கே சொல்லப்பட்டு இருக்கின்ற காரணங்கள், சட்ட முன்வடிவின் நோக்கங்கள் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ் என்பதிலே சொல்கிற போது ஏலம் கேட்பவர்கள் ஒட்டுமொத்தமாக ஒன்றாகச் சேர்ந்து கொண்டு ஒரே கூட்டாகச் சேர்ந்து கொண்டு, குறைந்த விலைக்கு



அவர்களுக்குள்ளே ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு அதிகமான விலைக்கு ஏலம் கேட்பதை தடைசெய்கிறார்கள். அதனால் அரசாங் கத்தின் வருமானம் குறைகிறது என்று சொல்கிறார்கள். இன்னும் சில இடங்களில், அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற அந்த விலைக்கு ஏலம் போகாத காரணத்தால், அந்த இடங்களில் மறு ஏலம் விட வேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கு அரசாங்கம் தள்ளப்படுகிறது. அதனால், அரசாங்கத்திற்கு மொத்த வருவா யில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, இவைகளை எல்லாம் சரிப்படுத்துவதற்கு, சீர் திருத் தம் செய்வதற்கு, எங்கள் அனுபவத்தின் அடிப்படையில் முன்பு இருந்த அந்த மதுவிலக்குச் சட்டத்தை திருத்த முன்வந்திருக் கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் இங்கே ஒன்றை தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். நீங்கள் கூறி யிருக்கின்ற காரணங்கள் மட்டுமல்லாமல், இன்னும் பல கார ணங்கள் எங்களைப் போன்றவர்களுக்குத் தெரிய வந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு கலால் வரி கிடைக்காமல், திருட்டுத்தனமாக சாராயம் உற்பத்தி செய்பவர்கள் விற்பனை செய்கிறார்கள் என்ற செய்தியும், தகவலும் எங்களுக்கு வந்திருக்கிறது. அண்டை மாநிலங்களிலிருந்து நம்முடைய தமிழகத்திற்கு சாராயம் கடத் தப்பட்டு, குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது என்று செய்தியை நீங்கள் பத்திரிகையிலே பார்த்து இருப்பீர்கள். கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்பு, திருவள்ளூர் என்ற இடத்திற்கு அருகே சாராயத்தை ஏற்றி வந்த லாரி கவிழ்ந்ததன் காரணமாக, அங்கேயுள்ள பொதுமக்கள் எல்லாம் சாராயத்தை பக்கெட்டு களிலேயும், வாளிகளிலேயும் கொண்டு சென்றார்கள் என்றும், இன்னும் சில வெறிபிடித்தவர்கள் ரோட்டிலேயே சாராயத்தை உறிஞ்சிக் குடித்தார்கள் என்ற செய்தியை தினசரிகளிலே நாம் பார்த்திருக்கிறோம். எனவே நம்முடைய வருமானத்தை சரிப் படுத்துவதற்கு இது கொண்டு வரப்படுகிறது என்று நீங்கள் சொன்னாலும், இதிலே இன்னும் ஏராளமான காரணங்கள் இருக்கின்றன. பக்கத்திலே ஆந்திராவிலேயிருந்து சாராயம் இங்கே வந்து கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், சாராயம் தயாரிக்கின்ற தொழிற் சாலைகள் கலால் அதிகாரிகளை ஏமாற்றி, கள்ளத்தனமாக சாராயத்தை விற்பனை செய்து, கொள்ளை லாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இது ஒன்று. இன்னொன்று, நேற்று கூட ஒரு பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். தூத்துக்குடியா ஜிஞ்சர்குடியா? என்று ஒரு பெரிய கட்டுரையையே எழுதி யிருக்கிறார்கள். ஜிஞ்சர் என்ற போதைப் பொருள் ஏராளமான அளவிற்கு விற்கப்பட்டு, ஏராளமான பணத்தை அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொல் கிறார்கள். ஆகவே இவைகளை எலலாம் ஒட்டு மொத்த மாகப் பார்க்கின்றபோது, இந்தச் சட்ட திருத்த முடிவு எந்த நோக்கத்திற்காக இதை இங்கே அறிமுகப் படுத்தினார்களோ, அந்த நோக்கங்களை எல்லாம் பூர்த்தி செய்யுமா என்றால், நிச்சயமாக முழுமையாகப் பூர்த்தி செய்யாது. அதை ஓரளவிற்குத்தான் சரிக்கட்ட முடியும் என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆகவே இன்னும் கடுமையான சில சரத்துக்களை இதில் சேர்த்து நம்முடைய அதிகாரிகள் தக்க நடவடிக்கைகளை எடுப்பார்களானால் சாராயம் குடிப்பவர்களிடமிருந்து வருகின்ற அந்தப் பணம் நம் நாட்டினுடைய க்ஷேம நல திட்டங்களுக்கு சமுதாய பணிகளைச் செய்வதற்கு பயன்படும். கள்ளச் சாராயத்தை கள்ள மார்க்கெட்டில் கலப்படம் செய்து விற்கின்ற தனி வியாபாரிகள் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்னும் ஒன்று இங்கே 'Tamil Nadu State Marketting Corporation Ltd என்ற ஒன்றை அரசு நிறுவனத்தின் மூலமாகத் தான் அவர்கள் நேரடியாகவே ரீடெயில் சேல்ஸ்—இப்போது அவர்கள் ஒல்சேல் மொத்த விலையில் செய்து கொண்டு இருக்கிறார்கள்—சில்லறை வியாபாரத்தை அவர்கள் மேற்கொள்ளுவதற்கு பதிலாக இன்னும் சொல்லப்போனால் அவர்கள் சில ஏஜென்சிகளை நியமித்து அதன் மூலமாக சாராய விற்பனைச் செய்யப்படும் என்ற ஒரு புதிய முறையை உருவாக்கியிருக்கிறார்கள். 4 கோடி மக்கள் உள்ள இந்த தமிழகத்தில் எல்லோருக்கும் உணவுப் பொருள்கள் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்குவதற்கு உண்டான வேலையை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் செய்து கொண்டு இருக்கிறபோது இந்த Tami Nadu State Marketting Corporation Ltd. சாதாரண சாராயத்தை மட்டும் மக்களுக் சில்லரை வியாபாரமாக ஒட்டு மொத்தமாக அவர்கள் ஏன் கொடுக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தனிப்பட்ட லைசன்ஸ்கள் அல்லது ஏஜென்சிகள் நியமனம் செய்து அந்த உரிமங்கள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமா? இது அவசியம் தானா?என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இங்கே அத்தியாவசியப் பண்டங்களை எல்லா மக்களுக்கும் நாம் வழங்க ஒரு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் வைத்துக்கொண்டு இருக்கிறோம். அதேபோல் This is State Marketting Corporaticn for liqour supplies இதை வைத்துக்கொண்டு நாம் எல்லோருக்கும் வழங்குவதற்கு வழிவகைகளை செய்ய வேண்டுமே ஒழிய தனிப்பட்ட சில ஏஜென்சிகளிடம் கொடுப்பது நியாயம் தானா என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒட்டுமொத்தமாக இங்கே இந்தச் சட்டத்தை உருவாக்கியவர்கள் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அங்கே அரசிலே சட்டத்துறை என்று ஒன்று இருக்கிறது. அதிலே சட்டம் படித்த மேதைகள் பலர் இருக்கிறார்கள் இதைப் பார்க்கின்றபோது இந்த சரத்திலே ஒன்றைப் போட்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

Any dispute between the said Corporation and the Agent in respect of any matter shall be referred to the Commissioner or an Officer not below the rank of District Revenue Officer specially empowered by the State Government in this behalf, whose decision thereon shall be final and such decision shall not be called in question in any Court. என்று இருக்கிறது.



இந்த ஏஜென்சிகளுக்கும் அங்கே உள்ள அரசு அதிகாரிகளுக்கும் ஏற்படுகின்ற தகராறுகள் டிஸ்புட்ஸ் இவைகளை தீர்த்து வைப்பதற்கு நீதிமன்றத்திற்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. தனிப்பட்ட ஒருவருக்கு ஏஜென்சி கொடுக்கிறோம் என்று சொன்னால் It is what is called a contract for a sum. ஒருவருக்கு சில சட்ட அடிப்படையில் சில விதிமுறைகளின் அடிப்படையில் the contract is given. இந்த லைசன்ஸ் வழங்குகிறோம், The contract is not valid if it is unilateral. It is valid only if it is bilateral. இந்த நிலைமை ஏற்படுகிறபோது நாங்கள் உங்களுக்கு லைசன்ஸ் கொடுப்போம் நீங்கள் விதிமுறைகளை மீறியிருக்கிறீர்கள் அல்லது கட்டணம் கட்டவில்லை என்று ஏதாவது குறை என்று சொன்னால் அதையும் முடிவு செய்வது எங்களுடைய பொறுப்புதான். நாங்கள் நினைத்தால் உங்கள் லைசன்ஸை, ஏஜென்சியை கேன்சல் செய்து விடுவோம் என்று சொல்வது சட்டப்படி சரியாக இருக்குமா என்று எனக்கு ஒரு ஐயப்பாடு இருக்கிறது. அதேநேரத்தில் சட்டப்படி சரியாக சொல்லப்பட்டதாக இருந்தாலும்கூட on principle of natural justice, on moral grounds இது ஒரு தவறான ஒரு முடிவு என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் அரசாங்கத்தை எதிர்க்கட்சியில் மாற்று முகாம்களில் இருப்பவர்கள் இந்த ஏஜென்சியை உங்களுடைய ஆளும் கட்சியினருக்குக் கொடுத்துவிட்டீர்கள் அல்லது முறைகேடாக அவர்கள் நடந்து கொண்டாலும் அதைப் பற்றி எந்த ஒரு நீதிமன்றத்திற்கும் செல்லமுடியாது என்ற நிலைமையை உருவாக்கி விட்டீர்கள், உங்களுக்கு வேண்டியவர்களுக்கு எல்லாம் லைசன்ஸ் வழங்கிவிட்டீர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இந்த அரசு ஆளாக்கப்படும் என்ற அந்தக் காரணத்தாலும் இதை எப்படியாவது மாற்றி ஏதாவது ஒரு தக்க பாதுகாப்பை நீங்கள் கொடுக்கவேண்டும் சட்டத்திலே You must incorporate it என்று நான் இந்த நேரத்தில் சொல்லி கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கடைசியாக சில வேண்டுகோள்களையும் இந்த நேரத்தில் நான் சொல்வது அவசியம் ஆகிறது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் மூலமாக நாம் இந்த சாராயத்தை விற்பனை செய்வோமானால் அந்தக் கடைகள் காலை 8 மணி அல்லது 10 மணி முதல் இரவு 7 மணி வரை திறந்து இருக்கும். மற்ற நகரங்களில் மது விலக்கு அமலில் இல்லாத நகரங்களில் டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் இரவு 7 மணிக்கு மேல் போனால் சாராய கடைகள் திறந்து இருக்கப்பட மாட்டாது.

After 7 p.m.all the arrack shcps will be closed down.

எனவே. 7 மணிக்குப் பிறகு வேண்டுமென்று சொன்னால், சாராயம் கிடைக்கவே கிடைக்காது. தமிழகத்திலே மாத்திரம் தான் 24 மணி நேரமும், சட்டங்கள் எப்படி இருந்தபோதிலும், அந்த உரிமை பெற்றவர்கள், சாராயம் விற்பனை செய்கின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம், குறிப்பாக, என்னுடைய தியாகராயநகர் பகுதியிலே பஸ் ஸ்டாண்டுக்குப் பக்கத்திலே— 24 அவர்ஸ் சர்வீஸ் ஹாஸ்பிடல் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்,

24 அவர்ஸ் சர்வீஸில் லிக்கர் சப்ளை—யைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த அவலமான காட்சிகள் நிறுத்தப்படுவதற்கான வகையில், ஏஜென்ட்க்குக் கொடுப்பதைவிட, ஒட்டுமொத்தமாக அரசாங்கம், ஸ்டேட் மார்க்கட்டிங் கார்ப்பரேஷன் மூலமாக அவர்களே அதைச் செய்துவிட்டால், அரசாங்க அலுவலகங்களைப்போல, வாரத்தில் 5 நாட்கள் மாத்திரம், அதாவது காலை 10 மணி முதல் 5 மணி வரையில்தான் சாராயம் விற்கப்படும் என்ற நிலையை உருவாக்கினோமேயானால், காலம் கடந்து சாராயம் வேண்டும் என்றாலும், போதை அதிகமாகிவிட்டால், 100 மில்லி அதிகம் தேவை என்று நினைக்கிறவர்கள் கேட்கின்ற நேரத்திலே சாராயம் கிடைக்காத ஒரு நிலைமையை உருவாக்கினால், குடிப்பழக்கம் ஓரளவுக்குக் குறையுமே என்ற ஆதங்கத்தின் காரணமாகத்தான் இதை உங்களிடம் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒரு சிறிய விஷயம். சாராயம், ஒரு பொருள் என்று சொன்னால், புரொடக்ஷன், மார்க்கட்டிங் அண்டு டிஸ்டிரிப்யூஷன் என்று சொல்வார்கள். அந்த மார்க்கட்டிங் அண்டு டிஸ்டிரிப்யூஷனை மாத்திரம் நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் புரொடக்ஷன் நம் கையிலே இல்லை. ஆகவே, எப்படி விநியோகத்தையும் நாம் ஏற்றுக்கொள்கிறோமோ, அதைப்போல சாராய உற்பத்தி செய்வதைக் கூட நாமே எடுத்துக் கொண்டுவிட்டால் இங்கே எதிர்க்கட்சிகள் கடந்த 5 ஆண்டுக் காலங்களாக சட்டமன்றத்தில் குற்றச்சாட்டு சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, 2 ரூபாய்க்கு சாராயம் அடக்க விலை. நீங்கள் விற்கின்றது 7 ரூபாய், 8 ரூபாய். நடுவிலே யார் யாரோ கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று இங்கே ஒவ்வொரு முறையும், சட்டமன்றத்திலே எடுத்து வைக்கின்ற வாதங்கள் அடிப்பட்டுப் போகும். ஆகவே, சாராயத்தை உற்பத்தி செய்வதற்கான அந்த முயற்சியையும், அந்தத் தொழிலையும் அரசாங்கமே ஏற்று நடத்தி அதன் மூலமாகக் குறைந்த விலையில் தரமான சாராயத்தை மக்களுக்கு; எளியவர்களுக்குக் கொடுப்போமேயானால், மக்கள் உங்களுக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று உங்களுக்கு எடுத்துச் சொல்லி, சட்டத் திருத்தங்களை நான் சொல்லிய கருத்துக்களின் அடிப்படையில் செய்ய முடியுமா என்று சட்ட அமைச்சர் அவர்களும், மற்றவர்களும், ஆராய்ந்து பார்த்து, நல்ல முறையில் இந்தச் சட்டங்களை அமல்படுத்தி, அரசாங்கத்திற்கு வருவாய் இழப்பு இல்லாமல் எல்லா விதமான பாதுகாப்புகளையும் செய்து அதேநேரத்தில் ஏஜென்ட்ஸ் என்று சொல்லப்படுகிறவர்கள் அதிகார துஷ்பிரயோகம் செய்யாமல் இருப்பதற்கான ஒரு நிலைமையை உருவாக்கவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.



டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் சார்பாக, இம்மன்றத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள மதுவிலக்கு 1985 ஆம் ஆண்டு திருத்த மசோதாவை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விழைகின்றேன்.

இன்றைக்கு இருக்கிற சட்டங்கள் அடிப்படையில், வகைப்படுத்தப்பட்டிருக்கிற ஏல முறை அல்லது டென்டர் முறையில் அரசாங்கத்திற்கு வரக்கூடிய வருமானங்கள் வராமல் இருப்பதற்கான வழி இருக்கிற காரணத்தாலும், இன்றைக்கு இருக்கிற முறையினால் அரசாங்கத்திற்கு கட்டவேண்டிய கட்டணத்தை பல்வேறு கடை நிறுவனத்தை நடத்துகிறவர்களெல்லாம், ஏமாற்றுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலும். இந்த அரசாங்கம் கொண்டுவந்திருக்கிற இந்த புதியச் சட்டம் நிச்சயமாக அரசாங்கத்திற்கு அதிக வருமானத்தை ஏற்படுத்தும் என்ற வகையிலே இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், தற்போது அமலில் இருக்கிற ஏல முறை அல்லது டென்டர் முறை, வருமானம் குறைவாக பல்வேறு விதத்திலே பயன்படுகிற சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-20)

இதனால் தமிழகத்தில் சாராயக் கடைகள் நடத்துபவர்களின் அராஜகம் அதிகப்பட்டுக்கொண்டு வருகிற சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. சாராயக் கடைகள் நடத்துகிறவர்கள் பல்வேறு கிராமங்களில் ஸின்டிகேட் என்ற அமைப்புகளை உருவாக்கிக்கொண்டு பத்து பதினைந்து பேர்கள், ஊரில் உள்ள பெரிய ரௌடிகள் அல்லது ஊரிலுள்ள மற்றவர்களை ஏய்த்துப் பிழைக்கத் தெரிந்த பெரிய பணக்காரர்கள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு அந்த கிராமத்தில் வேறு யாரும் சாராயக் கடைகளை ஏலத்திற்குக் கேட்க வரவும் கூடாது: அதே நேரத்தில் மற்றவர்கள் கேட்பதற்குக் குறைவாக போகக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கி அதனால் ஏலம் அதிகமாகப் போகாமல் அரசாங்கம் குறிப்பிட்ட தொகைக்கு உள்ளே ஏலம் போகிற சூழ்நிலையை உண்டாக்குகிறார்கள்.

அது ஒன்று. ஊரில் இருக்கிற பெரியதனக்காரர்கள், கிராமங்களிலும் சரி, பேரூராட்சிகளிலும் சரி, நகராட்சிகளிலும் சரி, அவர்கள் ஒன்றாகக்கூடி அமர்ந்துகொண்டு ஊருக்கு இவ்வளவு பணம் தரவேண்டும், அதற்கு என்று தனியாக ஏலம் விடவேண்டுமென்று சொல்கிறார்கள். அரசு விடுகிற ஏலம் எக்ஸைஸ் டிப்பார்ட்மென்டிலிருந்து அல்லது தாசில்தார் அளவில்,

கலால் தாசில்தார் அளவில் ஏலம் விடுகிற ஒரு முறை இருந்
தாலும் அங்கே ஊரில் இருப்பவர்கள் ஒன்றாகக்கூடி, இரவு
நேரத்தில் ஒன்றாகக்கூடி அமர்ந்து தனியாக ஏலம் விடுகிறார்கள்.
ஊருக்கு இவ்வளவு தரவேண்டும், மாரியம்மன் கோவில் கட்ட
இவ்வளவு தரவேண்டும் அல்லது வேறு பல பணிகளுக்கு இவ்வளவு
தரவேண்டும், ஊர் நிர்வாகஸ்தருக்கு இவ்வளவு பணம் தர
வேண்டும் என்று சொல்லி ஏலம் விட்டு, இலட்சக்கணக்கான
ரூபாய்க் அவர்கள் ஏலம் விடுகிறார்கள்.

அப்படி அவர்கள் ஏலம் விட்டதற்குப்பின், அதில் யார்
ஏலம் எடுக் றார்களோ அவர்கள் மட்டும்தான் பிட் அல்லது
ஏலம் கேட்பதற்கு உரிமை படைத்தவர் என்ற நிலை அந்த
ஊரிலே உருவாகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் அரசுக்கு
வரவேண்டிய கட்டணம் வராமல் போகிற சூழ்நிலை ஏற்படுவது
மட்டுமல்ல அவர்கள் மூலம் கேட்கப்படுகிற ஏலம் மிகக்குறைந்த
தொகைக்குக் கேட்பதால் அரசு அவர்களுக்கு லைசென்ஸ்
கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அங்கே கடைகள்
திறக்கப்பட முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி கடைகள்
திறக்கப்படாமல் இருந்தால் அதிலும் ஆதாயம் தேடுகிறார்கள்.
பெரிய கிராமமாக இருந்தாலும், ஊராக இருந்தாலும்,
பேரூராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும்
கடைகள் ஏலத்திற்கு வருவதற்கு வழி இல்லாமல் செய்து
அதனால் அந்தப் பகுதியில் கடை நடத்தமுடியாத சூழ்நிலை
ஏற்படும்போது பக்கத்திலுள்ள சிறிய கிராமத்தில் சிறிய
அல்லது சந்துக் கடைகளை ஏலத்தில் எடுத்துக் கொண்டு
பெரிய கடைகளை ஏலத்திற்கு அரசு விடுவதற்கு வழியில்லாமல்
செய்கிற காரணத்தால் அந்தச் சாராயக் கடைகள் மூலமாக
அரசுக்கு வரக்கூடிய வருமானத்தைத் தடுத்துவிட்டு சிறிய
சாராயக் கடைகள் வைத்து நடத்துகிறவர்கள் மூலம், அந்தச்
சாராயக் கடைகள் மூலம் பெரிய ஊர்களுக்கு சாராயம் சப்ளை
செய்கிறார்கள். அதுமட்டுமல்ல, பல கடைகளைத் தொடர்ச்சி
யாக எடுத்துக்கொண்டு. ஒரு அமைப்பை உருவாக்கிக்கொண்டு
ஒரு மாவட்டத்தில், பழனி முதல் மதுரை தாண்டி கோவை
தாண்டி வருகிற வரை எடுக்கிறார்கள் சேலத்திலிருந்து தர்மபுரி,
கோவை வரை எடுக்கிறார்கள். இப்படி பல்வேறு அமைப்புகளை
உருவாக்கிக்கொண்டு, மிகப்பெரிய ரௌடித்தனம் இன்று
நாட்டில் நடைபெறுவதற்கு வழிவகையாக ஏற்கனவே இருந்த
சட்டம் இருக்கிறது. அதைப் போக்கவேண்டுமென்பதற்காக
தனி நபர்கள், தனிப்பட்டவர்கள், பணக்காரர்கள் இந்த
நாட்டை ஆட்டிப்படைக்க முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டுக்
கொண்டிருக்கிறது. ஆகவே இதற்கு மாற்று ஏற்பாடு செய்ய
வேண்டுமென்ற உணர்வோடு மாண்புமிகு முதல்வர், புரட்சித்
தலைவர் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு
வந்திருக்கிறார்கள். இது வரவேற்கப்படவேண்டிய சட்டத்
திருத்தம், இது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய சட்டத்திருத்தம்
என்பதை இந்த மன்றத்தில் எடுத்து வைக்கக் கடமைப்பட்
டிருக்கிறேன். இந்த நிலையில் சட்டத்திருத்தம் கொண்டு



வந்ததை கேலி செய்து பேசுகிறவர்கள், உள்நோக்கத்தோடு
இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்
என்று சொல்வது நியாயமற்ற வாதமாகும். அப்படிச் சொல்
கிறவர்களைப் பொறுத்தவரையில், வாதத்திற்காக அவர்கள்
சொன்னாலும்கூட அதை இந்தச் சமுதாயம் ஏற்றுக்கொள்ளாது.
காரணம், அரசுக்கு வருகிற வருமானத்தைத் தடுப்பதோடு மட்டு
மல்லாமல் கிராமங்களில் அராஜக ஆட்சி நடத்துகிறவர்கள்
கரத்தை முறிக்கவேண்டும் அவர்கள் கொட்டத்தை அடக்க
வேண்டும் என்று இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவருகிற
நேரத்தில் அவர்களுக்கு ஆதரவாகப் பேசுகிறவர்களைப்
பார்க்கும்போது எனக்கு சிரிப்பாக இருக்கிறது. அகில இந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்தினாலும்
அந்த ஆட்சியில் அங்கம் வகிப்பவர்கள் நாங்களாக இருந்தாலும்
எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் இன்று இருக்கிற சாராயக்கடை
அதிபர்களுக்கு லாபம் வரவேண்டும் என்பதற்காக பரிந்து
பேசுவது நியாயமல்ல. உள் நோக்கத்தோடு இந்த அரசு புதிய
சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.
உள்நோக்கத்தோடு ஆட்சி நடத்தியவர்களுக்கு தான் இது பற்றி
நன்கு தெரியும், அதனால்தான் சொல்கிறார்கள். எதைக்
கொண்டுவந்தாலும் உள்நோக்கம் இருக்கிறது, எந்தச்
சட்டத்தைக் கொண்டுவந்தாலும் அதில் இலாபம் இருக்கிறது
என்று அவர்கள் கணக்குப் போடுகிறார்கள். அவர்கள் காலத்தில்
போட்டதுபற்றி நானும் சொல்லியாக வேண்டும். உள்நோக்கம்
உள்நோக்கம் என்று பேசுகிறவர்களுக்கு இந்த மன்றத்தில் நான்
சிலவற்றை எடுத்து வைக்க விரும்புகிறேன். 1974-ம் ஆண்டு
ஆட்சியில் யார் இருந்தார்கள் என்பதை இந்த நாடு அறியும்
1974-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் தேதி காமதேனு ட்ரிங்க்ஸ்
இவர்கள் ஏதேதோ வார்த்தைகளால் வர்ணித்தார்கள்.
விதண்டாவாதமாகக்கூடச் செய்தார்கள். அவர்களுக்கு அன்று
காமதேனுவாக இருந்தது அந்த காமதேனு ட்ரிங்க்ஸ். அவர்கள்
வாழ்க்கைக்கு, அவர்கள் வளர்ச்சிக்கு அவர்கள் வளத்திற்கு
அவர்கள் அரசியலுக்கு காமதேனுவாக இருந்தது அந்த காமதேனு
ட்ரிங்க்ஸ். சக்தி சர்க்கரை ஆலை, திருச்சி டிஸ்டிலரீஸ், ஈ.ஐ.டி.
பாரீஸ், மற்றும் இதர வடிப்பாலைகளிலிருந்து இந்தியன்
கெமிகல்ஸ் நிறுவனம் 40 இலட்சம் லிட்டர் சாராயம் அனுப்பு
வதற்கு அரசாங்கம் ஆணையிடுகிறது.

ஆனால் 40 லட்சம் லிட்டர் சாராயம் அனுப்புவதற்குப்
பதிலாக அன்றைக்கு இருந்த அந்த அரசாங்கம் 93 லட்சத்து
50 ஆயிரம் லிட்டர் சாராயத்தை அந்த நிறுவனங்களுக்கு
அனுப்பியிருக்கிறது. 93 லட்சத்து 50 ஆயிரம் லிட்டர்
சாராயத்தை அப்படித்தருவதால் இடையிலே அன்றைக்கு இருந்த
ஆட்சியாளர்களுக்கு வந்திருக்கிற வருமானம் ஏறத்தாழ 77
லட்சம் ரூபாய். 1974 ஆம் ஆண்டு 77 லட்ச ரூபாய் கொள்ளை
அடிக்கப்பட்டிருக்கிறது.

உள்நோக்கத்தோடு அவர்கள் எப்படியெல்லாம் இருந்தார்கள்
என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். ஓரியன் கெமிக்கல்ஸ்
நிறுவனத்திலிருந்து 10 ஆயிரம் லிட்டர் சாராயத்தை ரெக்டி

பைட் ஸ்பிரிட்டை உமா டிஸ்டில்லரீஸ் என்ற கற்பனையில் உருவாக்கப்பட்ட நிறுவனத்திற்கு பிளண்டிங் இல்லாத ஒரு நிறுவனத்திற்கு, பெயரளவில், லெட்டர் பேட் அளவில் உமா டிஸ்டில்லரீஸ் என்று வைத்திருந்த நிறுவனத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு எவ்வளவு நட்டம் ஏற்பட்டிருந்தாலும் அவர்களுக்கு இதனாலே கிடைத்த லாபம் எவ்வளவு என்பதை இந்த நாட்டு மக்கள் கணக்குப் போட்டுப் பார்க்கவேண்டும்.

நான் இதையெல்லாம் சொல்கிறபோது அவர்களுக்குக் கோபம் வரத்தான் செய்யும். 1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே ஓரியன் கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து ஹைதராபாத்திலே இருக்கின்ற பேரமவுண்ட் கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்திற்கு 7 ஆயிரம் லிட்டர் சாராயத்தை அரசாங்கத்தின் கணக்கிலே கொண்டுவராமலே அனுப்பியிருக்கிறார்கள். அதுவும் கண்டுபிடிக்கப்பட்டு அது சம்பந்தமாக இன்றைக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. இப்படி அன்றைய ஆட்சியாளர்கள் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாக 5 நிறுவனங்களின் காமதேனுவாக அமைந்திருந்தது. அவைகளால் 61 லட்சத்து 77 ஆயிரத்து 325 லிட்டர் சாராயத்தை அன்றைக்கு அரசாங்கத்தின் அனுமதி யில்லாமல் செய்கிற சூழ்நிலையை ஆட்சியிலே இருந்தவர்கள் திட்டமிட்டுச் செய்தார்கள். அதை அன்றைக்குக் கோடிட்டுக் காட்டியபோது அப்படி நடைபெறவில்லை என்று மன்றத்திலே சொன்னார்கள். பின்னாலே ஏற்றுக்கொள்கிற சூழ்நிலை ஏற்பட்டது. உள்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டத் திருத்தம் என்று சொல்கிறார்கள், ஆனால் இவைகளை யெல்லாம் அவர்களோடு அணி சேர்ந்திருக்கிற இந்த மன்றத்திலே பணியாற்றிய மாண்புமிகு திரு. நெடுமாறன் அவர்கள் தன்னுடைய மனுவிலே இவைகளைக் குறிப்பிட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தந்தார்கள். அதை ஏற்றுக்கொண்டு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

இப்படிப் பல்வேறு வகைகளிலே சாராயம் மூலமாகவும் மதுவிலக்குத் துறை மூலமாகவும் பணம் பண்ணலாம், கட்சியை அதன் மூலம் வளர்க்கலாம் என்று திட்டமிட்டு அன்றைக்கு ஆண்டவர்கள்தான் இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தைக் குறைகூறி ஆளுங்கட்சிக்குப் பயனுள்ளதாக இது இருக்கும் என்று குறிப்பிடுகிறார்கள்.

இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவருவதற்குக் காரணம் ஒரு குறிப்பிட்ட தொகைக்குக் குறைவான தொகைக்கு ஏலம் எடுக்கிற நிலை ஏற்படுகிறபோது மறு ஏலம் போடுவதற்காக காலம் ஏற்படுகிறபோது அந்த 3. 4 மாத காலத்திலே பக்கத்திலே உள்ள அவர்கள் கடையிலேயே வியாபாரத்தை அதிகப்படுத்திக்கொண்டு அரசாங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்துகிற நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல, சில கடைகளைப் பொறுத்த வரையிலே நீதிமன்றத்திலே ஸ்டே வாங்குகிற காரணத்தினாலே அந்தக் காலத்திலே பக்கத்திலே இருக்கிற கடைகள் மூலமாக லட்சக்கணக்கான ரூபாய் கொள்ளை



யடிக்கலாம் என்ற நிலை இருக்கிற காரணத்தினால் அவைகளை யெல்லாம் தடுக்கவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்திலே ஒரு வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சாராயக் கடைகளை ஏஜண்ட்கள் மூலமாக நடத்தும்போது ஒலி பெருக்கிகள் வைக்கக்கூடாது என்று கடுமையான சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். ஒலிபெருக்கியோ அல்லது டேப் ரெக்கார்டர் மூலமாக ஒலிபரப்புவதோ இசை வெளியிடுகின்ற எந்தக் கருவியுமோ அனுமதிக்கப்படக் கூடாது என்ற நிலைமையைக் கடுமையாக அமலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதை ஒரு பெரிய ஆடம்பரமான, கேலிக்குரிய இடமாக வைத்துக் கொள்ளக்கூடாது. எனவே, அது சம்பந்தமாக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்தை ஆதரித்து, இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்று விடைபெறுகிறேன், நன்றி.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள், அரசாங்கமே சாராயக் கடைகளை நடத்துவதற்கான அனுமதியைக் கேட்டுக் கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்டத்தை வன்மையாகக் கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இதே அவையில் ஏற்கனவே சில கருத்துக்களை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். என்றாலும்கூட, அவைகளையும் இந்தத் தொடர்பிலே நினைவுபடுத்தி, இதற்கு மேலும் உள்ள கருத்துக்களைச் சொல்வது என்பது முறை என்று கருதி, ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதால் அவைகளையும் இங்கே மீண்டும் நினைவூட்ட வேண்டியவனாக இருக்கிறேன். இங்கே கொண்டு வரப்பட்டிருக்கும் சட்டம், ஏற்கனவே சொன்னதைப் போல டெண்டர் மூலமாக அல்லது ஏலத்தின் மூலமாக கிஸ்தி கட்டி, தனியார் உரிமம் பெற்று சாராயக் கடைகளை நடத்தலாம் என்பதை ரத்து செய்துவிட்டு இனி அரசாங்கமேதான் நியமன ஏஜண்டுகள் மூலம் அல்லது கார்ப்பரேஷன் ஊழியர்கள் மூலம் இந்தச் சாராயக் கடைகளை நடத்துவதற்கான அனுமதி வேண்டுமென்றுதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது.

இதிலே உள்ள ஒரு முக்கியமான கொள்கை ரீதியான பிரச்னையைப் பற்றி ஏற்கனவே சொன்னேன். திரும்பவும் அதைச் சொல்ல விரும்புகிறேன். குடி குடியைக் கெடுக்கும் என்று இந்தச் சர்க்கார் பிரச்சாரம் செய்கிறது. குடி குடியைக் கெடுக்கும் என்று பிரச்சாரம் செய்துவிட்டு என்ன செய்கிறார்கள்? இன்னொன்றையும் இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஏறத்தாழ 1 கோடியே 35 இலட்சப் ரூபாய், பட்ஜெட்டிலே, குடி குடியைக் கெடுக்கும் என்று பிரச்சாரம் செய்வதற்காக

ஒதுக்கப்பட்டு இருக்கிறது. நான் கேட்க விரும்புகிறேன், ஏறத்தாழ 1 கோடியே 35 இலட்சம் ரூபாயை, குடி குடியைக் கெடுக்கும் என்று பிரச்சாரம் செய்வதற்காக பட்ஜெட்டிலே நிதியை ஒதுக்கிவிட்டு, இதிலே இன்னொரு வேடிக்கை என்ன வென்றால், ஆடிட் ரிப்போர்ட்டிலே 90 இலட்சம் ரூபாய் களை, ஒதுக்கப்பட்ட தொகையை அந்தப் பிரச்சாரத்திற்காகச் செலவிடாமல் சரண்டர் செய்திருக்கிறார்கள் என்ற தகவல் சொல்லப்பட்டிருக்கிறது.

நான் கேட்க விரும்புகிறேன், மதுவிலக்கை அமல் நடத்து வோம் என்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று அண்ணா சதுக்கத்தின் முன்னாலே, அண்ணா சமாதியின் முன்னாலே போவதும், நாவலர் அவர்கள் வாசிப்பதும், மற்றவர்கள் அதைத் திரும்பச் சொல்வதும், மது விலக்கை அண்ணா வழியில் அமல் நடத்துவோம் என்று சொல்வதும், பிறகு இன்னொரு புறத்திலே சர்க்கார் நியமன ஏஜண்டுகளோ அல்லது கார்ப்பரேஷன் ஊழியர்களோ சாராயக் கடைகளை நடத்துவது என்று சொல்வதும் என்றால் இதற்குப் பெயர் கொள்கை முரண்பாடு இல்லையா என்றுதான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்வது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். மது விலக்கில் முதலமைச்சரவர்கள் எந்த அளவிற்கு அக்கறை கொண்டவர்கள் என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஒரு கூட்டத்தில் முதலமைச்சர் சொன்னார். ஒரு திருமண விழாவில் திடீரென்று மணமகள் எழுந்து ஓடி விட்டாளாம். என்ன காரணம் என்று கேட்டால், மாப்பிள்ளை சாராயம் குடித்து இருக்கிறார், சாராயம் குடித்த மாப்பிள்ளையை மணமகனாக ஏற்க மாட்டேன், அவருக்கு மாலையிட மாட்டேன், தனக்கு அந்தத் திருமணம் தேவை யில்லை, சாராயம் குடிக்கின்ற மாப்பிள்ளை தேவையே இல்லை, இப்படிப்பட்ட விழா அவசியமில்லை என்று சொல்லிவிட்டாள். அந்த உத்தமப் பெண்மணியைத் தேடிக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். இப்படிப் பாமரத்தனமான மக்கள் மத்தியிலே இந்தப் பிரச்சாரத்தை நம்முடைய முதலமைச்சர் செய்து மதுவிலக்கில் தாங்கள் எவ்வளவு உறுதியாக இருக்கிறோம் என்பதைக் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இப்படியெல்லாம் பிரச்சாரம் செய்துவிட்டு, காருண்யத்தைக் காப்பாற்றுவேன் என்று சொல்லிவிட்டுக் கசாப்புக் கடைகளைத் திறப்பதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்பதைப் போல் கேட்கிறீர்கள். இதில் ஏதாவது கொள்கை உண்டா? இப்படிச் செய்வது முறைதானா? இது இரட்டைப் போக்கு இல்லையா? உங்களுடைய தேர்தல் சின்னம்தான் இரட்டை இலை என்பதற் காக மதுவிலக்குக் கொள்கையிலேயும் இரட்டை நிலை எடுப்பது என்பது எந்தவிதத்திலே நியாயம் என்றுதான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



அடுத்து, மிக முக்கியமான ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். தயவு செய்து தவறான தகவல்களை அமைச்சர் பெருமக்கள் தராதீர்கள். ஜனதாக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகின்ற பொழுதும், நான் பேசுகின்றபொழுதும் ஒரு கருத்தைச் சொன் னோம். 1985 ஆம் ஆண்டில் வருகின்ற செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி முதல் மது விலக்கை அமல் நடத்துவோம் என்று முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள் என்று சொன்னோம். ஆனால், நீங்கள் சிறிய கட்சியாகப் போய்விட்டீர்கள், எனவே என்ன பேசினாலும் என்ன ஆகப்போகிறது என்ற துணிச்சலில் அமைச்சர் திரு திருநாவுக்கரசு அவர்கள், முதலமைச்சர் அப்படிப் பேசவில்லை என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறான தகவலை அவைக்குக் கொடுக்கக்கூடாது; முதலமைச்சர் இந்த அவையிலே குறிப்பிடவில்லை என்றுதான் சொன்னார்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் ஒப்புக் கொண்டதற் காக நன்றி. வெளியிலே சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதை வேண்டுமானாலும் ஒத்துக் கொள்கிறேன். இந்த அரசாங்கத்திற்கு இந்தச் சட்டசபைக்குள்ளே ஒரு கொள்கை, வெளியிலே ஒரு கொள்கை இல்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னதை தவறாகச் சொல்லக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொன்னேனே தவிர வேறல்ல.

திரு. அ. ரகுமான்கான் : நம்முடைய அமைச்சர் திரு. ப. உ. ச. எடுத்துச் சொல்லியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கொள்கை இந்தச் சட்டத்தின் மூலமாக கொலை செய்யப்படுவது நியாயம்தானா என்பதுதான் என்னுடைய கேள்வி.

இன்னொன்று. இந்தச் சட்டத்தின் பெயரை நீங்கள் மாற்ற வேண்டும். 'மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு' Prohibition (Amendment) Bill, 1985 என்று பெயர் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் சாராயக் கடைகளைத் திறக்க அனுமதி கேட்டுவிட்டு, இது மதுவிலக்கு சட்டம் என்று சொல்வது குருடனைப் பார்த்து கண்ணாயிரம் என்று சொல்வதைப் போல, ஊமையைப் பார்த்து தேன்மொழி என்று சொல்வதைப் போல இருக்கிறது. ஆகவே, மதுவிலக்குச் சட்டம் என்பதற்குப் பதிலாக சர்க்கார் சாராயத்தை விற்க அனுமதிக்கிற சட்டம் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். இவ்வளவும் செய்துவிட்டு நீங்கள் மதுவிலக்குச் சட்டம் என்று சொல்வது எந்த விதத்திலும் நியாயம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு விஷயம், அரசாங்கத்திற்கு வருமானம் இல்லாமல் போய்விடுகிறது; காரணம் ஏலம் எடுப்பவர்கள் சிண்டிகேட்டாக சேர்ந்து கொண்டு, கொலூஷனாகச் சேர்ந்து கொண்டு குறைந்த விலைக்கு ஏலம் எடுப்பதாலே சர்க்கார் மீண்டும் ஏலம் விடவேண்டியதாக இருக்கிறது, புதுக்கடைகளைத் திறக்கவேண்டியதாக இருக்கிறது. ஆகவே, சர்க்காருக்கு வருவாய் நட்டம் என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவரை நான் கேட்கிறேன், போன ஆண்டு இந்த ஏலத்தின் மூலமாக, டெண்டர் மூலமாக இந்தச் சர்க்காருக்கு எவ்வளவு வருமானம்? அதற்கு முந்தைய ஆண்டு எவ்வளவு வருமானம்? ஏலமும் டெண்டரும் இருந்தபொழுது எவ்வளவு வருமானம்? தொடர்ந்து வருமானம் கூடியிருக்கிறதா, குறைந்திருக்கிறதா? அமைச்சர் அவர்களிடத்திலே புள்ளி விவரம் இருக்கிறது; இந்தச் சபையிலே வைக்க வேண்டுமென்று நான் கேட்கிறேன். இந்த ஆண்டு வருமானம் குறைந்திருப்பது என்று சொல்வதுகூட உண்மைதானா? நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சில பேர்கள் கிஸ்தி பாக்கி கட்டவில்லை. சில வார்த்தைகள் சொல்வதற்காகக்கூட நம்முடைய அமைச்சர்கள் கோபித்துக் கொண்டார்கள், வருத்தப்பட்டுக் கொண்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால், நம்முடைய மதிப்பிற்குரிய மின்சாரத்துறை அமைச்சர் சிறந்த திறமை படைத்தவர்; அவருடைய அறிவாற்றல் குறித்து நாம் அறிவோம். இன்னும் சொல்லப் போனால், சாமார்த்தியமாகக் கூட பேசினார், உடையார் எல்லாம் அறிவு உடையார் என்பதைப் போல, அவர்கள் எல்லா விதத்திலும் அந்த வார்த்தையைத் தப்பாகக் கருதிக் கொண்டு பேசினார்கள். ஆனால் நான் சொல்ல விரும்புவது, பல பேர்கள் இன்றைக்கு கிஸ்தி கட்டவில்லை. நான் கேட்க விரும்புகிறேன், கோடிக்கணக்கான ரூபாய் இன்றைக்குக் கிஸ்தி கட்டாமல் இருக்கிறார்களே அதற்கு என்ன காரணம்? நீங்கள் வசூலிக்கின்ற முயற்சியைச் சரியாக எடுத்திருக்கிறீர்களா? அவர்கள் சொல்கின்ற காரணம், எங்களுக்குச் சரியாக சப்ளை செய்யவில்லை என்பது. நான் கேட்க விரும்புகிறேன், சரியாக சப்ளை செய்யாததற்கு என்ன காரணம்? இன்னும் சொல்லப் போனால், அந்தக் காரணத்தை வைத்துக் கொண்டு, அவர்கள் இன்றைக்குக் கிஸ்தித் தொகையை முழுமையாகக் கட்டாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியதற்கு இந்தச் சர்க்காரை நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன். இன்னும் சொல்லப் போனால், அரசாங்கத்திற்கு வருமானத்தில் அக்கறை இருப்பதாகச் சொல்கிறார்கள். அது உண்மை அல்ல என்பதற்கு உதாரணம், நீங்களே கொடுத்திருக்கக்கூடிய ஆடிட் ரிப்போர்ட். அதை இந்த அவையிலே மேசை மீது வைத்திருக்கிறீர்கள். நான் அதை படித்துப் பார்த்தேன். துணை சபாநாயகர் அவர்களே, அதைப் படிக்க நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கிருஷ்ணகிரி மற்றும் அதைப் போலவே, உத்தமபாளையம் இந்த இரண்டு இடங்களில், 4 சாராயக் கடைகளில் 1981–82 ஆம் ஆண்டிற்கு அவர்கள்



ரென்டல் அரியர்ஸ் கொடுக்காத காரணத்தாலே, சர்க்காருக்குக் கொடுக்காததாலே, ரூ. 7,52,850 சர்க்காருக்கு நட்டம். அதிலே, வேடிக்கை என்ன என்று கேட்டால், அந்தத் தொகையை அரசாங்கம் வசூலிக்கவில்லை.

"...In Krishnagiri and Uthamapalayam, on default by the licensees in payment of rentals, four shops were resold in the year 1981-82 at a loss of Rs.7.52,850 but the said amount was not demanded from the defaulting licensees. The omission was pointed out in audit in January 1984 and February 1984; the reply of the department is awaited....."

என்ன காரணம்? கிருஷ்ணகிரியிலும் உத்தமபாளையத்திலும் 4 சாராயக் கடைக்காரர்கள் ரூ. 7 இலட்சத்துக்கு மேல் கொடுக்காமல் ஏமாற்றி இருக்கிறார்களே, நான் கேட்கிறேன், தனிப்பட்ட ஏஜெண்டுகள் மூலம் சாராயக் கடைகளை நடத்தினால் எங்களுக்கு இலாபம் வரும் என்று சொல்கிறீர்களே, இதுகுறித்து இந்தச் சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்குப் பின்னால் இருக்கக்கூடிய மர்மம் என்ன? அதைத்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தச் சர்க்கார் மீது நான் பகிரங்கமாக குற்றம் சாட்ட விரும்புகிறேன். இதற்கு ஆதாரம் அந்த ரிப்போர்ட், பக்கம் 58. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் படித்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

(முற்பகல் 11–40)

அது மட்டுமல்ல, அரசாங்கத்திற்கு வருமானம் வரவில்லை என்று நீங்கள் ரொம்பவும் கவலைப்படுவதாகச் சொல்கிறீர்களே, அது உண்மை தானா? உள்நோக்கம் வைத்து பேசுவதாகக் கூட எனது அருமை நண்பர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். நான் உள்நோக்கம் வைத்துப் பேசவில்லை. சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு இருக்கவேண்டும் என்பது என்னுடைய வாதம். உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்த சாராயக் கலவை ஆலைகளைப்பற்றி 1983–84 ஆம் ஆண்டு ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிறார்கள். சாராயத்தை பாட்டில்களில் அடைப்பதற்கு கொடுக்கப்பட்டதில் ஏறத்தாழ 98,000 லிட்டர் சாராயம் வீணாகி விட்டதாம். சாராயத்தை விற்றுவிட்டு, வீணாகிவிட்டது என்று சாராயத்தை பாட்டில்களில் அடைப்பவர்கள் ஏமாற்றியிருக்கிறார்கள். 98,000 லிட்டர் சாராயம் வீணாகிவிட்டது என்கிறார்கள். இதனால் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டம்? வரி விதிக்கப்பட வேண்டிய தொகை ஏறத்தாழ 3,94,472 ரூபாய் வீணாகிவிட்டது என்று சொல்லப்பட்ட சாராயத்திற்கு லெவி விதிக்க வேண்டிய தொகை இது. ஆனால்

அதற்கு மாறாக, அவர்கள் வேஸ்டாகிவிட்டது என்று சொன்னதைப்பற்றிக் கவலைப்படாமல், அதை அப்படியே விட்டு விட்டார்கள் இந்த அரசாங்கம், அரசாங்க அதிகாரிகள் என்கிற குற்றச்சாட்டு இந்த ரிப்போர்ட் வாயிலாக வெளிவந்திருக்கிறது.

அது மட்டுமல்ல. இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மிகப்பெரும் வேடிக்கை, கொடுமையானது என்னவென்றால் மொலாசிஸ் பற்றிய 1961 ஆம் ஆண்டு சட்டம் (மொலாசிஸ் கன்ட்ரோல் ஆக்ட்) இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி சர்க்கரை ஆலைகளில் மொலாசிஸ் எவ்வளவு இருப்பு இருக்கிறது என்ற விவரத்தைப் பார்ப்பதற்காக அங்கே சென்று சோதனையிடுகிறார்கள். 7, 8 ஆலைகளில் சென்று அதிகாரிகள் பரிசோதிப்பதற்குச் சொல்கிறார்கள். எவ்வளவு மொலாசிஸ் இருக்கிறது, எவ்வளவு எரிசாராயமாக ஆக்கியிருக்கிறார்கள் என்ற கணக்கைப் பார்க்க வேண்டும், ரிக்கார்டுகளைக் கொடுங்கள் என்று கமிஷனர் ஆஃப் ப்ரொகிபிஷன் அவர்களே கேட்டிருக்கிறார்கள். ரிக்கார்டு கொடுக்கப்படவில்லை. 7, 8 தடவை கடிதம் எழுதியிருக்கிறார்கள். இருந்தாலும் இதுவரையில் அந்த ரிக்கார்டுகள் கொடுக்கப்படவில்லை. கமிஷனர் ஆஃப் ப்ரொகிபிஷன் அவர்கள் இதுவரை ரிக்கார்டுகளைத் தரவில்லை என்று சொல்கிறார்கள். அதனால் எவ்வளவு சாராயம் விற்றார்கள் என்ற விவரமும் தெரியாது. சர்க்கார் அதற்கு விதிக்கக்கூடிய தீர்வையையும் விதிக்க முடியாமல் போய்விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.

Report of the Comtroller and Auditer General of India for the year 1983-84 (Revenue Receipts): Page 54: "7.2. Non-production of records to audit:(1)The records required to be maintained under the Molasses Control Order. 1961, were examined in a few sugar factories in the State in February and March 1982. The connected records in the office of the Commissioner of Prohibition and Excise and the Molasses Controller were asked for in audit in March 1982. But the department refused to produce the records to audit. No reasons were given. The fact of non-production of records was reported to the dapartment in April, May, June, July and September 1982 and to Chief Secretary to Government.

இந்தத் தகவலை தலைமைச் செயலாளருக்கும் பலமுறை தெரிவித்திருக்கிறார்கள். அதன் பிறகும் கூட அந்த ரிக்கார்டுகள் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரையில் கிடைக்கவில்லை. "....Because of the non-production of the records, the extent of molasses which was not accounted for by the department and because of which excise duty was not realised by the department" ஆக, எந்த அளவுக்கு தீர்வை விதிக்க வேண்டுமோ அந்த அளவிற்குத் தீர்வை விதிக்க முடியாமல் போய்விட்டது என்று சொல்கிறார்கள்,





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது குறுக்கிட வேண்டாம் என்றுதான் இருந்தேன். ஆனால் அவர்கள் தணிக்கை அறிக்கையில் இருந்து பகுதி பகுதியாக எடுத்துச்சொல்லி வருகிறார்கள். தணிக்கை அறிக்கை வந்த பிறகு அந்த அந்தத் துறையிலிருந்து விளக்கங்களைப் பெற்று பொதுக் கணக்குக்குழு (பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டி) ஆய்கிறது. அவற்றை ஆராய்ந்து அறிந்த பிறகு, அரசாங்கத்தினுடைய பதில் திருப்தி இல்லையென்றால், அவர்கள் அளிக்கின்ற பரிந்துரை சட்டமன்றத்திற்கு வரும். ஆகவே, அதுபற்றி மீண்டும் விளக்கம் கேட்டு, சமாதானம் பெறுவதற்கு இந்த மன்றத்திற்கு பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டி மூலம் முழு அதிகாரம் இருக்கிறது, உரிமை இருக்கிறது. அதனால்தான் பொதுக் கணக்குக் குழுவிற்கு எதிர்க்கட்சித் தலைவர்களை தலைவராகப் போடுகிறோம். ஆகவே, இப்போதே அதுபற்றித் திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருந்தால் டிபார்ட்மென்டிலிருந்து பதில் வாங்கி இங்கேதான் கொடுக்கவேண்டி இருக்கும். பொதுக் கணக்குக் குழுவிலிருந்து இது பின்னர் சட்டமன்றத்திற்கு வரும் சூழ்நிலை இருக்கிறது. பொதுக் கணக்குக் குழு அறிக்கை கொடுத்த பிறகு அதிலே காட்டப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்திப் பேசுவது என்றைக்கும் பயன் உள்ளதாக இருக்கும். அதுமட்டுமல்லாமல் இதைத் தவிர அவருக்குத் தெரிந்த வேறு குறைபாடுகள் எவையேனும் இருக்குமானால் அவற்றை எடுத்துச் சொல்வார்களானால் அது இந்த அரசுக்கும் பயன் உள்ளதாக இருக்கும், ஆனால் ஏற்கெனவே மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையே திரும்பத் திரும்பச் சொல்வதால் பயன் இல்லை என்பதற்காகத்தான் குறிப்பிடுகிறேனே தவிர வேறல்ல.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் அறிவீர்கள், இந்த மன்றத்தில் ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட் வைக்கப்பட்டவுடனே அது ப்ராப்பர்ட்டி ஆஃப் தி ஹவுஸ் ஆக ஆகிவிடுகிறது. எனவே அதிலே இருக்கக்கூடிய கருத்துக்களை எடுத்துச் சொல்வது எங்களுடைய உரிமை....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசலாம். நான் பேசக்கூடாது என்று சொல்லவில்லை. அதைப் பற்றி விரிவாக விளக்கம் பெறுவதற்கான வாய்ப்பு பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டியில் இருக்கின்றது.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் அரசாங்கம், அரசாங்கத்திற்கு வருமானம் வரக்கூடிய காரியங்களைச் செய்து வருகின்றது, அதில் அக்கறை உள்ள அரசு என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. ஆனால் ஆடிட்டர் ஜெனரல் அவர்களுடைய ரிப்போர்ட்டில் இது போன்ற காரியங்களில் அரசாங்கம் தவறாக நடந்திருக்கின்றது என்று........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏ. ஜி. ரிப்போர்ட்டிலே இதைப் பற்றி பாயின்ட் அவுட் பண்ணிக் காட்டியிருக்கிறார்கள் என்றால் அதுபற்றி கன்சிடேரஷன், கமிட்டியிலே வரப் போகின்றது என்றுதான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது வந்ததற்குப் பிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தோடு மட்டுமல்ல. அரசாங்கம் தருகின்ற சமாதானங்களின் காரணமாக பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி சிலவற்றை ட்ராப் பண்ணிவிடுவார்கள். அதற்குப் பிறகுதான் குறைபாடுகள் இருக்கின்றன என்று கொண்டு வருவார்கள். எனவே இப்போது கவர்ன்மென்டிலே இருந்து இதற்குப் பதில் வாங்க வேண்டியது பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டியினுடைய வேலை.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத்துணைத் தலைவரவர்களே, பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டிலே இந்த கேள்விகளுக்கெல்லாம் என்ன பதில், எஸ்டிமேட்ஸ் கமிட்டியிலே இவைகளுக்கெல்லாம் என்ன பதில் என்பதெல்லாம் வேறு விவகாரம். நான் அதற்குள் போக விரும்பவில்லை. இந்தச் சபையிலே தெரிவித்திருக்கக்கூடிய கருத்துக்களின் அடிப்படையில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்தச் சபையிலே அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் அதிகாரிகள் துணையோடு. எனவே இதுபோன்ற தவறுகள் நடைபெறுகின்றபோது அதற்கு அரசாங்கத்தினுடைய பதில் என்னவென்று கேட்டால் சட்டசபையில் இதற்கு பதில் சொல்ல மாட்டோம். பொதுக்கணக்குக் குழுவில்தான் விவரம் கொடுப்போம், பொதுக்கணக்குக் குழுவில்தான் பதில் சொல்வோம் என்பது உங்கள் விருப்பம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, பதில் சொல்லமாட்டேன் என்று சொல்லவில்லை. பதில் பெறுவதற்கான வாய்ப்புகள் அங்கே இருக்கின்றன என்றுதான் சொன்னேன்.

திரு. அ. ரகுமான்கான்: சட்டமன்றத்திலும் பதில் சொல்வதற்கான வாய்ப்பு உண்டு. மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் பொதுக் கணக்குக் குழுவிலே இருக்க முடியாது. அது வேறு விவகாரம். இன்னும் சொல்லப் போனால் அங்கே நீங்கள் சொல்கின்ற சமாதானங்கள் சரியா, தவறா என்று அந்த உறுப்பினர்கள் ஆய்வு செய்யட்டும், பரிசீலிக்கட்டும். அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் இப்போது நான் சொல்ல விரும்புவது இந்த ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசின் வருமானத்தைப்பற்றிக் கவலைப்படாமல் வேண்டியவர்களுக்கு சலுகைகளோ அல்லது முறைகேடுகளோ இருக்கக்கூடிய அச்சத்தை உருவாக்கக்கூடிய விதத்தில் நடைபெற்றிருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் படிக்கின்றபோது மொலாஸஸ் கணக்குகளை எல்லாம் அரசாங்கத்திற்குக் கொடுக்கவில்லை சாராய உற்பத்தி செய்பவர்கள் என்று ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டிலே இருக்கின்றது என்று சொன்னார்கள். மொலாஸஸ் கணக்குகளை யார் கொடுக்கவில்லை என்பதைச் சரியாகப் படித்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாராய உற்பத்தியாளர்கள் கொடுக்கவில்லையா அல்லது உற்பத்தி செய்கின்ற ஆலைகள் கொடுக்கவில்லையா? இதனை விளக்கமாகச் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் தெளிவாகவே சொல்கிறேன். 'The connected records in the Office of the Commissioner of Prohibition and Excise and the Molasses Controller were asked for in audit in March 1982. But the Department refused to produce the records to audit.' என்று இருக்கிறது. நான் சொல்ல விரும்புவது மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையில் இருக்கக்கூடிய சமிஷனர் ஏற்கெனவே இருக்கக்கூடிய ... (குறுக்கீடுகள்) .. மொலாஸஸை ஸ்பிரிட்டாக மாற்றிவிட்டார்கள். தீர்வை விதிக்கப்பட்டிருக்கின்றது என்று தகவல்....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் மறுபடியும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆங்கிலத்தில் எம்.ஏ.பி.எல். படித்தவர்கள். நான் சாதாரண மானவன், படிக்காதவன். மொலாஸஸ் கணக்கைக் கொடுக்கவில்லை என்று இருக்கிறதா? அல்லது சாராயக் கணக்கு கொடுக்கவில்லையா .... (குறுக்கீடு) எனக்கு இங்கிலீஷ் தெரியாது.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவரவர்களே, ஆங்கிலம் தெரியாது என்று ப.உ.ச. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவரைப்போல் எனக்கும் பேச முடியும். நான் ஆங்கிலத்தில் படித்தால் அவருக்குத் தெரியாது என்று...... (குறுக்கீடு) ஆங்கிலம் தெரியாது என்று சொல்லிவிட்டு நான் ஆங்கிலத்தில் வாசித்ததைத் தவறாக வாசித்துவிட்டேன் என்று பொருள்பட எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும் பரவாயில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, அவர் தவறாக வாசித்ததாக நான் சொல்லவே இல்லை. நான் சொல்லியதெல்லாம் அவர் வாசித்ததில் சாராய உற்பத்தியாளர்கள் மொலாஸஸ் கணக்கைக் கொடுக்கவில்லையா (குறுக்கீடு) தலையில் அடித்துக்கொள்ளாதீர்கள். எங்களுடைய தலையெழுத்தே இப்படித்தான் இருக்கின்றது. சாராய உற்பத்தியாளர்கள் கணக்கு கொடுக்கவில்லையா, மொலாஸஸ் உற்பத்தியாளர்கள் கணக்கைக் கொடுக்கவில்லையா என்பதை மட்டும் தெரிந்து கொள்வதற்காகத்தான் நான் கேட்கிறேன்.

(முற்பகல் 11-50)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவையற்ற பிரச்னைகளைப் பேசி அவையை திசை திருப்புவதற்காக நான் வருத்தப்படுகிறேன். காரணம் நான் சொல்லிவிடுகிறேன். இங்கே நான் பேச வந்தது, அரசாங்கம் தனக்கு வருமானம் குறைகிறது, பலர் ஏமாற்றுகிறார்கள் என்ற காரணத்தினாலேதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது என்று சாராயக் கடை சம்பந்தமாக இந்த பில்லிலே ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸிலே சொல்லியிருக்கிறார்கள்.

நான்கு கடைகள் ரென்டைக் கொடுக்க முடியாமல் ஏமாற்றியபோது, அதை அரசாங்கம் ஏன் வசூலிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை முதலிலே சொன்னேன். இரண்டாவதாகச் சொல்கிறபோது. வேஸ்டேஜ் என்று சொல்லி சாராய ஆலைகளின் அதிபர்கள் ஏமாற்றியிருக்கிறார்கள் அதற்காக விதிக்க வேண்டிய தொகையே பல இலட்சம் ரூபாய். அதையும் அரசாங்கம் விதிக்கத் தவறிவிட்டது என்று இரண்டாவது குற்றச்சாட்டை சொன்னேன். மூன்றாவது குற்றச்சாட்டைச் சொல்கிறபோது தெளிவாகச் சொன்னேன். மொலாசிஸ்—பாகு சம்பந்தமாக, கழிவு சம்பந்தமாகப் பேசுகிறபோது சொன்னேன், அரசாங்கம் உண்மையான கணக்கை—மொலாசிஸ் இவ்வளவு வைத்திருந்தார்கள் என்ற விவரத்தைத் தெரிந்திருக்குமானால் அதற்கு ஒரு தீர்வு எடுத்திருக்க முடியும். இரண்டாவதாக அவர்கள் அதை ஸ்பிரிட்டாக மாற்றி என்ன செய்தார்கள் என்ற விவரத்தையும் புரிந்திருக்க முடியும்....(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் மன்னிக்க வேண்டும் நான் அதைத்தான் கேட்டேன். எனக்குச் சரியாகப் புரியவில்லை. எனக்குப் புரிய வைக்க வேண்டுமென்று தான் கேட்டுக்கொள்கிறேன். யார் அதைச் சாராயம் ஆக்குகிறார்கள் என்பது வேறு விஷயம். அந்தக் கணக்கை யார் சரியாக வைக்கவில்லை யார் வைத்திருக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள் என்றுதான் விளக்கிச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: சில ஷுகர் பேக்டரிஸ்-சர்க்கரை ஆலைகள்-என்று இதிலே தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைத்தான் நான் கேட்டேன், சர்க்கரை ஆலைகள் மொலாசிஸ் கணக்கை அரசாங்கம் கேட்டதற்கு சரியாகக் கொடுக்கவில்லை. சாராய உற்பத்தியாளர்களுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?



திரு. அ. ரகுமான்கான்: நான் வாசிக்கிறேன், தங்களுடைய அனுமதியோடு. மிகத் தெளிவாக இருக்கிறது.

The records required to be maintained under the Molasses Control Order 1961, were examined.

இதிலே 'were examined'. என்று அதாவது பரிசீலிக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். 'The records required to be maintained under the Molasses Control Order 1961, were examined in a few sugar factories in the State in February and March 1982. என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1982 ஆம் ஆண்டிலே அவர்கள் மொலாசிஸ் சம்பந்தமான ரிக்கார்டுகளை..

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த ஷுகர் பேக்டரிஸ் என்பதை முதலிலே படித்தபோது படிக்கவில்லை. அதைத்தான் சொன்னேன்.

திரு. அ. ரகுமான்கான்: அப்பொழுது நான் அதைப் படிக்கவில்லை என்றும் கடைசியாக இப்பொழுது படித்ததற்குப் பிறகு விளங்குகிறது—ஆங்கிலத்திலே படித்திருந்தாலும் என்றும் சொன்னதற்காக நன்றி....

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: ஆனால் அதைப் படிக்கும்போது. distorted version இருக்கக்கூடாது. ஆங்கிலமே தெரியாது என்று ஒரேயடியாக நான் என்னை முட்டாளாக்கிக் கொள்ள விரும்பவில்லை. நான் உங்களைப் போல எம்.ஏ.பி.எல். படிக்கவில்லை என்று சொன்னேன், 'distorted' ஆகப் படிக்கக்கூடாது. இருப்பதைப்படிக்க வேண்டும். கொஞ்சம் விட்டுவிட்டு படிக்கக்கூடாது. அது முறையல்ல. அது இந்த அவைக்கு தவறான தகவலைக் கொடுப்பதாகும் என்று சொன்னேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எனவே நான் சொல்லிய ஆடிட் ரிப்போர்ட், என் பதிலே உள்ள அந்த விவரங்களுக்கு நமது அமைச்சர் அவர்களின் கைவசம் பதில் இருக்குமானால் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஆனால் வருமானத்தைப் பற்றி இந்த அரசு கவலைப்படக்கூடிய நிலையில் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டத்தான் அவைகளைக் கோடிட்டுக் காட்டினேன்.

இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சென்னையிலே ஏறத்தாழ 100-150 சாராயக் கடைகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்களிடத்திலே தகவல்கள் இருக்கிறதோ என்னவோ, இது பொதுக் கணக்கு கமிட்டியிலே பேசப்பட வேண்டிய விஷயம் இல்லை, சட்டசபையிலே பேசப்பட வேண்டிய விஷயம்தான். இதற்குப் பதில் அங்கே கிடைக்காது. 22 கடைகள் கிஸ்தி கட்டவில்லை. ஆனால் திடீரென்று ஒரு உத்தரவு போடப்படுகிறது. அந்த 22 பேர்களும் முதலில் கடைகளை ஏலம் எடுத்துவிட்டு திரும்பவும் எங்களால் கடை நடத்த முடியாது என்று சொல்லி

யிருக்கிறார்கள். ஆனால் கட்டவேண்டிய கிஸ்தி பாக்கி மீண்டும் அவர்களிடத்திலிருந்து வசூலிக்கப்பட்டதா என்றால் கிடையாது. அதற்குப் பதிலாக அந்த 22 கடைக்காரர்களுக்கும் ஏதோ சமாதானம் சொல்லி ஒரு ஜி.ஓ. போட்டு அவர்கள் கட்டிய கிஸ்தி பணத்தை அப்படியே திருப்பி கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் ஊட்டியிலே ஒரு சம்பவம். அதற்கு நானே வழக்கறிஞராக வாதாடினேன். சாராயக் கடை நடத்தக் கொடுத்த ஏலத்திலே, அந்த இடம் சரியாக வரவில்லை. அந்த இடத்திலே அது இருப்பது சரியாக இல்லை என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கூட அந்தக் கிஸ்தி தொகையை பல லட்சம் ரூபாயை கட்டியே தீர வேண்டும் என்று பிடிவாதமாக வசூலித்து விட்டார்கள். ஆனால் சென்னையிலே இருந்த அந்த 22 கடைகளுக்கு மட்டும் ஜி.ஓ. போட்டு, கிஸ்தி தொகையும் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன். அரசாங்கம் வருமானத்தைப் பற்றிக் கவலைப்படுகிறபோது நபருக்கு நபர் வேறுபாடு இருப்பது எந்த விதத்திலே நியாயம் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இங்கே 60 கோடி ரூபாய்க்கு மேலே அரசுக்கு செலுத்த வேண்டிய தீர்வையை வசூலிப்பதற்கு என்ன நடவடிக்கையை எடுக்கப் போகிறீர்கள். கோர்ட் நடவடிக்கை இந்த விஷயத்திலே இருக்கிறதா அல்லது என்ன நடவடிக்கையை எடுக்கப் போகிறீர்கள் என்பதையெல்லாம் இந்த சபையிலே நீங்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அடுத்து இன்னொரு மிகப் பெரிய தவறு. இப்போது உடனே அரசாங்கம் சாராயக் கடைகளை எடுத்துக்கொள்ளப் போவதில்லை. அக்டோபர் மாதம் 16 ஆம் தேதி வரைக்கும் இன்னும் 6 மாத காலத்திற்கு பழைய சாராயக் கடை வியாபாரிகளே வியாபாரத்தை நடத்தலாம். செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் 1985 ஆம் ஆண்டுக்குள்ளாக ஒரு மனு கொடுத்து அமைச்சரை சந்தித்து மீண்டும் அந்தக் கடையை நடத்தலாமென்று இருக்கிறேன், எனக்கே கொடுங்கள் என்று கேட்டால் ஆறு மாதத்திற்கு அனுமதி கொடுக்கிறார்கள். அக்டோபர் 16 ஆம் தேதி வரைக்கும் அனுமதி. நான் கேட்கிறேன், வருமானம் இல்லையென்று வருத்தப்படுகிறீர்களே; ஏலம் எடுத்து ஏப்பம் விடுகிறார்கள் என்று சொல்கிறீர்களே இந்த ஆறு மாதத்திலே வருமானம் குறையாதா? இந்த ஆறு மாதத்திலே யாரைப் பார்த்து வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை அமோகமாக செய்கிறீர்கள்? திருடன் வருகிறான் என்று சொல்லி விட்டு கதவைத்திறந்து விட்டால் என்ன நியாயம்? ஆகவே நான் கேட்க விரும்புகிறேன், இந்த ஆறு மாதம் எக்ஸ்டென்ஷன் யாருக்காக? இந்த ஆறு மாதம் எக்ஸ்டென்ஷன் எதற்காக? வருமானம் குறைகிறது அரசாங்கத்திற்கு என்று சொல்லிவிட்டு



இந்த ஆறு மாதத்திலே * * * என்று அவர்களுக்கு உத்தர விடுவதைப் போல இல்லையா? அரசாங்கத்தின் வருமானத்தை இது பாதிக்காதா இந்தப் பிரிவை இணைத்திருக்கிறீர்களே, நியாயந்தானா? முறைதானா தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான விஷயத்தை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏஜன்டைப் பற்றி ஏற்கனவே நான் சொல்லி இருக்கிறேன். அப்போது கூட நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். ஏஜன்ட் என்று சொன்னால் இதன் மூலமாக அதிகார துஷ்பிரயோகம் நடப்பதற்கு வழி ஏற்படுகிறதே என்று சொன்னபோது தங்களுக்கு வேண்டியவர்களுக்கு சாராயக் கடைகளைக் கொடுப்பதற்கு வழி ஏற்படுகிறதென்று சொன்னபோது அமைச்சர் அவர்கள் எழுந்து இதே மன்றத்தில் சொன்னார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருப்பவர்களுக்கு தான் கொடுக்க வேண்டுமென்று சட்டத்திலே எழுதி இருக்கிறதா? ஏன் அப்படி நினைத்துக்கொண்டு பேசுகிறீர்கள்? ஏன் தவறாக உள்நோக்கம் கற்பிக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அவர்களுடைய வாதத்திலே நியாயம் இருக்கிறது. நான் ஒப்புக் கொள்கிறேன். சட்டத்தில் அப்படி இல்லை. ஆனால் ஏஜன்ட் என்று சொன்னால் எப்படி கொடுப்பீர்கள்? சாராயக் கடைகள் ஏறத்தாழ தமிழகம் பூராவும் திறக்கப்படுகிறது. நகரம் கிராமம் முழுவதும் திறக்கப்படுகிறது. ஏலம் இனி யாரும் எடுக்க முடியாது. இதற்கு முன்பு இங்கே இருக்கக்கூடிய எல்லோரும், யார் விரும்பினாலும் பொது மக்கள் ஏலம் எடுக்கலாம். குறைத்தும் கேட்கலாம் கூடுதலாகவும் கேட்கலாம். இனி யாரும் ஏலம் எடுக்க முடியாது. ஏலம் சிஸ்டம், டென்டர் சிஸ்டம் போய்விட்டது.

அப்படியானால் இனி யார் சாராயக் கடைகளை நடத்த முடியும்? அரசாங்கம் எப்படி நடத்தப் போகிறது? யார் மூலமாக நடத்தப் போகிறது? ஏஜன்ட் மூலமாக நடத்தப் போகிறது. அந்த ஏஜன்ட் யார்? அதற்கு என்ன விதிமுறைகள்? இனிமேல் அதற்கான விதிமுறைகளைப் போடுவோம் என்று சொல்கிறீர்கள். நான் கேட்க விரும்புகிறேன், ஏஜன்ட் என்ற அடிப்படையில் எல்லோரும் மனு செய்வார்கள். சரி, மனு செய்தவர்களுக்கெல்லாம் அந்த உத்தரவைப் போடுவது யார்? அதிகாரி. அந்த அதிகாரி யார்? மார்க்கட்டிங் கார்ப்பரேஷன். அந்த மார்க்கெட்டிங் கார்ப்பரேஷன் எங்கே இருக்கிறது? அரசாங்கத்தின் கண்ட்ரோலில் இருக்கிறது. ஆகவே சாராயக் கடைகள் யாருக்குப் போய் கிடைக்கும். தயவுசெய்து சொல்லுங்கள். எங்களுக்கு இல்லை, எல்லாம் பொதுமக்களுக்குத்தான். அதில் என்ன நியாயம் இருக்கிறதோ, என்ன முறைஇருக்கிறதோ, அதைத்தான் பார்த்து நாங்கள் செய்வோம் என்று சொன்னால் நான் கேட்க விரும்புகிறேன். சென்னையில் 150 கடைகள் எடுத்திருக்கிறார்களே, பட்டியலை வெளியிடுங்கள். அதிலே

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஒரு சிலரை நீங்கள் சொல்லலாம். காரணம் என்னவென்றால், பாருங்கள், இந்த இந்த கட்சிக்காரர்களுக்குக் கொடுத்திருக்கிறோம்; இல்லையென்று சொன்னால் நாங்கள் அவர்களுக்கு எல்லாம் கொடுப்போமா? கடத்தல்காரன் கூட சுங்க இலாக்கா அதிகாரிகளிடத்தில் சில பொருள்களை அவர்கள் கையில் கைப்பற்றி போகட்டும் என்று விட்டுவிட்டு, பெரும்பகுதியானவற்றை கடத்திக்கொண்டு போய்விடுவதைப் போல ஒரு அபாயம் இருக்கிறதா, இல்லையா? அந்த அச்சம் எங்களுக்கு ஏற்படுவதிலே என்ன தவறு? ஆகவே அரசாங்கத்திற்கு வருமானம் வருவதற்காகத் தான் இந்தக் காரியத்தைச் செய்கிறோம் என்று நீங்கள் சொல்வது எப்படி நியாயம்?

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, கடத்தல் காரர்கள் கஸ்டம்ஸ் அதிகாரிகளுக்கு ஏதாவது கொடுத்துவிட்டு கடத்திச் செல்கிறார்கள் என்றுசொல்கிறார்கள். அதைப்போல உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது அனுபவம் இருந்தால் அந்த அனுபவத்தைச் சொல்லட்டும்.

திரு. அ ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராமலிங்கம் அவர்கள் வேறு விவகாரத்திற்குப் போகிறார். நான் அதற்கு பதில் சொல்ல விரும்பவில்லை. நாங்கள் பேசுவதாலே உங்களுடைய முடிவுகளை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. எனவே சர்க்கார் சாராயக் கடைகளைத் திறப்பதன் மூலமாக மதுவிலக்குக் கொள்கையை குழி தோண்டிப் புதைக்கிறீர்கள் என்பது முதல் குற்றச்சாட்டு. இதிலே இன்னொரு வேடிக்கை. உறுப்பினர்கள் எல்லோரும் அவசியம் படிக்கவேண்டுமென்று இந்த அரசாங்கத்தில் நாட்குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். நாட்குறிப்பிலே என்ன சொல்லி இருக்கிறார்கள்? இனி மதுவிலக்கு இல்லையெனில் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை—பேரறிஞர் அண்ணா, மது பழக்கம் ஒருவருடைய மனிதத் தன்மையை அழித்து, அவனை மிருகமாக மாற்றி, மனைவி, தாய், உடன் பிறந்தவர் முதலியவர்களைக்கூட பிரித்துணர இயலாதபடி ஆக்குகிறது—காந்தியடிகள் இதனை உறுப்பினர்கள் எல்லோரும் படிக்க வேண்டும், அமைச்சர்கள் உட்பட. ஆனால் நடைமுறை என்ன?

(நண்பகல் 12-00)

சாராயக்கடைகளைசர்க்கார் நடத்த அனுமதி கொடு என்பது. ஆக, மதுவிலக்குக் கொள்கையை, அண்ணாவின் கொள்கையை, நீங்கள் வலியுறுத்திய கொள்கையை, வலியுறுத்திக்கொண்டிருக்கிற கொள்கையை, காமராஜர் படிக்க வைத்தார். கருணாநிதி குடிக்க வைத்தார் என்ற குற்றச்சாட்டுக்களை எல்லாம் சொல்லியதற்குப் பிறகு நான் சொல்ல விரும்புகிறேன், இவ்வளவு குற்றச்சாட்டுகளைச் சொல்லியதற்குப்பிறகு, நாங்கள் உத்தமர்கள் என்று சொல்லிவிட்டு, மதுவிலக்கை நடைமுறைப் படுத்துவோம்என்று சொல்லிவிட்டு, எங்களைத் தப்புச் சொல்லி



விட்டு, எங்களைப் பேசவிட்டு, எல்லோரையும் பேசவிட்டு, இவ்வளவு தப்பு செய்கிறீர்களே, என்ன காரணம்? எங்களுக்கு மக்கள் ஓட்டுப் போடுகிறார்கள், ஆகையினாலே சரி என்று சொன்னால் எந்தவிதத்திலே நியாயம் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்

கடைசியாக நான் உங்கள் மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது எல்லாம், இங்கே ஏஜெண்டுகள் என்று சொல்லி, சாராய சாம்ராஜ்யத்தினுடைய கதவுகளை நீங்கள் வேண்டியவர்களுக்கு திறப்பதற்குப் பதிலாக, படித்த பட்டதாரிகள் 12 லட்சத்திற்கும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுங்கள். காரணம் எங்களுடைய வேண்டுகோளை நீங்கள் ஏற்கப்போவது இல்லை டெண்டரினாலும், ஏலத்தினாலும், லாபங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. இதிலே தவறான கணக்கைச் சொல்லி, சிலருக்கு ஆதாயத்தை செய்வதற்காக இதுபோன்ற காரியத்தை நீங்கள் செய்தாலும் கூட, படித்த பட்டதாரிகளுக்காவது இந்த வாய்ப்பை, வேலையற்றவர்கள் இந்தக் கடைகளை நடத்துகின்ற உரிமையை வழங்குகின்ற விதத்திலே முறைப்படி நீங்கள் பரிசீலனை செய்யலாம். இதிலே கூட நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இன்றைக்கு தனிப்பட்ட முறையிலே விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்டு, அரசாங்கம் அதிகார துஷ்பிரயோகம் பண்ணுகிற ஒரு அபாயம் இருக்கிறது. அரசாங்கத்திற்கு வருமானம் வரவேண்டும் என்ற காரணத்தாலே தான் இதைச் செய்கிறோம் என்று சொன்னார்கள். உங்களை நான் கடுமையாகச் சந்தேகிக்கிறேன். முன்பு இதே அவையிலே பேசப்பட்டது. அப்போது முதலமைச்சர் 7 மணி நேரம், 8 மணி நேரம் எல்லாம் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பாட்டிலிங், பிளன்டிங். * * *

இன்னும் சொல்லப்போனால், ஒரு பாட்டில் $1\frac{1}{2}$ ரூபாய். 1 மாதத்திற்கு 1 கோடியே 12 லட்சம் பாட்டில்கள் தேவைபடுகின்றன. ஆகவே * * *

ஒரு மாதத்திற்கு மட்டும், அப்படியானால் வருடத்திற்கு எவ்வளவு அரசாங்கத்திற்கு வருமானம் வரவேண்டும் என்று பேசுகிற உங்களைப் பார்த்துக் கேட்கிறேன், அரசாங்கத்திற்கு ரெவின்யூ வரவேண்டும் என்று சொல்கிற உங்களைப் பார்த்து கேட்கிறேன், சாராயக் கடைகளை ஏஜெண்டுகள் மூலம் நடத்துவோம் என்று சொல்கிற நீங்கள் உண்மையிலே அரசாங்கத்திற்கு வருமானம் வரவேண்டும் என்ற அக்கறை இருக்குமானால் இந்த பாட்டிலிங் அன்ட் பிளன்டிங்கையும் ஏன் மார்க்கெட்டிங் கார்ப்பரேசன் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆகவே * *

---

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இன்னும் சொல்லப்போனால், இதிலே புத்திசாலித்தனமாக, எல்லாம் உடையார் அறிவுடையார் என்பதைப் போல, ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கிறார்களே, இந்தத் துறையிலே........

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாட்டலிங் அன்ட் பிளன்டிங்கிலே ** என்று சொன்னார்கள். லைசென்ஸ் கொடுத்து, பிளன்ட்டிங் யூனிட் போட்டவர்களுக்குத் தான் இது கொடுக்கப்பட்டது. ஆனால் பிளன்ட்டிங் யூனிட் போடாமலேயே உங்கள் ஆட்சியிலே கொடுத்திருக்கிறீர்கள், அவர்கள் எவ்வளவு * * அந்தக் காலத்தில்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

**திரு அ. ரகுமான்கான்:** எங்களுடைய ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, அவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டு சொல்லப்பட்டது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** என் மீது சாட்டப்பெற்ற குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில் நீதிமன்றத்திலே நான் நிரபராதி என்ற தீர்ப்பை வாங்கி வந்திருக்கிறேன். ஆனால் எந்த வழக்கையும் வாபஸ் பெற்றவன் அல்ல இந்த சண்முகம்.

**திரு அ. ரகுமான்கான்:** தீர்ப்பு கொடுத்தால் போதாது. வெளி மாநில நீதிபதியை வைத்து விசாரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். எனவே இது அகில இந்திய அண்ணா தி.மு.க.வின் கொள்கைக்கே விரோதமானது, நீங்கள் உத்தமர் என்பது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நான் உத்தமரா, இல்லையா என்பதைப் பற்றி, ரகுமான்கான் அவர்களிடமிருந்து சர்ட்டிபிகேட் வாங்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. அந்த அளவிற்கு என்னுடைய தரம் தாழ்ந்து விடவில்லை. அவர்கள் கொடுத்த தீர்ப்பைத்தான் அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த கருணாநிதி சரி என்று ஏற்றுக் கொண்டு ஒத்துக்கொண்டு, கையெழுத்து போட்டு இந்த அவையிலே வைத்திருக்கிறார்கள். இப்போது கூட, நான் இதைப்பற்றி விவாதிக்கத் தயாராக இருக்கிறேன். சர்க்காரியா கமிஷனைப் பற்றி விவாதிக்க வேண்டுமானால் நான் தயாராக இருக்கிறேன். தயாராக இல்லாதவர்கள் இதைப்பற்றி பேசக் கூடாது. நான் சொல்வது, பிளன்ட்டிங் யூனிட்டுக்கு லைசென்ஸ் கொடுக்கப் பட்டது. ஆனால் * * பிளன்ட்டிங் யூனிட் இன்டஸ்ட்ரீஸ் போடாதவர்களுக்கு எல்லாம் ரெக்டிபைட் ஸ்பிரிட்டுக்கு அனுமதி கொடுத்திருக்கிறபோது * * இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியிலே என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அரை மணி நேரத்திற்கு மேல் கொடுத்துவிட்டது. சீக்கிரம முடியுங்கள். (குறுக்கீடுகள்.)

**திரு அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, தயவு செய்து நீங்கள் ஒரு தீர்ப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே விவாதம் Healthy atmosphere என்று சொல்லுகின்ற வகையில் ஆரோக்கியமாகத்தான் நடந்து கொண்டு இருக்கிறது. எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுக்களைச் சொல்ல அமைச்சர் பெருமக்கள் பதில் சொல்ல அவைகள் சபைக்குத் தெரிய இது தான் முறை. இதை நாங்களும் பின் பற்றுகிறோம். நிச்சயமாக பின்பற்றுவோம். அப்படி பின்பற்ற தவறினால் அதற்கு வருந்துகிறேன். ஆனால் ஒன்றை நான் கேட்கவிரும்புகிறேன். ரகுமான்கானுக்கு பதில் சொல்லுகின்ற அளவுக்கு தரம் தாழ்ந்து போகவில்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் நான் கேட்க விரும்புகிறேன். அவரும் மக்களுடைய வாக்குகளைப் பெற்று விட்டு இங்கேவந்து இருக்கிறார். நானும் மக்களுடைய வாக்குகளைப் பெற்று இங்கே வந்து இருக்கிறேன். மெஜாரிட்டி இருப்பதால் நீங்கள் ஆளும்கட்சி அமைச்சர் பெருமக்கள், மெஜாரிட்டி இல்லாததால் நாங்கள் சின்ன குரூப் சாதாரண ஆட்கள் சின்ன குரூப்பாக சட்ட சபைக்குள் இருக்கிறோம். ஆக நான் கேட்க விரும்புகிறேன், எந்த விதத்தில் தரம் என்று சொன்னால் நல்லது. வயதை குறிப்பிடுகிறாரா; இல்லை மகாராஜா குடும்பத்தில் பிறந்த மாபெரும் ஆள் என்று சொல்கிறாரா? என்ன தரம் அப்படி அந்த ப.உ.ச.வுக்கும் இந்த ரகுமான்கானுக்கும்.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நான் ரகுமான்கானுக்கு பதில் சொல்லுகின்ற அளவுக்கு என்னுடைய தரத்தை தாழ்த்திக்கொள்ள மாட்டேன் என்ற வார்த்தையை சொல்லவில்லை தவறான வகையில் புரிந்து கொண்டு பேச வேண்டிய அவசியம் இல்லை. (கூச்சல்—குழப்பம்) நான் சொல்லியது தவறு என்று கருதினால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டாலும் எனக்கு கவலை இல்லை. நான் சொன்னதை மீண்டும் சொல்கிறேன். திரு. ரகுமான்கான் அவர்கள் என்னைப் பற்றி ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். நான் அப்போது சொன்னேன், திரு. ரகுமான்கான் போன்றவர்கள் இடத்தில் நான் சர்டிபிகேட் கேட்கவில்லை வாங்க வேண்டிய அளவுக்கு என் தரம் தாழ்ந்து விடவில்லை என்று தான் சொன்னேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறித்து குற்றச்சாட்டை அன்றைக்கு எந்த நிலையில் நான், அகில இந்திய அண்ணா தி.மு.க. சார்பாக அவர்கள் குற்றச்சாட்டை சொல்லியபோது என்ன பதில் சொல்லிப் பேசினேனோ அந்த நிலையில் இருந்து இன்றைக்கும் நான்

மாறவில்லை. பாட்டிலிங் அண்டு பிளண்டிங் மூலம் அங்கே கோடிக்கணக்கான அளவில் * * வெளியில் அரசுக்கு வருமானம் வரவேண்டுமானால் அதை ஏன் மார்க்கட்டிங் கார்ப்பரேஷன் மூலமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னேன். அதற்கு அமைச்சர் அவர்கள் முந்தைய ஆட்சியில் எவ்வளவோ பெரிய ஊழல்கள் நடந்து இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்போது தான் நான் திருப்ப சொன்னேன், உங்களை அ. இ.அ. தி.மு.க.காரர்கள் ஊழல் பேர்வழி என்று சொன்னார்கள் என்று சொன்னேன். கடைசியாக அவர் எழுந்து சொன்னார் நான் நிரபராதி என்று தீர்ப்பு வாங்கினேன் என்று சொன்னார். அதற்கு பதில் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை எல்லாம் மானியக் கோரிக்கையில் நன்றாகப் பேசலாம். பில்லைப் பற்றி இவ்வளவு தூரத்திற்கு விவாதிக்க வேண்டுமா? மெரிட்டில் பேசுங்கள். யூகத்தின் பேரில் பேச வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய நன்மைக்காக in the interests of the public அரசினுடைய வருமானத்திற்காக சாராய கடைகளை ஏஜென்டுகள் மூலம் கொடுத்து நடத்துகிறோம் என்று சொல்வதில் அபாயம் இருக்கிறது. This is misuse of powers. வேண்டியவர்களுக்கு சலுகைகள். இந்த நிலைமை நீடிக்கக்கூடாது, என்பதை கடுமையாக எதிர்க்கிறோம். இரண்டாவது அரசுக்கு வருமானம் வரவேண்டும் என்று சொன்னால் பாட்டிலிங் அண்டு பிளண்டிங்-ஐ அரசே ஏற்று நடத்துகின்ற காரியத்தை செய்ய வேண்டும். அங்கே * * இங்கே நீங்கள் செய்வது என்பது சந்தேகத்தை கிளப்புகிறது என்று சொல்லி இந்த சட்டமுன்வடிவை எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்ன வாசகத்தை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆகவே ** என்று சொன்ன வார்த்தைகள் எல்லாம் நீக்கப்படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான் : பாட்டிலிங் அண்டு பிளண்டிங் மூலமாக தவறான விதத்தில் தவறான லாபம் சம்பாதிப்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிற நிலை தவிர்க்கப்படவேண்டுமானால் அதில் உண்மையிலேயே அந்த தவறை நீக்கவேண்டும் என்று இந்த அரசு கருதுமானால் அதை எடுத்துக் கொண்டு செயல்படுத்தவேண்டும், கடைசியாக ஒரு சட்ட பிரச்சினையை நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன். D.R.O. versus Agent—ஏஜென்டுக்கும் சர்க்காருக்கும் பெரும்பாலும் தகராறு வராது. ஏன் வராது என்றால் ஏஜென்டு நம் ஆள் தான். பிரச்சினை இருக்காது. அவர்கள் பிரச்சினைகள்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பற்றி சொல்லும்போது, டி.ஆர்.ஓ. முடிவு இறுதியானது என்று சொல்கிறார்கள். ஆனால் டி. ஆர். ஓ. திடீர் என்று அந்தப் பிரச்சினையில் ஒரு தப்பான உத்திரவு போட்டுவிட்டார் என்று சொன்னால் டி.ஆர்.ஓ.வோடு முடித்துவிடக்கூடாது. பாதிக்கப்பட்டவர்கள் எங்கே போகவேண்டும்? நீதிமன்றத்திற்குப் போக வேண்டும். உங்களுக்குத் தெரியும் நம்முடைய பிரச்சினைகளிலே நீதிமன்றத்தில் போய் நியாயம் கேட்கவேண்டிய சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. அதிகாரிகள் தேவதூதுவர்கள் அல்ல. சில தவறுகள் செய்து விடக்கூடும். அதற்காக எல்லா அதிகாரிகளையும் தப்பாகக் கருதவேண்டாம் அதிலும் சிறப்பாக செயல்படுபவர்கள் இருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய துந்துபி முழக்கமாக செயல்படக் கூடியவர்கள் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12–10)

அதுவேறு விவகாரம். அப்படி ஒரு பிரச்சினை ஏற்பட்டு விடுமேயானால், நீதிமன்றத்திற்கு போகக் கூடாது என்று சொல்லிக் கட்டுப்படுத்தக்கூடாது — நாங்கள் போவோம். அது வேறு விவகாரம். இன்னும் சொல்லப்போனால் ஃபன்டமென்ட்டல் ரைட்ஸ்–படி அது கோர்ட்டிலே அட்மிட் ஆகும். அதனால் இந்தப் பிரிவு இருப்பது என்பது சரியாக இருக்காது என்று சொல்லி, இந்த 'ஏஜென்ட்ஸ்' சிஸ்டம் என்று சொல்வது—நான் சொல்ல விரும்புவது, இன்னும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்—அது உங்களுடைய, அமைச்சர்களுடைய, அரசாங்கத்தினுடைய தவறான கொள்கை என்பதைச் சுட்டிக் காட்டி, இது யாரையோ வாழ வைப்பதற்கு, வேண்டியவர்களை வாழ வைப்பதற்கு செய்கின்ற காரியம், அரசாங்கப் பணத்தை எடுத்து இப்படிச் செய்வது சரி அல்ல என்று சொல்லி இதைக் கடுமையாக எதிர்த்து அமர்கிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மன்றத்தின் பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டு வரப்பட்டிருக்கிற 1937ம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத் திருத்தத்தினை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற முன் வருகிறேன். ஏற்கனவே, இம்மன்றத்தில் நம்முடைய ஆளுங்கட்சித் தரப்பில் சுட்டிக் காட்டப்பட்ட உறுப்பினர்களுடைய கருத்தோடு நான் ஒரே ஒரு விளக்கத்தை மட்டும் இந்த நேரத்திலே குறை காணுகிற திரு. ரகுமான்கான் அவர்களுக்குச் சொல்லி என்னுடைய கருத்தை முடிக்க விரும்புகிறேன்.

1937–இல் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து இது நாள் வரை, தொடர்ந்து இந்தச் சட்டத்தில் பல மாறுதல்களும். பல இடங்களில் அதற்கான விளக்கங்களும் சட்டத்தின் திருத்தங்களாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆனால்.

இந்தச் சட்டத்திற்கு முழு விலக்கு அளித்து ஒரு சமுதாயத்தை, இளைய தலைமுறையினரை குடிப் பழக்கத்திற்கு ஆளாக்கிய பெருமை, 1976 வரையில் ஆண்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தான் ஏற்பட்டது என்பதை நாம் இந்த நேரத்தில் மறந்துவிடமுடியாது.

மதுவிலக்குக் கொள்கையில் புரட்சித் தலைவருக்கு இருக்கிற ஆழமான எண்ணத்தையும், அவர்களுக்கு இருக்கிற சமுதாய நோக்கத்தையும் கருத்தில் கொண்டுதான் மக்கள் 3 முறை அவர்களை தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். இங்கே பேசப் பட்டது, கண்ணியத்தைப் பற்றியும், மரபுகளைப் பற்றியும் என்பதையும்,—ஆனால் வெளியிலே கடந்த 10 நாட்களாக சட்ட மன்ற நிகழ்வுகளைப் பற்றி எழுதுகிற பத்திரிகைகள் அதற்கு எந்த வகையிலே விதிவிலக்கைப் பெற்றன என்று தெரியாது. சபாநாயகரைப் பற்றி ஆனாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர் களைப் பற்றி ஆனாலும் சரி, அமைச்சர்களைப் பற்றி ஆனாலும் சரி, எந்த கண்ணியத்தை வலியுறுத்துகிறோமோ, எந்த கண்ணியத்தை நிலைநாட்ட வேண்டுமென்று எண்ணுகிறோமோ அது அங்கே நிலைநாட்டப்படவில்லை. அது என்று நிலைநாட்டப் படுவதற்கு ஒரு சட்டம் வருமோ என்று எங்களைப் போன்ற வர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அப்படி மக்கள் மன்றத்திலே எதையும் பேசலாம் எதையும் எழுதலாம் என்று நியதியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற, எதிர்கட்சி வரிசையிலே இரண்டாவதாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் சென்ற இரண்டு தேர்தல்களிலும் நம் மீது, புரட்சித் தலைவர் மீது சாட்டாத குற்றச் சாட்டுக்கள் இல்லை. சொல்லாத குறைகள் இல்லை. அதைப் போன்று, நமது மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி அவர்கள் உண்மைக்குப் புறம்பான பிரச்சாரங்களை நடத்திய பின்னால் தான், இன்று, 30, 20 ஆகி இருக்கிறது என்கிற நிலையையும் நாம் உணர்ந்து பார்க்காமல் இல்லை.

ஆகவே, மக்கள் மத்தியிலே புரட்சித் தலைவர் அவர்களுக்கு மதுவிலக்குக் கொள்கையிலே இருக்கிற நம்பிக்கையை தெளிவு படுத்துகிற வகையில்தான் கடந்த 1978-வது ஆண்டு தீவிரமான மதுவிலக்குக் கொள்கையை இங்கே கொண்டு வந்தார்கள். இந்த நேரத்திலே, இன்று இவ்வளவு தூரம் பேசுகிற திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் இந்த சட்டத்திற்குப் பக்க பலமாக நிற்கவில்லை. ஐயோ, இது கடுமையான சட்டம். குடித்தவனுக்கு ஜாமீன் இல்லையா? அவன் வெளியிலே வருவ தற்கு வழி இல்லையா? வழி இல்லாத சட்டம் ஜனநாயகமா? என்று கூக்குரலிட்டார்கள். ஆக, அவர்கள் மட்டுமல்ல, அவர்க ளோடு சேர்ந்து கொண்டு குடிகாரர்களும் அந்தச் சட்டத்தை விலக்குவதற்குக் காரணமாக இருந்தார்கள். எந்தக் குடி குடியைக் கெடுக்கும் என்று அந்தச் சட்டத்தை புரட்சித் தலைவர் கொண்டு வந்தார்களோ, அது அந்தக் குடியை மேலும் துன்புறுத்துவதற்கு ஆளாக்குகிறது என்ற நிலையில் தான் அந்தச் சட்டத்தை மறு பரிசிலனை செய்து, இன்று அதை முறைப்படுத்த வேண்டிய





கட்டாயத்தில் நம்முடைய அரசு இருக்கிறது என்கிற நிலையை மக்கள் புரிந்துகொள்ளாமல் இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இந்தச் சட்டம் மிகச் சாதாரணமாக, 17 (சி) புரொஹிபிஷன் ஆக்ட்டில் ஏற்கனவே நடைமுறையில் இருந் வருகிற விநியோக முறையை அரசாங்கம் அதற்காக நியமித்த கார்ப்பரேஷன் எடுத்துக் கொள்வது என்பதுதான். ஏற்கனவே, ஏன் இந்தத் தொழிலை அரசாங்கம் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று வற்புறுத்திய திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும்கூட நினைவு இருக்கிறது—கலைஞர் கருணாநிதி அவர்கள் இங்கே பேசுகிற நேரத்தில், ஏன் இதை அரசாங்கத்தின் கைக்கு கொண்டு வந்து, அரசாங்கம் இதிலேகூடுதலான வருமானத்தைபெறக்கூடாது என்று பலமுறை வற்புறுத்திச் சொன்னார்கள். திரு. ரகுமான் கானுடையவாதம் அதற்குக்கூட முரண்பாடாக இருக்கிறது. அது இரட்டை நிலையைக் காட்டுகிறது என்பதைப் பார்க்கிறேன். அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது, எந்தப் பகுதியை எடுத்துக் கொள்கிறது என்பதல்ல அது மிக முக்கியமான வருவாயைத் தேடக்கூடிய பகுதியை எடுத்துக்கொள்கிறது.

எடுத்துக்கொண்டிருப்பதற்குக் காரணம் வருமானத்தை ஈட்டி வருகிற ஆண்டுகளில் அதன் பலனை நாம் பெற இருக் கிறோம். அந்த அளவிற்கு வரி ஏய்ப்பவர்களைத் தவிர்ப்பதற் காக, தடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற சட்டத்தை குறை கூறுகிறவர்கள் அரசாங்கம் வருமானம் பெற முயற்சிக்கிற போது இதிலே வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் அதை நீதி மன்றத்தின் மூலமும் மற்ற வகைகளிலும் தடுப்பது என்பதும் அதில் அதிக இலாபம் பெற முயற்சிப்பது என்பதும் இயல்பாக இருந்து வருகிற ஒன்று. ஆனால் அரசாங்கம் எவ்வளவு தூரம் வரி ஏய்ப்பை, அல்லது கிஸ்தி கட்டுவதைத் தவிர்க்கிறவர்களை கட்டுபடுத்துவதற்கான சட்டத்தை நடைமுறையில் கொண்டு வருவது என்பதுதான் இப்போதுள்ள இன்றுள்ள பிரச்னை.

ஆகவே நம்மைப் பார்த்து குறை கூறுகிறவர்கள் எதைப் பார்த்துச் செய்கிறார்கள் என்று கொஞ்சம்கூட இரக்கமில்லாமல் பேசக்கூடியவர்கள் அவர்கள் காலத்தில் எதைச் செய்தார்கள் என்பதை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அன்று 1971 முதல் 1974 வரை சாராயக்கடைகள் ஏலத்தில் விடப் பட்டன. பல லட்சக்கணக்கான பல கோடிக்கணக்கான ரூபாய் ஏலத்தில் எடுத்தவர்கள் அரசை ஏமாற்ற முயற்சி செய்தார்கள். அன்று இருந்த அரசாங்கம் என்ன செய்தது தெரியுமா? சாதாரண மாக ஒரு ஏலத்தில் கலந்துகொள்கிறவர்கள் ஏலத்தொகையை உயர்வான தொகைக்குத் தூக்கிவிட்டு அதற்குப் பின்னர் தொடர்ந்து கிஸ்தி கட்டமுடியாமல் கடையை நடத்த முடியாமல் போய் விடுகிறார்கள். மறுபடியும் ஏலத்திற்கு அரசு கொண்டு வரும். மறு ஏலம் வருகிற நேரத்தில் ஏற்படுகிற இழப்பை முதலில் ஏலத்தில் எடுத்தவர்கள் மீது சுமத்தி அவர்களிடம் வசூலிக்கிற அந்த முறை அரசுக்கு இருந்த உரிமை. ஆனால் திராவிட

முன்னேற்றக் கழகக் காலத்தில் அந்த உரிமை ரத்து செய்யப்பட்டது. 14-4-77ல் ஜி. ஓ. எம்.எஸ். எண் 233 மூலம் ஏலத்தில் எடுத்த நபர்கள் ஏல கிஸ்க்தியை கட்டாமல் தவறிவிட்டால் மறு ஏலத்தின் மூலம் இழப்பை ரத்து செய்யலாம் என்பதற்காக விதிவிலக்கு அல்ல, ஒட்டுமொத்தமாக ஒரு ஜி. ஓ.வை அந்த அரசு அன்று வழங்கியிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஜி. ஓ. எம். எஸ். எண். 233, டேட்டட் 14—4—77 என்ற அந்த அரசாணையை திராவிட முன்னேற்றக் கழகம் யாருக்காக யாருடைய கொள்ளை இலாபத்திற்காக அதைத் தந்திருக்கிறது என்பதை அருள்கூர்ந்து திரு. ரகுமான்கான் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சாதாரணமாக அந்த வரி பாக்கி உள்ளவர்கள் அரை மாத கிஸ்தியைக் கட்டினால் அவர்களுடைய மொத்த அட்வான்ஸை மட்டும் நீக்கி இருக்கிற கிஸ்தி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்ற சலுகை கொடுக்கப்பட்டது. அதேபோல் எவ்வளவு பாக்கி இருந்தாலும் ஒன்றரை மாதம் கட்டியிருந்தால் அவர்கள் ஒரே மாதமே செலுத்திவிட்டிருந்தால் அவர்கள் முழு கிஸ்தியும் தள்ளுபடி செய்யப்படும் என்ற இந்த ஆணையை அவர்கள் தந்ததன் மூலம் அன்றைக்கு அரசாங்கத்தை ஏமாற்ற முயன்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களுக்கு வேண்டியவர்களாக இருந்திருக்கக்கூடும் என்ற எண்ணம் நாட்டில் எழாமல் இல்லை. ஒரு சட்டத்தை அமல்நடத்துகிறபோது—நான் சதாசிவம் கமிஷனுக்குப் போகவில்லை—இருக்கிற ஜீ.ஓ.வை வைத்துச் சொல்கிறேன். தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது அந்த ஜீ.ஓ.வில் அப்படி அரசாங்கத்தை ஏமாற்ற முயன்றவர்களுக்குச் சாதகமாக இருந்தவர்கள் இன்று புரட்சித் தலைவர் அவர்கள் அரசின் சீரிய நோக்கத்தை, வரி ஏய்ப்பவர்களை, கிஸ்தி ஏய்ப்பவர்களைத் தடுக்கிற இந்தச் சட்டத்தை குறைகூறுகிற விந்தையை நான் இந்த நேரத்தில் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. ஆக, 1971ல் இருந்து 1974 வரை இருந்தவர்கள் கொடுத்த சலுகைபோல் அல்லாமல் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இன்று ஏலத்தில் விடுகிறபோது—ஏலம் எடுத்தவர்கள் மட்டும் தவறு செய்கிறார்கள் என்ற நிலை இல்லை. சில இடங்களில் அதிகாரிகள்கூட அவர்களுக்கு உடந்தையாக இருந்துவிடக்கூடும்.

ஆகவே ஒட்டுமொத்தமாக தவிர்ப்பதற்காக இன்று இந்த முறையைக் கொண்டுவருவதன் மூலம் நிச்சயமாக ஏஜென்ட்கள் யாராக இருந்தாலும், யாருக்குக் கொடுத்தாலும் அரசுக்கு வரி இழப்பு அல்லது கிஸ்தி இழப்பு இருக்காது. ஏனென்றால், எடுக்கிற இடத்திலேயே சரக்கு எடுக்கிறபோதே அதற்குரிய தொகையை செலுத்திவிட்டுத்தான் எடுக்கிறார்கள். அதற்கான டெப்பாசிட்டையும் அரசு வாங்கிக்கொள்ளும். அந்த வகையில் முழுக்க முழுக்க இந்த மதுவிலக்குக் கொள்கை அமல்படுத்துகிற வரை, சமுதாயத்தை மாற்றியமைப்பதுவரை, இந்தக் கேடான நிலையை அனுமதிக்கவேண்டும் என்ற நிலை இருக்கிறபோது இதை முறைப்படுத்துவதின் மூலம் அரசுக்கு வரவேண்டிய வருமானத்தை சமூக விரோதிகள், சமுதாயவிரோதிகள் தட்டிப் பறித்துக்கொண்டு செல்லாமல் தடுக்கிற நல்ல சட்டம் இந்தச் சட்டம். இந்தச் சட்டம் வரி ஏய்ப்பவர்களுக்கு, தொடர்ந்து ஏய்ப்பவர்களுக்கு தடையாக இருக்கும் காரணத்தினால் இதை வரவேற்று என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.





(பிற்பகல் 12-20)

திரு. டி. ஆர் வேங்கடரமணன் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சட்டத் திருத்தத்தின் மீது பேச எழுகின்றபோது மிகுந்த மன வேதனையோடு பேசத் தொடங்குகிறேன். எனக்கு முன்னாலே பேசிய டாக்டர் கே. பி. இராமலிங்கம் பேசுகின்றபோது சொன்னார்கள், இந்தச் சட்டத்தை எதிர்க்கிறவர்கள் ஏதோ சாராய வியாபாரிகள் ஏஜன்ட்கள் என்ற அளவிலே ஒரு கருத்தைச் சொல்லிச் சென்றார்கள். நான் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறேன் என்றால் சாராய வியாபாரிகள் ஏஜன்ட்டாக எதிர்க்கவில்லை. எங்களுக்கு ஓட்டுப் போட்ட, உங்களுக்கு ஓட்டுப் போட்ட தாய்க்குலத்தின் ஏஜன்ட்டாக எதிர்க்கிறேன். மக்களின் நலன் கருதி எதிர்க்கிறேன். தனி நபர் நலனுக்காக நான் இதை எதிர்க்கவில்லை. இந்திய நாட்டினுடைய தெளிவான மதுவிலக்குக் கொள்கை இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பன்னெடுங்காலமாக மதுவிலக்கு இந்த நாட்டிலே அமல் செய்யப்பட்டு இடையிலே ரத்து செய்யப்பட்டு, இன்றைக்கும் ரத்து என்ற பெயரிலே இருந்து கொண்டிருக்கிறது. குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல் குழியும் பறித்ததாம் என்று சொல்வார்கள். அதைப்போன்று மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது மட்டுமல்ல இன்றைக்கு அரசாங்கமே அந்த வியாபாரத்திலே இறங்குகின்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது அதன் மூலமாக ஏற்படுகிற அபாயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டியது எதிர்க்கட்சியினுடைய பொறுப்பு, கடமை என்பதால் சொல்கிறேன். சொல்வார்கள் தந்தை அடித்தால் தாயிடம் சொல்லலாம், தாய் அடித்தால் தெய்வத்திடம் சொல்லாம், என்று சொல்வார்கள். அதைப்போன்று தனிமனிதன் தவறு செய்தால் சமுதாயத்திடம் சொல்லலாம், சமுதாயம் தவறு செய்தால் போலீஸ் துறையிடம் சொல்லலாம், போலீஸ் துறையில் தவறுகள் நடக்கிறபோது சட்ட மன்றத்திலே பிரச்சினைகளை எழுப்புகிறோம். ஆனால் சட்ட மன்றத்திலே நமக்குத் தெரிந்தே பொதுமக்களுக்கு விரோதமாக ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறபோது—நாங்கள் எவ்வளவு பேசினாலும் இது தடைபடப்போவதில்லை, நிறைவேற்றப்போகிறீர்கள் என்பதைக்கூட அறியாத அளவுக்கு நான் அரசியலோ அரசியல் சட்டமோ தெரியாதவன் அல்ல. இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு சட்டமாக மாற இருக்கிற சூழ்நிலையிலே அதனுடைய விளைவுகளை விபத்துக்களை அபாயங்களை சுட்டிக்காட்டவேண்டிய நிலையில் நாங்கள் இருக்கிறோம்.

இந்தச் சட்டத்திலே பிரியாம்பிளிலே ஏன் இதைக் கொண்டு வருகிறோம் என்று இரண்டு காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். முதல் காரணம் "Whereas the existing system of public auction-*Cum*-tender for grant fo privilege and licence for sale, by

retail, of arrack has in several cases enabled the bidders to collude with each other....''என்று சொல்லியிருக்கிறார்கள். ஏலம் எடுக்கிறவர்கள் தாங்கள் ஏதோ கூட்டாகச் சேர்ந்துக் கொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுகிறார்கள் என்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாவதாகச் சொல்லப்படுகிற காரணம் ''in some cases, the bid amounts were lower than the upset price''...... என்று சொல்லியிருக்கிறார்கள். நான் சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எந்த இடத்திலே ஒரு சிலர் அதற்காக கூட்டாகச் சேர்ந்து அதன் மூலமாக அரசாங்கத்திற்கு நட்டம் இழைக்கிறார்களோ அப்போது அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அப்படி சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர ஆக்ஷன் விடுவதையே நிறுத்திவிடுகிறோம் என்று சொல்வது சரியல்ல. சாராயக் கடைகள் மட்டுமல்ல, இன்றைக்கு பி.டபிள்யூ.டி. போன்றபல துறைகளிலேகான்ட்ராக்ட், டெண்டர் போன்ற முறைகள் இருக்கினறன. தமிழகம் முழுவதும் இப்படிப் பட்ட கூட்டு சேர்கிற நிலைமைகள் இருக்கின்றன. எல்லா இடங்களிலேயும் செய்யாத சீர்திருத்தத்தை இதிலே மட்டும்செய்வதற்கு என்ன காரணம்? அவ்வாறுஇருப்பதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு எங்கெங்கே நடைபெறுகிறது என்பதைக் கண்டுபிடிக்கிற செயல் திறன் அரசாங்கத்திற்கு இருக்கிறது. எனவே அதைக் கண்டுபிடித்து மாற்றியமைக்க வேண்டுமே தவிர அதன் மூலமாக பினாமியை மாற்றி அமைக்க முடியுமே தவிர இந்தச் சட்ட திருத்தம் மூலமாக பினாமியை மாற்ற முடியும் என்று உத்திரவாதம் தர முடியாது.

அடுத்து அப்செட் விலையைவிடக் குறைந்த விலையில் கேட்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.எத்தனைஇடங்களிலே அப்படிக் கேட்கப்பட்டது என்ற விவரங்களைத் தரவில்லை. எனக்குத் தெரிந்தவரையிலே போட்டி போட்டுக் கொண்டு சாராய வியாபாரிகள் ஏலம் எடுத்து நட்டம் அடைந்தவர்கள்தான் இருக்கிறார்கள். அப்செட் பிரைசிற்குக் கீழே வந்தால் அது போன்ற கடைகளை மட்டும் அரசுக் கடைகளாக நடத்தலாம் அதற்கு சட்டத்திலே தடையில்லை, எந்த இடங்களிலேயெல்லாம் ஏலம் அந்த அளவிற்குப் போகவில்லையோ அந்தக் கடைகளை மட்டும் தமிழ்நாடு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக நடத்தலாம், அப்பொது உங்களுடைய எண்ணம் நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் இலட்சியம் நிறைவேறும். ஆகவே, இப்படிப்பட்ட சட்டத்திலே அதைக் கொண்டு வருவதற்குத் தேவையில்லை.

அந்தச் சட்டத்திலே நீங்கள் சொல்லுகின்ற சில குறிப்புகளைப் பற்றி நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்டம் அமலுக்கு வந்தால் கீழ்க்கண்ட விதிமுறைகள் ரத்து செய்யப் படுகின்றன என்று சொல்லப்படுகிறது. அதாவது, Tamil Nadu Arrack Retail Shop Rules 1981. இந்தச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அராக் ஷாப் ரூல்ஸின்படி குறிப்பிட்ட பகுதிகளில், அதாவது கோயில்களுக்கு அருகில்,





பள்ளிக்கூடங்களுக்கு அருகில், குறிப்பிட்ட மத நிறுவனங்களுக்கு அருகில் அராக் ஷாப் வைக்கக்கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் நீங்கள் அந்த விதிமுறைகளை ரத்து செய்யும் பொழுது, தமிழ்நாடு அரசின் மார்க்கெட்டிங்கார்ப்பரேஷன் இந்தக் கடைகளை ஊரின் நடுவே, இதுபோன்ற இடங்களுக்கு நடுவே, பொது இடங்களில், பள்ளிக்கூடங்களுக்கு அருகே, தொழிற்சாலைகளுக்கு அருகே, மத வழிபாட்டு ஸ்தலங்களுக்கு அருகே இருப்பதற்கான ஆயத்தங்களை நீங்கள் செய்கிறீர்கள். தனி மனிதன் அவ்வாறு செய்கின்றபொழுது அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றால், கோர்ட்டிற்குச் சென்றுத் தடை வாங்கலாம். ஆனால் இப்பொழுது கோர்ட்டிற்குச் சென்று தடை வாங்க வேண்டுமென்றால், கோர்ட்டிற்குச் செல்ல முடியாது என்று நீதிமன்றத்தின் வரம்பை இந்தச் சட்டத்தின் மூலம் வரையறுத்திருப்பது வருந்தத்தக்கது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இந்தக் கடைகள் எல்லாம் தமிழக அரசினுடைய ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பரேஷனுக்கு மொத்தமாக வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவ்வாறு வழங்கினால், Moncpolists. Restrictive Trade Practice Act-இன் கீழ் இந்தச் சட்டம் வரும். ஆகவே, இந்தச் சட்டத்தைத் தடை செய்யலாம். சாராயக் கடை வியாபாரிகள் கோர்ட்டிற்குச் சென்று எம். ஆர். டி. பி. ஆக்டின் கீழ் வழக்குத் தொடர்ந்தால், உங்கள் சட்டம் மீண்டும் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்படக்கூடிய வாய்ப்பிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஏனென்றால்; ஒட்டுமொத்தமாக எல்லாக் கடைகளையும்— விற்பனை செய்யும் உரிமங்களை நீங்கள் தனியார் நிறுவனத்திற்கு— அரசாங்கமே நடத்துகின்ற கடையாக இருந்தாலும், கம்பெனிச் சட்டத்தின் கீழ் நிர்வாகம் செய்யப்பட்ட கம்பெனிக்குக் கொடுக்கப்படுவதால், இது எம்.ஆர்.டி.பி. ஆக்டின் கீழ், ஏகபோக மொத்த உரிமை வியாபாரத் தடைச் சட்டம் என்ற சட்டத்தின் கீழ் இந்தச் சட்டம் அடிப்பட்டுப் போகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தக் கடைகளெல்லாம் மார்க்கெட்டிங் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்கப்பட்ட பிறகு, அதன் சப்–ஏஜன்டுகளை மார்க்கெட்டிங் கார்ப்பரேஷன் நியமனம் செய்வதற்கான விதிமுறைகள் வழிமுறைகள் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. மறுபடியும் ஆக்ஷன் கம் டெண்டர் வருமா அல்லது எந்த முறையில் செய்யப்படும் என்பதற்கான விளக்கம் இல்லை. இந்தக் கடைகளைக் கார்ப்பரேஷன் நடத்துகின்றபொழுது எப்படி நடத்தும் என்பதற்கான செயற்குறிப்புகூட இல்லாத நிலையில், சமீபத்தில் ஒரு பத்திரிகையில் வந்த செய்தியை இந்த மன்றத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன் பேசிய சிலபேர் சொன்னார்கள். ஏதோ சில ரௌடிகளை வைத்து, ஊர்ப் பெரிய மனிதர்கள் சாராயக் கடைகளை எடுத்து சாராய சாம்ராஜ்யம் நடத்துகிறார்கள்

என்ற தொனியில் பேசினார்கள். என்னுடைய கையிலே வைத்திருக்கின்ற பேப்பரை ஆதாரமாகக் காட்ட விரும்புகிறேன். 1-6-85 ஆம் தேதி வெளியான 'துக்ளக்' பத்திரிக்கையில் வந்த செய்தியை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நீங்கள் ரௌடிகள் என்று யாரைக் குறிப்பிடுகிறீர்களோ அல்லது சாராய சாம்ராஜ்ய மன்னர்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறீர்களோ அந்தச் சாராயக் கடை வியாபாரிகளுக்கும் மேலாக ஒரு சூப்பர்மேன் என்று சொல்லப்படும் வகையில் சிலர் ஜிஞ்சர் வியாபாரம் செய்கிறார்கள் என்று சாராயக் கடைகளை ஏலம் எடுத்தவர்கள் சொல்கிறார்கள்.

அவர்கள் ஒரு விண்ணப்பத்தை அச்சடித்து வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே, "தூத்துக்குடியிலே பயங்கர மோசடி, சட்ட விரோத ஜிஞ்சர் விற்பனையினால் தமிழக அரசுக்கு இரண்டு கோடி ரூபாய் இழப்பு, முப்பிறவி கண்ட முதல்வர் அவர்களே, அரசாளும் அமைச்சர் பெருமக்களே, சாதனை புரியும் சட்ட மன்ற உறுப்பினர்களே, அன்பிற்குரிய அரசியல் கட்சித் தலைவர்களே, பாசமிகு பத்திரிகையாளர்களே" என்று அவர்கள் ஒரு விண்ணப்பத்தை அச்சிட்டு வெளியிட்டு இருக்கிறார்கள்.

மொத்த வியாபாரிகள் வாயிலாக 1 கோடியே 80 இலட்சம் ரூபாயும், சில்லரை வியாபாரிகள் வாயிலாக 1 கோடியே 44 இலட்சம் ரூபாயும் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகின்றது என்று சொல்லி, இந்த ஜிஞ்சர் வியாபாரம் செய்கின்றவர்களையும் கள்ளச் சாராய வியாபாரம் செய்கின்றவர்களையும் அடக்க முடியவில்லை என்பதை வலியுறுத்தி ஏற்கனவே சாராயக் கடையை நடத்துகின்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; விண்ணப்பங்களை அச்சடித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-30)

அப்படி இருக்கும்போது தமிழக அரசினுடைய ஆளுகையிலே உள்ள, சட்டப்படி ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு கார்ப்பரேஷனின் மூலமாக நீங்கள் சாராயம் விற்கும்போது, நீங்கள் அராக்கை வியாபாரம் செய்யும்போது, இதுபோன்ற கள்ளச் சாராயம் விற்பவர்கள், இதுபோன்ற கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்கள் மீது அரசு அதிகாரிகள் எந்த அளவு திறமையாகவும் தைரியமாகவும் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற வினாவை இந்த மன்றத்திலே நான் எழுப்ப ஆசைப்படுகிறேன். ஏனென்றால், சாராயம் விற்பவர்கள் ரௌடிகளாக இருக்கின்றார்கள் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அடிதடிக்கு அஞ்சாதவர்களாக இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். அப்படி இருந்தால்தான் அவர்கள் அந்த வியாபாரத்தில் இருக்க முடியும். அப்படி இருக்கும்போது, அரசு அதிகாரிகள், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களிடம் சென்று எப்படி போராடுவார்கள் என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன்.



ஏற்கனவே பதவிகளில் உள்ளவர்கள், வேலை பார்க்கும்போது ஏற்படுகின்ற இன்னல்களைச் சந்திக்கத் தயாராக இல்லாததன் காரணமாகத்தான் இன்றைக்குத் தூத்துக்குடி நகரங்களிலே எல்லாம் ஜிஞ்சர் என்ற பெயராலே கள்ளச் சாராயம் ஓடிக் கொண்டிருக்கிறது. அதையே தடுக்க முடியாதவர்கள் அரசு கடைகளின் மூலமாக, இந்தச் சாராயம் விற்கும்போது எப்படி நீங்கள் அதைத் தடுத்து நிறுத்துவீர்கள் என்ற கேள்வியை நான் இங்கே கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே, இந்தச் சட்டமானது பொது மக்களுக்கு விரோதமான, பொதுமக்களுக்குத் தீமை விளைவிக்ககூடிய சட்டம்.

ஏற்கனவே சாராயத்திலே உள்ள ஊழலைப் பற்றி மாற்றி, மாற்றி, இருவரும் பேசிக் கொண்டீர்கள். இது மக்களுடைய உள்ளத்திலே அவப் பெயர் கொண்டு வரும் சட்டமாக அமையும் என்று எச்சரிக்கையை வைத்து, இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை யாருக்கும் ஏஜென்டாக நான் சொல்லவில்லை. வாக்களித்த மக்களின் சார்பாகச் சொல்கிறேன். ஏனென்றால், தேர்தல் நேரத்திலே, பொதுமக்களைச் சந்தித்து, வாக்குகளைக் கேட்கச் சென்றபோது, குறிப்பாக, தாய்மார்களைச் சந்திக்கும்போது, அங்கே தாய்மார்கள் எடுத்துரைத்த கருத்தை இங்கே வைத்து நான் விடைபெற ஆசைப்படுகிறேன். அங்கே பெண்கள் எல்லோரும் கண்ணீர் விட்டுச் சொன்னார்கள். நீங்கள் சட்டமன்றத்திற்குச் சென்று முதல்வரைச் சந்திப்பீர்களானால் இதைப்பற்றி சொல்லுங்கள், மதுவிலக்கு ரத்தை ரத்து செய்வதற்காக, எங்கள் சார்பாக, எடுத்துரைக்க வேண்டுமென்று எங்களிடத்திலே பெண்கள் முறையிட்டார்கள். அந்தப் பெண்களின் சார்பாக, அவர்களுடைய கண்ணீரின் சார்பாக, அவர்களுடைய ஏஜென்டாக, இந்தச் சட்டத்தை நீங்கள் வாபஸ் பெற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவின் மீது ஆளுங்கட்சியின் சார்பாக நான் என்னுடைய உணர்வுகளை இந்த மாமன்றத்திலே எடுத்து வைக்கக்கடமைப்பட்டிருக்கிறேன். தனி மனித ஒழுக்கம் என்பது ஒரு நாட்டினுடைய தலைவிதியை மாற்றி விடக்கூடிய ஒன்று அல்ல. அவர்கள் வாழும் காலத்தில் அது காட்சிப் பொருளாகவும் அவர்கள் மறைந்த பிறகு உலகிற்கு ஒரு சாட்சிப் பொருளாகவும்தான் இருக்கின்றது என்பதைத் தவிர வேறொன்றும் இல்லையென்பதே இதுவரையில் தெரிந்த, தெளிந்த முடிவு என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும்கூட இந்த மசோதாவில் நான் பேசுகிறேன் என்று சொன்னால் என்னைப் பொறுத்தவரையில் இன்று வரையில் சீட்டு ஆடத் தெரியாது. சிகரெட்டு பிடிக்கத் தெரியாது, கள்ளோ, சாராயமோ, பீர்,

பிராந்தியோ, விஸ்கியோ, ரம்மோ எதையும் பார்த்தது இல்லை சுவைத்தது கிடையாது. இதில் பேசுவதற்கு நாடு என்று சொன்னால், அந்த நாட்டை ஆளுவதற்குரிய ஒரு பொறுப்பினைக் கொடுப்பார்களானால், அத்தகைய நிலையில் இருப்பவர்களை எப்படி ஆளுவது, எப்படி நிர்வகிப்பது என்ற வகையிலேதான் இந்த திருத்த சட்ட முன்வடிவு வந்திருக்கிறதே தவிர, இதைக் கொண்டுவந்திருக்கிற காரணத்தினால் இந்தக் கட்சியின், ஆட்சியின் அடிப்படை கொள்கை இதுதான் என்று விமர்சனம் செய்வது அவர்களுடைய நெஞ்சைப் பொறுத்ததே தவிர, இது மற்றது அல்ல என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல இதைப்பற்றி விமர்சனம் செய்யக் கூடியவர்கள் யார் என்று பார்க்கும்போது குடிக்கக் கற்றுக் கொடுத்து விட்டு, குடிப்பதும் பாவம் என்று உபதேசம் செய்பவர்களாக சிலர் மாறியிருப்பதைக் கண்டு நாங்கள் வேதனைப்படுவதை விட வேறொன்றும் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை.

இங்கே இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவருகிற பொழுது ஏன் கொண்டு வருகிறோம் என்பதற்குக் காரண காரியங்களைச் சொல்லி இருக்கிறோம். பொதுவாக, வருவாய் இழப்பு. பல கடைகளை ஏலம் எடுப்பவர்கள் விட்டுவிடு கிறார்கள். எடுத்தவர்களும ரிட் அப்பீல் என்று போகிறார்கள். அப்படிப் போட்டுவிட்டு அது கோர்ட்டில் இருக்கிறபொழுது இந்தத் தொழிலும் நடந்து கொண்டே இருக்கும்.

அது மட்டுமல்ல, ஒரு சில இடங்களில் கூட்டாக பலர் சேர்ந்து ரூபாய் ஆயிரத்துக்கு ஒரு கடைக்குப் போகும் என்று சொன்னால், அதை அவர்கல் ரூ. 50. ரூ. 100—க்கு எடுத்துக் கொண்டு தனியாக ஏலம் நடத்தி; அந்தக் கிராமத்திலே இருக் கக்கூடிய பலர், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பலர், அந்தக் கலையைக் கற்றவர்கள் கொள்ளைக் கூட்டமாக காட்சி அளிக்கக்கூடிய நிலையெல்லாம் வந்து விட்டது என்பதை எண்ணிப் பார்த்து, அந்த அனுபவத்தின் அடிப்படையிலே தான் இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையை எண்ணிப் பார்த்துத்தான் பொது மக்கள் மத்தியில் இருந்து வருகின்ற வேண்டுகோள்களை எல்லாம் வைத்துத்தான் இந்தச் சட்ட முன்வடிவை இந்த அமைச்சரவை கொண்டு வந்திருக்கிறது என்பதை எங்களால் அறிய முடிகிறது.

ஆகவே, இப்படிப்பட்ட கிக்கல்களில் மாவட்டந்தோறும் பல இலட்சம் ரூபாயை இழக்க வேண்டியிருக்கிறது; மாநில அளவிலே பல கோடி ரூபாயை இழக்கிறோம் என்ற நிலையை தற்போது நீக்கக்கூடிய சூழ்நிலை இந்தச் சட்டத்தினால் ஏற் படுகிறது. அது மட்டுல்லாமல் இப்போது பல இடங்களில் தொடர்ந்து இல்லிசிட் லிக்கர் இருந்து கொண்டிருக்கிற சூழ் நிலையும் இருக்கிறது என்பதைத் தெரிந்துதான், அதை மாற்றி யமைத்து, அரசாங்கப் பணம் கொள்ளையடிப்பவர்கள் கையிலே



போய்ச் சேரக்கூடாது. அரசாங்கப் பணம் சதிகாரர்கள் கையிலே போய்ச் சேரக்கூடாது, வேறு யாருக்கோ போய்ச் சேரக்கூடாது; அரசாங்கத்திற்கு வர வேண்டிய பணம் அரசாங் கத்திற்கே வர வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை என்னால் அறிய முடிகிறது. ஒரு சிக்கலான நேரத்தில் ஒரு நல்ல சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மது விற்பனையிலே ஏஜெண்ட் என்று வருகிறபோது சிலர் சொன்னார்கள் யாருக்கு ஏஜென்ஸி என்று, ஏஜென்டாக வரக்கூடியவர்கள் இந்த நாட்டு மக்கள்தான், இந்த நாட்டு மக்கள் நன்மைக்காகத்தான், அது அல்லாமல் ரஷியாவுக்கோ, அமெரிக்காவுக்கோ, சீனாவுக்கோ அல்லது வேறு யாருக்கோ ஏஜென்ட் கொடுக்கக்கூடிய சட்டம் அல்ல இது. இது எல்லாம் நம் நாட்டு மக்களுக்குத்தான், வேறுயாருக்கும் கொடுக்கவில்லை.

அரசாங்கம் என்ன தகுதியை நிர்ணயிக்கிறதோ அந்தத் தகுதிக்கு உட்பட்டவர்கள் தான் ஏஜென்டாக வர முடியும். விண்ணப்பம் செய்கிறபோது அவர்களுடைய தகுதியை எல்லாம் விண்ணப்பத்திலே தெரிவிக்க வேண்டும். நிர்ணயித்துள்ள தகுதி பெற்றவர்களைப் பொறுப்பு ஏற்க செய்வார்கள். இதிலே எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை. இந்த ஏஜென்ட் முறையிலே கூட ஏற்கெனவே இந்தியாவில் தயாரிக்கும் அயல் நாட்டு மது விற்பனையில் வழிவகுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதிலே ஏதாவது சிக்கல் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்து, குறைகள் இருந்தால் களைகின்ற வகையில், நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப் படையில்தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக் கிறது,

இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர், பெரியவர் ஒருவர் சொன்னார். இந்த மதுவே கூடாது, ரத்து செய்ய வேண்டு மென்று சொன்னார். அது அவருடைய விருப்பம், அவர் சொல்வது நியாயம் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதோடு நிறுத்திக் கொள்ளாமல், ஏஜென்ட் முறை வரும்போது எங்கே யாருக்கு என்று கேட்டார்கள். ஏன் இப்படி சுற்றி வளைக்க வேண்டும்? தேவை என்றால் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே கொடுங்கள் என்று கேட்கலாமே. ஏதோ சுற்றி வளைத்துப் பேசுவது அவ்வளவு நல்லதாக இருக்க முடியாது.

சில அரசியல் கட்சிகள் சட்டமன்றத்திலே எதிர்ப்பு தெரிவித்துவிட்டு, சமுதாயத்திலே, இந்த நாட்டிலே, கிராமப் புறங்களிலே ஊடுருவல் செய்து மோசமான விளைவுகளை ஏற்படுத்துகிறார்கள். எந்தக் கொள்கை சரியல்ல, மக்களுக்கு கேடு விளைவிக்கும் என்று சொல்கிறார்களோ அதிலே அந்தக் கட்சி ஊடுருவல் செய்து இணைந்து கொண்டு என்னென்ன

சமுதாயக் கேடுகளை உருவாக்க முடியுமோ அத்தனையையும் உருவாக்குகிறது. இந்த நாட்டை ஆண்ட கட்சி, இப்போது எதிர்கட்சியாக இருக்கிற கட்சி, இன்னும் தேயப்போகிற கட்சி என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு போட்ட சட்டங்களிலே, உருவாக்கிய திட்டங்களிலே நடைமுறையிலே இன்ன கோளாறு இருக்கிறது. இன்ன குறை இருக்கிறது, இன்ன குற்றம் இருக்கிறது என்று சொல்வதாக இருந்தால் இப்படிப்பட்ட சிலர் அதிலே ஊடுருவல் செய்திருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட குற்றங்களில் ஈடுபடுகிறார்கள் என்று நிச்சயமாகச் சொல்லமுடியும்.

இன்றைக்கு இந்த நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு பிரச்சனையின் காரணமாக சட்டமன்ற விடுதியிலே கட்சி அலுவலகம் தேவையில்லை சட்டமன்றக் குழுக்களிலே இருந்துகூட விலகிக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். அது அவர்களுடைய சுயமரியாதை. அதை நான் தவறு என்று சொல்லவில்லை; குறைசொல்லவில்லை; அது பற்றி நான் விமர்சனமும் செய்யவில்லை. அதைப்போன்று மதுவிலக்கு தளர்த்தப்பட்டால் நாங்கள் குடிக்க மாட்டோம், ஏஜென்ட் எடுக்க மாட்டோம், அந்த வியாபாரத்தில் ஈடுபட மாட்டோம் என்று தெரிவிப்பார்களேயானால் உண்மையிலேயே அது அவர்களுடைய சுயமரியாதை, அவர்களிடமிருந்து அந்த சுயமரியாதையை நான் கற்றுக்கொள்ள, ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அவர்கள் அப்படிச் செய்து காட்டினால் பரவாயில்லை, பாராட்டுவேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். ஏதோ செய்கிறார்கள், இப்படிச் செய்யக்கூடியதையும் உடனடியாகச் செய்யாமல் 6 மாதத்திற்கு நீட்டிப்பு என்கிறார்கள் என்று குறை சொன்னார்கள். எதற்கும் ஒரு காரண-காரியம் இல்லாமல் எந்த அரசும் நீடிப்பு செய்யாது. இப்போது இருக்கிற நிலையை மாற்றி, விதிகள் போட்டு, கடைகளை நிர்ணயம் செய்கிறபோது எந்த இடத்தில் கடை வைக்க வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டும்; இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏஜென்டுகளை நியமிக்க வேண்டும், தகுதியின் அடிப்படையில் அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அரசாங்கத்திலேகூட பல்வேறு நிர்வாகிகளை நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

(பிற்பகல் 12-40)

எந்தெந்தப் பகுதியில் வருவாய் குறைந்திருக்கின்றது, எந்தெந்தப் பகுதியில் ஏலம் எடுக்காமல் விடப்பட்டிருக்கின்றது, எந்தெந்தப் பகுதிகளில் சிக்கல்கள் உள்ளன என்கின்ற கணக்கை எல்லாம் துல்லியமாக எடுத்துக்கொண்டு இனிமேல் நடைமுறைப்படுத்துகிறபோது எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் இருக்கக்கூடிய வகையில் சில நடைமுறைகளைத்



தெரிந்து கொள்வதற்காகத்தான் 6 மாத காலம் இதை வைத்திருக்கிறார்கள் என்று நான் நம்புகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் பல்வேறு விஷயங்கள் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே ஊழல் நடந்திருக்கின்றது, அந்த ஊழலைத் தொடர்ந்து நடத்தக்கூடிய வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது, மிகப்பெரிய குற்றங்கள் இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனால் நான் இங்கே பல்வேறு உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும். எனக்குத் தெரிந்த வரையில் அவர்கள் நடைமுறைப்படுத்தியபோது செய்த தவறுகளைச் சொல்ல முடியும். எனக்குக் கிடைத்த அப்படிப்பட்ட தகவல்களில் ஒன்றிரண்டை மட்டும் இந்த நேரத்திலே சொல்வது சாலப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

ஓரியன் கெமிக்கல்ஸ் நிறுவனத்திலிருந்து 10,000 லிட்டர் சாராவியை கடப்பையிலுள்ள உமா நிறுவனத்திற்கு ஏற்றுமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் உமா நிறுவனம் என்பது கற்பனையான நிறுவனமே. எனவே அந்த அனுமதி பின்பு திருப்பிக் கொடுத்தும் சாராவி தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டது. இது எங்கள் காலத்தில் இல்லை.

அடுத்து 18-3-75-ல் ஐந்து ஏற்றுமதி அனுமதிகள் அரவிந்த் டிஸ்டில்லர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு 16,000 லிட்டர் வீரியம் குறைந்த சாராவியை கோவாவில் உள்ள ஐந்து நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. ஆனால் அனுமதிக்கப்பட்ட 16,000 லிட்டர் வீரியம் குறைந்த சாராவியும் தமிழ்நாட்டிலேயே விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அது நாங்கள் செய்த குற்றமில்லை.

அடுத்து 2-5-75 ல் கேரளாவிற்கு அனுமதிக்கப்பட்ட முறையே 7,000 லிட்டர் வீரியம் குறைந்த சாராவி மற்றும் 4,000 லிட்டர் வீரியம் குறைந்த சாராவி தமிழ்நாட்டிலேயே விற்பனை செய்யப்பட்டுள்ளது. கேரளாவிற்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை. அதுவும் நாங்கள் செய்த குற்றமில்லை.

26-6-75-ல் ஓரியன் கெமிகல்ஸ்க் நிறுவனத்திற்கு 18,000 லிட்டர் வீரியம் குறைந்த சாராவியை, சக்தி கெமிக்கல்ஸ் என்ற பெயரில் இல்லாத ஒரு கற்பனையான நிறுவனத்திற்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டு, தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டது. அது எங்கள் ஆட்சியில் செய்யப்படவில்லை.

28-12-74-ல் ஓரியன் கெமிக்கல்ஸ் நிறுவனத்திலிருந்து ஹைதராபாத்தில் உள்ள பாரமவுண்ட் கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்ட 7,600 லிட்ட

வீரியம் குறைந்த சாராவி குறிப்பிடப்பட்ட நிறுவனத்தைச் சென்று அடையாமல் தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டது. அதுமட்டுமல்ல. காமதேனு டிரிங்ஸ்லிருந்து 1975ஆம் ஆண்டு மொத்தம் 10,20, 000 லிட்டர் எரிசாராயம் கேரளாவில் உள்ள சித்தூர், கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டு தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டது. இப்படி சொல்லிக்கொண்டே போக முடியும். முக்கியமான புள்ளி விவரங்கள் எல்லாம் கையிலே இருக்கின்றன. ஏற்கெனவே ஆட்சிப் பீடத்தில் இருந்தவர்கள் இப்படிப்பட்ட பல்வேறு தவறுகளைச் செய்துவிட்டு இப்போது இருக்கின்ற ஆட்சி நல்ல பல கருத்துக்களை உள்ளடக்கிய நல்ல நிர்வாகத்தை மேற்கொள்வதற்காகக் கொண்டுவரக்கூடிய இந்தத் திட்டங்களைப்பற்றி குறைசொல்லிப். பேசுகிறார்கள்.

அவர்கள் கடைசியாகப் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னார்கன். இந்த ஆட்சி இரட்டை நிலை எடுக்கின்றது என்று சொன்னார்கள். தாய்க்குலம் பற்றிப் பேசுவது, பின்னர் ஒன்று பேசுவது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைக்கத்தான் இந்தச் சட்டமுன்வடிவை கொண்டு வருகிறோம். பல்வேறு சூழ்நிலைகளில் தாய்க்குலத்திற்கு பல்வேறு வகையில் அவதி ஏற்படக்கூடிய நிலைமையின் காரணத்தால், தேவையில்லாத பல கலப்படமான குடிகளை எல்லாம் குடித்து பல்வேறுவிதமான கஷ்டங்கள் எல்லாம் ஏற்படுவதால் அனைவருக்கும் பாதுகாப்புத் தரக்கூடிய வகையில் தான் இந்தச் சட்டமுன்வடிவு இந்த நேரத்தில் தேவைப்படுகின்றது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இரட்டை நிலை, இரட்டை நாக்கு என்றெல்லாம் சொன்னார்கள். மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்று சொல்லிவிட்டு பின்னர் மத்தியிலே சுயாட்சியை அமைக்க உதவிவிட்டு மாநிலத்திலே கூட்டாட்சி ஏற்படுத்த நினைத்தவர்கள் இரட்டை நிலைபற்றிப் பேசலாமா?

இலங்கைப் பிரச்னைக்காக அண்ணாநகர் தொகுதியின் எம். எல். ஏ. பதவியை ராஜினாமா செய்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டு பின்னர் எலக்ஷன் வருகின்றபோது இலங்கைப் பிரச்சினைப்பற்றிப் பேசமாட்டேன் என்று சொன்னது இரட்டை நிலையா ஒற்றை நிலையா?

இலங்கைத் தமிழர்களுக்காக உயிரையும் கொடுப்பேன் என்று இங்கே சொல்லிவிட்டு இலங்கைத் தமிழன் குட்டிமணியைப் பிடித்துக் கொடுத்தது, இரட்டை நிலையா ஒற்றை நிலையா?

இந்தி மொழியைப் பரப்புவதை எதிர்ப்பேன் என்று சொல்லிவிட்டு அதனைப் பரப்புகின்ற நேரத்தில் அதிலே மெம்பர்களாகச் போய்ச் சேர்ந்து கொள்வது இரட்டை நிலையா ஒற்றை நிலையா? (குறுக்கீடுகள்)



திரு. மு. இராமநாதன்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். அவர் சட்டமுன்வடிவிலே பேசுகிறாரா அல்லது பொது மேடையிலே பேசுகிறாரா என்று சந்தேகம் வருகிறது....

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: நீங்கள் இந்தப் பக்கம் பேசும் போதும் அப்படித்தான் பில்லினுடைய ஸ்கோப்பையே விட்டு, வேறு எதிலேயோ பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் தொடங்கிவிட்டீர்கள். அவர்கள் அதற்குப் பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். சரியான முறைப்படி பார்த்தால் சட்டமுன்வடிவை விட்டு வேறு எதையும் பேசக் கூடாது. அப்படிப் பேசினால், ஐந்து ஐந்து நிமிடத்தில் ஒவ்வொருவரும் முடித்துவிடலாம். ஆனால் அப்படித்தான் இல்லையே. அந்த நடைமுறைகள் அடிக்கடி மாறுபடுகிறதே. இனிமேலாவது உறுப்பினர்கள் அந்த முறை மாறாமல், அந்தந்த சப்ஜெக்டிற்குள்ளேயே பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன்: நான் அதைக் கேட்கவில்லை, வேறு விவகாரம் பேச விரும்புகிறேன். தயவுசெய்து அனுமதி அளிக்க வேண்டும். நான் சொல்ல வந்தது. குட்டிமணி விவகாரம் பற்றி ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே பேசப்பட்டு எதிர்க்கட்சி வரிசையில் உள்ள பேராசிரியர் அவர்களும், இதற்கு முன்பிருந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பலமுறை விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வேண்டாத பிரச்சினைகளை விட்டுவிட்டு அவர்களை தயவுசெய்து பில்லிலேயே பேசும்படி கேட்டுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: நான் பில்லிலேதான் பேசுகிறேன். அவர்கள் பேசும்போது பல்வேறு கருத்துக்களைத் தேவையில்லாமல் அவர்கள் எடுத்துவைத்துவிட்டக் காரணத்தினால், அதற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் எங்களுக்கு ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; எல்லா உறுப்பினர்களுமே, ஒரு ஒழுங்கு முறைக்கு கட்டுப்பட்டு, சப்ஜெக்டிலே தான் பேசவேண்டும் என்ற முறையைக் கடைப்பிடித்தால்தான் சபையினுடைய நேரத்தைக் காப்பாற்ற முடியும்.

டாக்டர் கே. சமரசம்: ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் குடிக்கக் கூடாது என்பதுதான் எங்களுடைய முழுமையான கொள்கையாக நோக்கமாக இருந்தாலும், குடிக்கக் கூடியவர்களுக்கு தவறுகள் அதனால் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, அது ஒரு தனி மனிதனுடைய நோக்கமாக இல்லாமல், அரசினுடைய நிலை இதில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் எண்ணிப் பார்த்து, தவறு நேராமல் இருக்கவும், மது குடிக்கக் கூடியவர்களையும் பாதுகாக்க வேண்டும், குடிக்காதவர்களையும் பாதுகாக்க வேண்டும் என்ற அவசர அவசிய அடிப்படையில்தான் இப்படிப்பட்ட சட்ட முன்வடிவு கொண்டு வந்திருக்கிறோம் என்பதை ஆதாரத்தோடு த்துச் சொல்லி, இதை வரவேற்று அமர்கிறேன்.

*திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மதுவிலக்கு சட்ட திருத்த முன்வடிவின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக் களை கூற முற்படுகிறேன். குறிப்பாக வரக்கூடிய வருமானத்தின் அளவு குறைகிறது. வரவேண்டிய வருமானம், அரசுக்கு வர வேண்டிய அளவுக்கு வந்து சேரவில்லை. எனவே இந்த ஏலம் விடக் கூடிய அல்லது டெண்டர் கொடுக்கக் கூடிய கிஸ்தி வசூலிக்கக் கூடிய அந்த முறையை மாற்றி, சாராய விற்பனையை ஏஜென்ட் வைத்து நடத்தும் நிலைக்கு கொண்டு வருவதற்காக கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவிலே என்னுடைய கருத்தைக் கூறுவதற்கு முன்னால், அரசு பரிசீலிக்க வேண்டும என்று நான் கேட்டுக் கொள்வது, எதைச் சொன்னாலும் அதுவும் எதிர் தரப்பிலேயிருந்து எதைச் சொன் னாலும், அதை உள் நோக்கத்தோடு சொல்வதாக அல்லது குற்றம் சாட்டுவதற்காக சொல்வதாக அரசும், இந்த அவையும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று நான் முதலிலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொடர்ச்சியாக இந்த அவையிலே முன்னாலே இருந்த அரசுகள் செய்த தவறுகளை-சொல்லக் கூடாது என்று நான் சொல்லவில்லை அந்த தவறுகளை அஸ்திவாரமாக வைத்து அதே தவறான வழிகளிலேயே இந்த அரசும் போகுமேயானால், அன்று அந்த அரசு நடத்தியவர்கள் இருக்கின்ற இடத்திற்கு நாங்களும் செல்வோம் என்று நீங்கள் பந்தயம் கட்டினால், உங்களோடு பந்தயம் கட்டுவதற்கு நாங்கள் தயாராக இல்லை.

அதிலே, இந்த வருமான இழப்பு ஏற்பட்டதற்கு, இந்த ஏலம் எடுப்பவர்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து, தங்களுக்குள்ளே ஒரு கூட்டு ஏற்பாடு செய்துகொண்டு குறைந்த தொகைக்கு ஏலத்தை எடுப்பதற்கான முயற்சிகளைச் செய்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கக்கூடிய காரணம் முற்றிலும் உண்மையானது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் முழுவதற்கும் அது ஒன்றுதான் காரணம் அல்ல.

ஏலம் எடுப்பவர்கள் ஒன்றாகச் சேர்ந்து நின்று தங்களுக் குள்ளே கூட்டு ஏற்படுத்திக் கொண்டு, அந்த முறையிலே ஏலம் எடுப்பதற்கு முயற்சி செய்வது என்பதும் ஒரு காரணம். ஆனால் அரசு சொல்லாமல் விட்டிருக்கிற 2, 3 காரணங்களையும் இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அரசுக்கு அவை தெரிந்திருக்கும். தெரிந்திருந்தாலும், அவர்கள் அதைச் சொல்லாமல் விட்டிருக்கிற காரணத்தாலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இந்தக் கடைகளுக்கெல்லாம் கொடுக்க வேண்டிய சரக்குகள் கொடுக்க வேண்டிய அளவுக்கு காலத்திலே கொடுக்காததன் விளைவாக எங்களுக்கு வியாபாரமே நடக்கவில்லை, எனவே எங்களால் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணத்தைக்கட்ட முடியவில்லை என்று பலமுறை அரசுக்கும், அமைச்சருக்கும்கூட ஏலம் எடுத்தவர்கள் விலக்கு கேட்டிருக்கிறார்கள், கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள்.



அப்படி வராததாலே அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இரண்டாவது காரணம், கள்ளச் சாராயம் காய்ச்சுகிற நிகழ்ச்சிகள் இன்னும் குறைந்துவிடவில்லை. அதை இந்த ஏலதாரர்களே இங்கே அரசாங்கத்தின் மொத்த விற்பனையில் வாங்கினால், அதற்கு வரி கட்டவேண்டுமென்பதற்காக இங்கே ஒரு பகுதியை வாங்கிக் கொண்டு, கள்ளச்சாராயத்தில் ஒரு பகுதியை வாங்கி இரண்டையும் கலந்துகொள்கிற சம்பவங்கள் நடக்கின்றன. அரசாங்கத்திற்கு நானே ஒரு முறை மகஜர் அனுப்பியிருக்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் வேன் வைத்துக் கொண்டு ஒரு கள்ளச் சாராய வியாபாரி அந்தச் சரக்குகள் முழுவதையும் பல்வேறு கடைகளுக்கு சப்ளை செய்கிற காரியத்திலே ஈடுபட்டிருந்தார். கள்ளச்சாராயத்தை வாங்கி அதோடு சேர்த்து இதிலே ஒரு பகுதியும் வைத்து வியாபாரம் நடத்திவதினால் அரசாங்கத்திற்கு வருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12-50]

மூன்றாவது காரணம், குறிப்பாக தூத்துக்குடியில், இங்கே எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் பேசியதைப் போல, நடக்கிற ஜிஞ்சர் வியாபாரம். இந்தச் சாராய வியாபாரி களுடைய நடவடிக்கைகளை எல்லாம் தாண்டி, அதற்கு மேலே போய் பெரிய அளவிற்கு அவர்கள் ஜிஞ்சர் வியாபாரத்தை நடத்தி, குறைந்த விலையில் விற்று, சாராயம் குடிப்பவர்கள் ஜிஞ்சர் வாங்குகிற அளவிற்கு நிலைமைகள் உண்டாகி இந்த சாராய வியாபாரத்தை பின்னுக்கு தள்ளக்கூடிய அளவிற்கு வல்லமை படைத்தவர்களாக,சக்தி உள்ளவர்களாகத் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசுக்கு சாராய வியாபாரிகளே சேர்ந்து பலமுறை மனுக்கள் அனுப்பி, மகஜர் அனுப்பி, கோரிக்கைகள் அனுப்பி, அவற்றில் அரசு கவனம் செலுத்தவில்லை என்ற காரணத்தால், அவர்கள் நோட்டீஸ் அடித்து தமிழகம் முழுவதும் இன்றைக்கு விளம்பரப் படுத்தி யிருக்கிற அளவிற்கு நிகழ்ச்சிகள் சென்று இருக்கின்றன. அதிலே அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்காமல் இருந்தது என்பதற்கான காரணங்கள் எனக்குத் தெரியாது. இதில் நடவடிக்கை எடுக்காததற்காக நோக்கங்கள் எதுவும் கற்பிக்க வில்லை ஆனால் இப்படி சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் சேர்ந்து அரசாங்கத்திற்கு வருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே உறுப்பினர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். நிச்சயமாக எங்களைப்பொறுத்தமட்டில், என்னைப் பொறுத்த மட்டில், நான் சார்ந்திருக்கிற கட்சியைப் பொறுத்தமட்டில் இந்தச் சாராய வியாபாரத்தில், கள் வியாபாரத்தில் நாங்கள் யாரும் போட்டி போட நிச்சயமாக வர மாட்டோம். குடிக்கக் கூடிய பழக்கம் எங்களுக்கு இல்லை. மது குடிக்கக்கூடியவர் களை எங்களுடைய கட்சி உறுப்பினர்களாகக்கூட வைத்திருக்க மாட்டோம் என்று எங்களுடைய கட்சியினுடைய சட்டவிதிகள் இருக்கின்றன. எனவே அருமை சகோதரர் டாக்டர் சமரசம்

அவர்கள்சொன்னதைப் போல, முகவர்கள் வேண்டாமென்று நாங்கள்சொன்னால், சுற்றி வளைத்து எங்களுக்கு முகவர்கள் கொடுங்கள் என்று நாங்கள் என்றைக்கும் கேட்டதில்லை. கேட்கவும் மாட்டோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி சாராய வியாபாரத்திலே ஈடுபட்டிருப்பவர்களை, சாராயம் குடிப்பவர்களை நாங்கள் வைத்திருக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தச் சாராய வியாபாரத்தை வியாபாரிகளிடமிருந்து அரசு எடுக்கும்போது அதிலே பாதி கிணறு தாண்டக்கூடிய செயலை அரசு தயவுசெய்து செய்ய வேண்டாமென்று எங்கள் கட்சியின் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன். மொத்த வியாபாரத்தை இப்போது மாநில வாணிபக் கழகத்திடம் விட இருப்பதை, சில்லறை வியாபாரத்தையும் அவர்களிடம் விட்டு விடுவது என்று இருப்பதை, ஓரளவிற்கு தவறுகளை நிவர்த்திப் பதற்கு, வருமானத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிக்கும் போது, அதிலே மறுபடியும் நோக்கம் கண்டுபிடிப்பதற்கோ, அல்லது நோக்கம் ஏற்படுவதற்கோ நிலைமை இருக்கக் கூடாது. நீதி வழங்கினால் மட்டும் போதாது. நீதி வழங்கு வதற்கான தோற்றமும் இருக்க வேண்டும் என்ற முறையிலே வருமானத்தை அதிகப்படுத்துவதற்கு தமிழ்நாடு வாணிபக் கழகத்திடம் சில்லறை வியாபாரத்தை ஒப்படைக்கும் போது, அதிலே ‘அ’ போடுவது, ‘ல்’ போடுவது ‘அல்லது’ போடுவது என்பது வேண்டாம். இந்தப் பாதிக் கிணறு தாண்டுகிற காரியத்தால் சொல்லக்கூடிய காரியம் நிறைவேற்ற முடியாமல் போகக்கூடிய அபாயமும், ஆபத்தும் இதிலே கட்டாயம் இருக்கிறது. ஆகவே ‘அல்லது’ என்பதை இதிலே போடாமல், இந்த சில்லறை வியாபாரத்தையும் வாணிபக் கழகத்திலே விட்டுவிடுவது என்பது சரியாக இருக்கும் என்பது எங்களுடைய கருத்து. அதைப்போலதான் மொத்த வியாபாரத்தையும், சில்லரை வியாபாரத்தையும் அரசு எடுக்கிறபோது, குடிப்பது பாவம் என்றும் சொல்லவில்லை, குடிப்பது ரொம்பவும் சிறப்பானது என்றும் சொல்லவில்லை. குடிக்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். குடிக்கக்கூடியவர்கள் இருக்கிற வரையில் அந்தப் பொருளை நாம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அது பாவமான காரியமில்லை; அதைத் தொடுவதே சரியானதல்ல என்பதல்ல. ஆகவே குடிப்பது சிறப்பானது என்றும் சொல்ல வில்லை. குடிப்பவர்கள் குடிக்கட்டும். வாங்குபவர்கள் வாங்கட்டும். இதிலே தவறுகள் நடக்காமல் அரசுக்கு வர வேண்டிய வருமானம், வந்து சேரவேண்டிய நிலையில் முழுமையான அளவில் இந்த வாணிபக் கழகத்திடமே மொத்த விற்பனையையும், சில்லறை விற்பனையையும் கொடுக்க வேண்டும் என்ற முறையிலே இந்தச் சட்டத் திருத்தம் அமைந்தால் சரியானதாக இருக்கும்.

அடுத்ததாக, சில்லறை வியாபாரத்தையும், மொத்த வியாபாரத்தையும் அரசு எடுத்துக்கொண்டு, அதை உற்பத்தி செய்யக்கூடிய உரிமையை தனிப்பட்டவர்களுக்கு விட்டு



வைத்திருப்பது என்பது பொது நியாயத்திற்கே பொருத்த மானது அல்ல, தார்மீக—ரீதியிலேயும் இது சரியாக இல்லை. ஏன் என்றால், உற்பத்தி என்பது தனியார்களிடத்திலும், வியாபாரம் என்பது அரசாங்கத்திடமிருப்பது என்பது, நேர் மாறாக இருக்கிறது. வேறு சில பொதுத் துறைகளிலே நாம் பார்ப்போமேயானால், உற்பத்தி செய்வதை பொதுத்துறையிலே வைத்துக்கொண்டு சில்லறை வியாபாரத்தை தனியார்களிடம் ஒப்படைப்பது என்பதுதான் நடந்து வருகிறது. ஆனால் இது தலைகீழாக இருக்கிறது. எனவே சில்லறை வியாபாரத்தையும், மொத்த வியாபாரத்தையும் அரசு எடுத்துக் கொள்வது போல், உற்பத்தி செய்வதையும் அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். தனியார்களிடம் விட்டு வைக்கக்கூடாது. இந்த சில்லறை வியாபாரத்தை ஏஜெண்டுகளிடம் கொடுக்காமல் இருக்கவேண்டும் அவர்களிடம் கொடுப்பது என்பது சந்தேகத்தைத்தான் ஏற்படுத்தும். எனவே மொத்த வியாபாரத்தையும். சில்லறை வியாபாரத்தையும் வாணிபக் கழகத்திடம் மொத்தமாக ஒப்படைத்துவிட்டு, உற்பத்தி செய்வதையும் அரசே எடுத்துக் கொள்வதுதான் சிறந்தது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக இந்த பாட்டில்கள் மாற்றி மாற்றி வழங்கப் படுகிறது. இது கைமாறும்போதும் அதற்காக விலை நிர்ணயிக் கின்றபோதும், பெரிய அளவிற்கு பிரச்சனையை உண்டாக்கு கிறது. நான் இந்த அரசை கேட்டுக்கொள்வது, இந்த அவையைக் கேட்டுக்கொள்வது, இப்போது பால் எல்லாம் கூட பாலீத்தின் பைகளிலே போட்டு வியாபாரம் செய்கிறார்கள். அதனுடைய விலை 5 காசு அல்லது 10 காசுதான் ஆகும். வாங்கிச் சாப்பிடுபவர்கள் கூட அதைச் சாப்பிட்டுவிட்டு தூக்கி எறிந்துவிட்டு போய்விடுவார்கள். இதற்கு நிரந்தரமாக 50 காசு பாட்டிலுக்கு லாபம் என்று சொல்வதும், அதை திருப்பி இரண்டு ரூபாய் விலை கொடுத்து வாங்குவது, மறுபடியும் அதை 1 ரூபாய்க்கு வாங்குவது, இதிலே இடையிலே பலவித மான நிகழ்ச்சிகள் நடக்கிறது என்று கூறுவது போன்ற சந்தேகங்களுக்கு இடம் இல்லாமல், பாலித்தின் பைகளில் இந்தச் சாராயத்தை அடைத்து விற்பனை செய்தால், இப்படிப் பட்ட பிரச்சனைகள் எல்லாம் வராது. இந்தச் சாராயத்தை அடைப்பதிலே இந்த கெமிக்கலுக்கும், அந்த கெமிக்கலுக்கும் ஏதாவது சங்கடங்கள் இருந்தால், அதற்கேற்ற முறையில் யோசனை செய்து எப்படிப்பட்ட பாலிதின் பைகளில் அமைத்தால் நல்லது என்பதைக் கண்டுபிடித்து செய்யவேண்டும். இந்த பாட்டில்கள் உபயோகிப்பது என்பதைக் கைவிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த முகவர்கள் , என்பது நிச்சயமாகக் கூடாது. வாணிபக் கழகமே நேரடியாக ஆட்களை நியமித்து. அது நடத்தப்பட வேண்டும். அப்படி நடத்தும்போது, அவைகளை நல்லமுறையில் நடத்த வேண்டும். இப்போது சாராயக்கடைகள்

நடத்துகிறவர்கள் எல்லாம் இசை நிகழ்ச்சி வைப்பதும், ரேடியோக்களை வைப்பது என்பதும் அடிக்கடி நடந்து கொண்டு வருகிறது. இதனால் அதைச்சுற்றியுள்ள மக்கள் அமைதியற்ற முறையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

அடுத்ததாக, இந்தக் கடைகள் வைப்பது என்பதை நகருக்கு ஒதுக்குப்புறமான இடங்களில் வைக்கவேண்டும். தற்போது உள்ள சாராயக்கடைகள் எல்லாம், பள்ளிக்கூடங்களுக்கு எதிராகவும், பஸ் நிலையங்களுக்கு எதிராகவும், பொது மக்கள் தண்ணீர் பிடிக்க வருகிற குடிநீர் தொட்டிகளுக்கு எதிராகவும், மற்றும் ஆஸ்பத்திரிகளுக்கு எதிராகவும் தான் இருக்கின்றன. அத்தோடு மக்கள் நெருக்கடியாக வாழக்கூடிய இடங்களில் இந்தச் சாராயக் கடைகள் இருப்பதனால், பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே இப்படிப்பட்ட கடைகளை நகரின் ஒதுக்குப்புறங்களில் அமைக்கவேண்டும் இதிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். நாகை நகரத்திற்குப் பக்கத்தில், வேளாங்கண்ணி ரோடில், நாகை ரோடும், திருவாரூர் ரோடும் சந்திக்கக்கூடிய இடத்தில். பஸ் பயணிகள் காத்திருக்கக்கூடிய இடத்தில் ஒரு கள்ளுக்கடையும், ஒரு சாராயக் கடையும் இருக்கின்றது. எனவே மக்கள் பஸ்களில் பயணம் செய்ய வருவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது; இது சம்பந்தமாக நான் நாகை கோட்டாட்சித் தலைவரையும், டி.எஸ்.பி. அவர்களையும் சந்தித்து, அந்தக் கடைகளை வேறு இடத்திற்கு மாற்றுங்கள், இல்லையென்றால் இந்த பஸ் ஸ்டாண்டையாவது வேறு இடத்திற்கு மாற்றுங்கள் என்று நான் கேட்டுக்கொண்டேன் எனவே இப்படிப்பட்ட நிலைமைகள் பொதுமக்களுக்கு வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாராயக் கடைகளை ஒரு குறிப்பிட்ட மணி நேரம் தான் திறந்து வைக்கவேண்டும் என்று உத்தரவிட வேண்டும். உதாரணமாக காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை, அல்லது இரவு 8 மணி வரை என்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை தீர்மானிக்கவேண்டும். இப்போதெல்லாம் 24 மணி நேரமும் திறந்து வைத்து இருப்பது என்பதை தடுத்து நிறுத்த வேண்டும்,

பள்ளிக்கூடங்களுக்கு எதிராகவும், ஆஸ்பத்திரிகளுக்கு எதிராகவும் சாராயக்கடைகள் வைப்பதால், அந்த இடங்களில் சமூக விரோதிகள் கூடி வேண்டாத வேலைகளில் அவர்கள் ஈடுபடுவதற்கு வசதியாக இருக்கிறது. அதோடு சாதாரண மக்கள் போய் வருவதற்கும் சங்கடமாக இருக்கிறது. எனவே மக்கள் நெருக்கடி அதிகமாக இருக்கின்ற இடங்களிலும், பெண்கள் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களிலும், இப்படிப்பட்ட கடைகளை வைக்க அனுமதிக்கக்கூடாது. அதோடு இரவு முழுவதும் கடைகள் இல்லாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக பகல் நேரத்தில் மட்டும் அந்தக் கடைகளை திறந்து வைக்கும் அளவிற்கு அரசாங்கம் உத்தரவிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





இன்னொன்று, இந்தச் சாராயக் கடைகளையும், கள்ளுக் கடைகளையும் ஏலம் விடும்போது, அரசாங்கம் மிகவும் எச்சரிக்கையாக இருந்து, அந்தக் கடைகள் இருக்கக்கூடிய இடங்களை அதிகாரிகள் சென்று பார்க்கக்கூடிய அளவிற்கு நிலைமைகளை உருவாக்க வேண்டும். ஏன் என்றால், இப்போது கடைகளை நடத்துகின்றவர்கள், மிகவும் மோசமான இடத்தில் கேடுகெட்ட நிலையில், சுகாதாரமற்ற இடத்தில், கடைகளை நடத்துகிறார்கள். இந்த நிலைமைகள் இருப்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்களுக்கு தெரியும். அப்படிப் பட்ட இடத்தில் எந்தவிதமான சுத்தமும், நாகரீகமும் இல்லாத அளவிற்கு நடத்துகிறார்கள்.

(பிற்பகல் 1,00)

நான் ஏன் இதை குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் தயவு செய்து நமமுடைய அதிகாரிகள் சிலரை அனுப்பியாவது பக்கத்தில் இருக்கக்கூடிய கேரளாவில் இருக்கக்கூடிய கள்ளுக் கடைகளை எப்படி நடத்துகிறார்கள் என்பதைப் பார்த்து அவ்வாறு செய்வீர்களானால் கிட்டத்தட்ட ஒரு டீக்கடையைப் போல, ஒரு காப்பி கடையைப் போல கள்ளுக் கடைகளை அங்கே நடத்துகிறார்கள். அதனால் அங்கே எந்தவிதமான அசம்பாவிதமும், சங்கடமும் இல்லை. அப்படிப்பட்ட ஒரு நிலையில் கள்ளுக்கடைகளை எல்லாம் ஏலத்தில் நீங்கள் விட்டாலும் அந்தக் கடைகள் எப்படி சுகாதார ரீதியாக இருக்கவேண்டும் என்று விதிமுறைகளை சேர்த்து அந்த கள்ளுக்கடைகளை அமைக்க வேண்டும், சுற்றுப்புற சூழ்நிலைகள் நல்ல முறையில் இருக்கிறதா என்று தீர்மானித்து அவர்களுக்கு கடையை கொடுக்கவேண்டும். இந்த சட்டமுன்வடிற்கு அப்பாற்பட்டு இருந்தாலும் அதையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த சட்டத்தில் குறிப்பாக ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாகசொல்லியிருக்கக்கூடிய அந்தவரியில் மேற்சொன்ன கழகத்தின் பணியாளர்கள் மூலமாக நேரடியாகவோ 'அல்லது' என்று இருக்கிறது அதை எடுத்துவிட்டு நேரடியாகவே நடத்தப்படும் என்று இந்த சட்டத்தைத் திருத்தி அதற்கு கீழே இருக்கக்கூடிய அந்த பாராக்களை எடுத்துவிட்டு இந்த சட்டத்தை நிறைவேற்றினால் எந்த நோக்கமும் கண்டுபிடிக்க முடியாது, இந்த உள் நோக்கம் என்று மற்றவர்கள் சொல்லும்போது நீங்கள் செய்யவில்லையா என்று நாம் கூறிக்கொண்டு இருப்பது அது இந்த சபையின் அலுவலுக்கு பொருத்தம் அற்ற நிலையில் இப்படியே திருப்பி திருப்பி வருவது என்பது சரியல்ல. இதை உங்கள் காலத்திலாவது மாற்றி இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு முயற்சிக்கவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னால் கொண்டு வரப்பட்டு இருக்கக்கூடிய இந்த மதுவிலக்கு திருத்த சட்டத்தை அரசு அன்பு கூர்ந்து திருப்பிப் பெற்று மதுவை ரத்து செய்வதற்கான ஒரு சட்டத்தை கொண்டு வரவேண்டும் என்று நான் மெத்த பணிவன்போடு வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன். செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள். அந்த திருநாளிலே இந்த நாட்டிலே பூரணமான மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என்ற உறுதியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இந்த எதிர்பார்ப்பு இந்த நாட்டில் மிக ஆழமாக இருக்கிறது. அதிலும் மது தீமை தரக்கூடியது என்ற கருத்தில் இந்த மன்றத்தில் அமைந்து இருக்கக்கூடிய எந்த கட்சிக்கும் வேறுபாடு கிடையாது. இந்த நாட்டில் வாழக்கூடிய மக்களிடத்தில் அதுபற்றி கருத்து மாறுபாடு இல்லை. பாவங்களுக்கு எல்லாம் தலையானதாக, நாட்டில் நடந்து வரக்கூடிய தீமைகளுக்கு அடிப்படையானதாக நிகழ்ந்து வரக்கூடிய கொலைகளில் மிகவும் பெரும்பாலானவைகளுக்கு இன்றைக்கு காரணமாக இது இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சாலைகளில் ஏற்பட்டு வரக்கூடிய விபத்துக்களுக்கு எல்லாம் காரணமாக அமைந்து இருக்கக்கூடிய இந்த தீமையை ஒழிப்பதில் ஏன் இந்த சபையில் இன்னும் ஒரு ஒருமைப்பாடு ஏற்படவில்லை. மது தீமை தரக்கூடியது, குடி குடியை கெடுக்கும் என்று குடி கடையில்கூட எழுதி வைக்கவேண்டும் என்பதை கூட ஒரு சட்டமாக ஒரு கட்டாயமாக ஆக்கி இருக்கக்கூடிய இந்த ஆட்சியில் அதை தடை செய்வதற்காக ஏன் ஒரு சட்டம் கொண்டுவரப்படவில்லை என்ற வேதனைதான் எனக்கு ஏற்படுகிறது. எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு மதுவிலக்கிலே எவ்வளவு ஆழமான உள் உணர்வு இருந்ததோ அதே உள் உணர்வு இன்று முதலமைச்சராக பொறுப்பு ஏற்று இருக்கக்கூடிய புரட்சித் தலைவருக்கு இருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஏன் என்றால் இடைகாலத்தில் மதுவிலக்குக்கு கொஞ்சம் ஓய்வு கொடுக்கப்பட்ட நேரத்தில்கூட அந்த அரசின் சார்பாக அமைக்கப்பட்ட மதுவிலக்கு பிரச்சார குழுவுக்கு இன்று முதலமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமுகு எம்.ஜி.ஆர் அவர்கள் தான் தலைமை தாங்கி இருந்தார்கள். இன்று கூட இந்த அரசின் சார்பாக மதுவிலக்குப் பிரச்சாரம் செய்வதற்காக ஒரு தொகை ஒதுக்கப்படுகிறது என்று நான் நம்புகிறேன். ஆனால் ஒதுக்கப்பட்ட அந்தக் தொகையின் அடிப்படையிலே, அத்தகைய பிரச்சாரம் மதுவைத் தடை செய்வதற்காக, அல்லது மக்கள் மது குடிப்பதிலிருந்து அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காகச் செய்யப்படுகிறதா என்பதையும் நான் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே பேசியவர்கள் கூட ஏற்கனவே இந்த சாராய கடைகளை நடத்தி வருபவர்கள் சர்க்காருக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை, அவர்கள் அடைந்து விடுகிறார்கள். சர்க்காருக்கு நியாயமாகச் சேரவேண்டிய வருமானம் சேர வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில்





வந்த வருமானத்தைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. அந்த வருமானம் முழுக்க முழுக்க பாவத்தின் அடிப்படையிலே வருகிறது. எந்தவிதமான தார்மீக அடிப்படையும் இல்லாமல், தமிழகத்திலே எத்தனை கோடி வருகிறது என்பது பெரிதல்ல; எத்தனை கோடி கொடுத்தாலும் பெற முடியாத ஒரு பண்பாடு இந்தக் கோடிக்கணக்கான ரூபாயினாலே அழிக்கப்படுகிறது என்கிற உணர்வு யாரும் கொள்ளவில்லையே என்று வேதனை தான் எனக்கு ஏற்படுகிறது. இன்றுகூட எனக்கு நம்பிக்கை இருக்கிறது. தமிழகத்திலே முற்றாக, மதுவிலக்கு அமல்படுத்தப்படவேண்டிய, அதற்கு அதிகாரம் பெற்றவராகவும் வலிமைப் பெற்றதாகவும் இருக்கக்கூடிய ஒரு சக்தியாக இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் விளங்குகிறார்கள் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே, அவரே அறிவித்து இருக்கக்கூடிய கொள்கையின் அடிப்படையிலே, தேர்தல் காலத்திலே, இன்று மிகப் பெரும் எண்ணிக்கையாக அமர்ந்திருக்கக்கூடிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மக்களைச் சந்திக்கக்கூடிய நேரத்திலே, தாய்மார்களை அணுகிய நேரத்தில், அவர்கள் தந்த வாக்குறுதியின் அடிப்படையிலே முழுமையாக மதுவிலக்கை அமல்படுத்துவதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னோடியாக இன்று கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தத்தை வாபஸ் பெற்று அதற்கான ஒரு சட்டத்தை எவ்வளவு விரைவாக முடியுமோ, எவ்வளவு தீவிரமான சட்டத்தை கொண்டுவரமுடியுமோ அப்படிக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டு, இன்று கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தத்தை நான் வன்மையாக எதிர்த்து அமைகிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்—சாராய திருத்தச் சட்டத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லிட விரும்புகிறேன். இன்றைக்கு நமது முதலமைச்சர் அவர்கள் செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதியோடு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதாக அறிவித்து இருந்தார்கள். அதை எதிர்பார்த்த தாய்க்குலம் ஏமாற்றம் அடையக்கூடிய அளவுக்கு இன்றைக்கு மறுபடியும் இந்தச் சட்டம் வருகிறபோது தான் வேதனையாக இருக்கிறது. இந்தச் சட்டம் வருகிறபோது, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்த வேண்டும் என்று நாங்கள் ஆதரவு கொடுத்தோம். காரணம், கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்காகத்தான். ஆனால், இப்போது கள்ளச்சாராயம், சர்க்காரோடு போட்டிப் போடக்கூடிய அளவுக்கு மேலும் வளரக்கூடிய நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தச் சாராயம் ஒரு பக்கம் மக்களைப் பாதிக்கிறது, குடும்பத்தை பாதிக்கிறது. குழந்தைகளுக்கு ஒரு பக்கம் சோறு வழங்குகிறோம் என்று சோறு போட்டு, இன்னொரு பக்கம் தகப்பனைக் குடிக்க வைத்து இன்றைக்கு லட்சக்கணக்கான குடும்பங்கள் எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறது என்பது எல்லோரும் அறிந்த விவகாரம். ஆகவே, எதிர்காலத்தில் இந்த மதுவை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டும், குறைக்க வேண்டும் என்று அரசும், அமைச்சர் அவர்களும் சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோல், இன்றைக்கு சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும் இருக்கின்ற இடங்களைப் பார்த்தால், கோயில், யூனியன் அலுவலகம், பள்ளிக்கூடம், ஆஸ்பிடல், தெரு இவைகளுக்கு அருகாமையில் வைக்கின்றதால், பள்ளிக்கூடத்து மாணவர்கள் கூட, பெரும் பகுதிப்பேர் பள்ளிக்குப் போகும் போதே, ஒரு 50 வாங்கி ஊற்றிக் கொண்டு, வாயைத் துடைத்துக் கொண்டு போகக்கூடிய ஒரு காட்சி இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. இதை ஒழுங்குப்படுத்தக்கூடிய அளவுக்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். வருமானம் வேண்டும். அதை வேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. முன்னால், நாங்கள் எல்லாம் 20, 22-வயது இருக்கிறபோது, ஒவ்வொரு ரெவினியூ வட்டத்திற்கு ஒரு கள்ளுக்கடை இருக்கும். நகரங்களிலே சாராயக் கடை இருக்கும். இப்போது, வீட்டை விட்டுக் கிளம்பி, இப்படித் திரும்பினாலே, 2 பெஞ்சு 2 பாட்டில், மொந்தை, வாழைத்தார்தான் தொங்கிக் கொண்டு இருக்கிறது. ஆகவே, இப்படி தெருவுக்குத் தெரு, மூலைக்கு மூலை, எங்கு பார்த்தாலும் கிளை, பிராஞ்ச்-ஆக பிரிக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட அக்கிரமங்களை ஒழித்து, உழைக்கக்கூடிய மக்கள், பொருளாதாரம் ஒழுங்காக, தங்களுடைய குடும்பத்திற்கு பயன் அளிக்கக்கூடிவ அளக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த சாராய விற்பனை மூலமாகக் கொடுக்கிறபோது சொல்கிறார்கன்—இரண்டு வருஷமாக எங்களுக்கு கம்பெனி சாராயமே கொடுக்கப்படவில்லை. அதனாலே ஏலம் எடுக்கக்கூடிய ஏலதாரர்கள் பணம் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறோம் என்று சாராயக் கடைக்காரர்கள் ஒரு பக்கம் சொல்கிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால், நாங்கள் வசூல் பண்ண முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இப்படி வசூல் பாக்கி வைத்திருப்பவர்களில் பெரும் பகுதியினர், பெரும் புள்ளிகளாக இருக்கிறார்கள். இதையெல்லாம் எதிர்காலத்தில் ஒழுங்குபடுத்த வேண்டும்.

ஏஜெண்ட் என்று கொண்டு வந்திருக்கிறீர்கள். ஏஜெண்ட் என்று எப்படி நியமிக்கப் போகிறோம். ஏஜெண்ட் என்று சொன்னால், அதிகாரிகள் மூலமாக மீண்டும் பெரும் புள்ளிகள் தான் அதில் புகுந்து, இந்தத் திட்டத்தைச் சீர்குலைப்பார்கள். ஏஜெண்ட் என்பதற்கு போடக்கூடிய அப்ளிகேஷனை வாங்கி வைத்துக் கொண்டு, 10 சாராயக் கடை கொடுக்கவேண்டுமானால், 100 அப்ளிகேஷன் வரும்.

(பிற்பகல் 1-10)

அந்த நூறு அப்ளிகேஷன்களையும் குலுக்குச்சீட்டு மூலம் தகுதி பெற்றவர்களை ஏஜண்ட்களாக நியமித்தால் அல்லது அவர்களுக்கு ஏஜென்சி கொடுத்தால் ஆளும் கட்சிக்கு ஒரு கெட்ட பெயர் வராமலிருக்கும். இல்ல விட்டால் எதிர்காலத்தில் பெரிய புள்ளிகள் அல்லது சில நபர்கள் அதைப் பயன்படுத்தி மீண்டும் இந்தத் திட்டத்தை சீர்குலைப்பார்கள் என்பதை எடுத்துச்





சொல்லி எதிர்காலத்தில் அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் ஒழுங்குபடுத்தி எந்த இடத்திலும் இந்தமாதிரிக் காரியங்களை சீர்குலைக்காமல் பாதுகாக்கவேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

* **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த நோக்கத்திற்காக இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை மேற்சொள்வது என்பதற்கான காரணங்களை முகப்புரை தெளிவாக்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது குறிப்பாக அன்புப் பெரியவர் மாண்புமிகு அப்துல் சமத் அவர்கள் பேசுகிறபோது மதுவிலக்குக் கொள்கையினை நடைமுறைப்படுத்தத்தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என்பதை வலியுறுத்திப் பேசினார்கள். மதுவிலக்குக் கொள்கை என்னவாயிற்று. முதல்வர் அவர்கள் கொடுத்த உறுதிமொழி என்னவாயிற்று என்ற வினாவை எழுப்பினார்கள். ஏற்கனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாக்கியதைப் போல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதிமொழி என்பதை வரையறுத்து அவையில் சொல்லவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதற்சாக வெளியே சொன்னதை நடைமுறைப்படுத்த வேண்டாமா என்ற வினாவையும் எழுப்பினார்கள். வெளியிலே பேசுகிறபோது கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா பிறந்த தினமான செப்டம்பர் 15 வாக்கில் மதுவிலக்கை மீண்டும் தமிழகத்தில் கொண்டுவர எண்ணியிருக்கிறோம்—சப்ஜக்ட் டு எ கண்டிஷன்—அதையும் சொல்லியிருக்கிறார்கள். சாராயக் கடைகள் மூலம் கிடைக்கிற வருமானம் வேறு வழிகளில் வருவதற்கு நடவடிக்கை எடுத்த பிறகு அரசாங்க வருமானத்தை பெரிதும் குறைக்கிற கள்ளச் சாராயம் முடிந்த அளவிற்கு ஒழிக்கப்பட்ட பிறகு இதை நடைமுறைப்படுத்தக் கூடிய சாத்தியக்கூறு எற்படும் என்ற subject to the conditions சொல்லியிருக்கிறார்கள். அவை பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கின்றன. இந்து பத்திரிகையில்கூட அவை குறித்த சாராம்சம் சிறிது வந்திருக்கிறது. இதை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம் அரசாங்கத்தினுடைய கொள்கை மதுவிலக்கை விட்டு விடுவது என்பது அல்ல என்பதை நான் அவையில் மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாநில அரசினுடைய வருவாயை எந்த எந்த வழிகளில் மிகைப்படுத்த முடியும் என்பதற்கு பல்வேறு வழிவகைகளை அரசு ஆய்ந்தது ட்ரேட் ஆண்ட் காமேர்ஸ் ஆண்ட் இண்டஸ்ட்ரியல் செக்டாரில் இருக்கிற பல வல்லுநர்கள் அரசுக்கு ஆலோசனைகளை நல்கினார்கள். வருவாயைப் பெருக்க தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவிட்டு கள்ளச்சாராயத்தை ஒழிப்பதில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிற நடவடிக்கைகளில் இன்னும் சற்று இருக்கிற குறைகளையும் களையக்கூடிய நிலையில் வெற்றி பெறுகிற நேரத்தில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவதில் இன்னல் இடையூறுகள் இராது என்ற நோக்கத்தோடு மதுவிலக்கை இந்த அரசு

கட்டாயம் தக்க தருணத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரும். அந்தக் கொள்கையை அரசாங்கம் விட்டுவிடவில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். (Interruptions) I earnestly request you not to prevent the flow of my speech.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பேச்சிலே குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டும். நான் கடைசியிலே, உள்ள சந்தேகங்களைக் கேட்கலாமென்று அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்வது மாதிரியே நான் கடைசியிலேயே சந்தேகங்களைக் கேட்கிறேன். ஒன்றை மட்டும் நான் கேட்க விரும்புகிறேன், அப்போதுதான் அவர்கள் தெளிவு படுத்துவதற்கு சரியாக இருக்கும் என்பதால். அரசாங்கம் வேறு துறைகளிலே, வேறு வழிகளிலே வருவாய் வரும்போது மதுவிலக்கு அமல்நடத்தப்படும் என்றும் அந்த இழப்பைச் சரிகட்டுவதற்கான வருமானத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்ததற்குப் பிறகு மது விலக்கு அமல்படுத்தப்படலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய நாவலர் அவர்கள் பிற துறைகள் மூலமாக பணத்தைப் பெறுவதற்குப் பதிலாக சாராயத்திற்கே வரியைப் போட்டிருக்கிறார்கள். அதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கும் குந்தகம் ஏற்படாமல் அதே நேரத்திலே அரசினுடைய வருவாய் அதிகரிக்கப்படுவதற்கு என்ன என்ன வழி வகைகள் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் நாவலர் அவர்களும் ஆய்ந்து வருகிறார்கள், அது வேறு. மாற்று வருவாய், கூடுதல்வருவாய் அரசுக்குக் கிடைக்கக்கூடிய முறையிலே அதை நிர்ணயிக்கின்ற காலம் வரையில் அரசினுடைய வருவாய் என்ற முறையிலே மதுவிலக்குத் தளர்த்தப்பட்டு இந்த முறை மூலமாக கூடுதல் வருவாய் வருவதைத் தடுக்கமுடியாது, அந்த அடிப்படையில் நாவலர் அவர்களும் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்.

மதுவிலக்குக் கொள்கை அண்ணாவின் கொள்கை. அந்தக் கொள்கையைப் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் ஆட்சி கட்டாயம் அமல்படுத்தும் என்பதைச் சொல்கிறேன், சப்ஜக்ட் டு கன்டிஷன்—நான் முன்னவர் கூறியது போன்று, என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரகுமான்கான் பேசும்போது, உத்தமபாளையம், கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளிலேயிருந்து ரெண்டல் அரியர்ஸ் மூலமாக 7 லட்சம் ரூபாய் இருப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள், அந்த இழப்பைப் பொறுத்தவரைக்கும் அப்செட் பிரைஸ் என்ற அளவுக்கு ஏலதாரர்கள் எடுக்கத் தவறிய காரணத்தினால் பொது மறு ஏலம் விடப்பட்டு அதன் காரணமாக அந்த டிபெரன்ஸ் என்ற முறையிலே ஏற்பட்டதுதான் இந்த இழப்பு. ஆகவே அது நேஷனல் லாஸ் ஆக இருந்த போதிலும்கூட நேஷனல் லாஸை சரிசெய்வதற்கு தக்க நடவடிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து நான்கு பிளண்டிங் யூனிட்டுகளிலே சாராயம் வீணாகி விட்டது என்ற நிலை இருப்பதாகவும் அது குறித்துத் தகவல் இல்லை என்றும் ஆடிட் ரிப்போர்ட்டிலே வந்திருப்பதைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து தகவல் கேட்டு இருக்கிறேன். சாராயம் உண்மையிலேயே கெட்டு விட்டதா இல்லையா என்பதை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுப்பதற்கும் தவறு என்றால் தண்டனை கொடுப்பதற்கும் கமிஷனருக்கு அதிகாரம் இருக்கிறது. இது குறித்து கமிஷனர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

மொலாஸஸ் சர்க்கரை ஆலைகளிலிருந்து எந்த அளவுக்குக் கிடைக்கிறது. எந்த அளவுக்கு விற்கிறார்கள், எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்ற விவரங்கள் வேண்டுமென்று ஆடிட்டர் ஜெனரல் கமிஷனரிடம் கேட்டு இருக்கிறார்கள். குற்றச்சாட்டாக அல்ல, அந்த விவரங்களைத்தான் கேட்டிருக்கிறார்கள். அந்த விவரங்களைத் தருவதற்கு வேண்டிய செயற்குறிப்பு இருக்கிறது.

சென்னையிலே 22 கடைகள், சில தனியார்களுக்கு அவர்கள் கட்டிய கிஸ்தியைத் திருப்பிக் கொடுத்து விட்டதாகக் குற்றச் சாட்டுச் சொன்னார்கள். அது எந்தத் தனி நபருக்கும் சலுகை அளிக்க வேண்டுமென்பதற்காகச் செய்யப்பட்டதல்ல. ஆயிரம் விளக்கு போன்ற தொகுதிகளில் மசூதி பக்கமும், ஆலயங்கள் பக்கமும், பள்ளிகள் பக்கமும் சில கடைகள் எடுக்கப்பட்டு ஏலமும் முடிந்த பிறகு பொதுமக்களுடைய எதிர்ப்பு வந்த பிறகு அந்த இடங்களிலே கடைகள் இருப்பது பொது மக்கள் நலனுக்கு இடையூறாக அமையும் என்ற கருத்தில் அவைகளை நீக்குவதற்கு அரசு பொதுமக்கள் நலன் கருதியே அரசு எடுத்த முடிவு என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

திரு. ரகுமான்கான் பேசுகின்றபோது 60 கோடி ரூபாய் அரசுக்கு வரவேண்டியது வசூலிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அது தவறான கணக்கு என்பதை முதற்கண் நான் சொல்ல விரும்புகிறேன். 1984–85-ஆம் ஆண்டுக்கு ஒட்டு மொத்தமாக 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் மட்டுமே வசூலிக்கப் பட முடியாத நிலைமை ஏற்பட்டது. அதற்காக அவற்றை வசூலிப்பதற்காக அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது. இது சென்னை நகரத்தினைப் பொறுத்துச் சொல்கிறேன்.

மாநிலம் முழுவதும் ஒட்டு மொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால், 26 கோடியே 76 இலட்சம் ரூபாய் இன்னும் வசூலாக வேண்டிய நிலையில் இருக்கிறது. அரசு அதற்காக நடவடிக்கைகளை எடுக்காமல் இல்லை. அரசு அப்படி மேற்கொள்கின்ற

பொழுது நீதிமன்றங்களுக்குச் சென்று தடை ஆணையை வாங்கி விட்டதால் அந்த வசூல் நடவடிக்கை நிலுவையில் இருக்கிறதே தவிர அரசு நடவடிக்கையை நிறுத்திவிடவில்லை. நீதிமன்றங்களில் வழக்குகள் முடிய முடிய ஆணைகளைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது ; வசூலிக்கப்பட்டும் வருகிறது. எனவே யாருக்குச எந்த சலுகையையும் அளிக்க வேண்டுமென்பது அரசின் நோக்கம் அல்ல என்பதற்காகத்தான் இதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னுமொன்றையும் சொன்னார்கள். Extension for six months to benefit whom? என்ற முறையிலே வினாவை எழுப்பினார்கள். 6 மாத கால நீட்டிப்புக்கு எந்த யிடத்திலேயும் புரொவிஷன் இல்லை என்பதையும், 15–10–85 வரை மூன்று மாத காலம் நீடிப்பது என்பதுதான் என்றும், அது தவிர்க்க முடியாத ஒன்று என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் அப்படி மூன்று மாத கால நீட்டிப்பு இருக்கும்பொழுது ஏற்கனவே இருக்கின்ற ஆக்ஷன்-கம்-டெண்டர்பெற்ற அவர்களே தொடர்ந்து கடைகளை வைத்திருப்பார்கள். ஆனால் அவர்களைக் கட்டாயப் படுத்த முடியாது. அவர்களில் யாரும் முன் வராவிட்டால் அந்த இடங்களை நேரடியாகத் தன்னுடைய பணியாளர்கள் மூலமாவோ அல்லது மற்ற வழிகளின் மூலமாகவோ நடத்துவதற்கு வாணிபக் கழகம் நடவடிக்கை எடுக்கலாம். அரசுக்கு அதனால் இழப்பு ஏற்படாது என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்

லீகல் பொசிஷன் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடரமணன் அவர்களும் சொன்னார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌரிராஜன் அவர்கள் பேசும் பொழுதும் சொன்னார்கள் என்று கருதுகிறேன். "When there is dispute between the Corporation and Agents, the civil jurisdiction is barred. Why? என்ற வினாவை எழுப்பினார்கள். நிலுவை என்று வரும்பொழுது, அப்படிப்பட்ட பிரச்னைகள் எழுகின்ற பொழுது, துரிதமாக பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காக தடைஆணை போன்றவற்றை நீதிமன்றத்தில் பெறுவதால் அரசின் நோக்கம் ஏற்கனவே சொன்னதைப்போல நீதிமன்றத் தடை ஆணைகளின் காரணமாகப் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் வசூலாகாமல் இருக்கின்ற நிலைமை இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் the civil jurisdiction is barred.' ஆனால், அதற்காக ஏஜண்டுகள் பாதிக்கப்படுகின்ற பொழுது அறவே பரிகாரம் இல்லை என்று சொல்லவில்லை. "The writ jurisdiction is always there" என்பதையும் நான் அவையினுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

இன்னுமொரு வினாவினையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எழுப்பினார்கள். சென்னையிலே 155 கடைகள் கொடுக்கப்பட்டதே அவைகள் யாருக்குக் கொடுக்கப்பட்டன. அந்தப் பட்டியலைச் சொல்லமுடியுமா என்று



கேட்டார்கள். சென்னையிலே உள்ள கடைகளை நாம் குறிப்பிட்ட யாருக்கும் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தனிப்பட்ட எவருக்கும் சலுகையாகக் கொடுக்கவில்லை. சென்னையிலே உள்ள கடைகளெல்லாம் ஆக்ஷன்–கம்–டெண்டர் மூலமாக ஏலத்தில் அதிகத் தொகை கேட்டவர்களால் எடுக்கப்பட்டவை, அதிலே பல பெயர்கள் இருக்கின்றன. சில பெயர்களை நான் சொல்கிறேன் ஏனென்றால் அந்தப் பட்டியலை வெளியிடத் தயாரா என்று சொன்னதற்காகச் சொல்கிறேன். இங்கே வெளியிடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். இதில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகக் கொடுக்கப்பட்டதும் அல்ல அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எடுத்து விட்டார்கள் என்று குற்றஞ்சாட்டவும் அல்ல. ஆக்ஷன்–கம்–டென்டர் சிஸ்டத்திலே வசதி படைத்தவர்கள் எடுத்து விடுகிறார்கள் என்பது தான் உண்மை. வசதி படைத்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஒருவேளை அதிகமாக இருப்பதாலோ என்னவோ ஒன்றல்ல, இரண்டல்ல 22 நபர்கள் பல்வேறு கடைகளை எடுத்து, பல கடைகளில் பங்குதாரர்களாக இருக்கிறார்கள். பெயரைப் படிக்கிறேன், அவர்கள் உங்கள் கட்சியிலே எந்தெந்தப் பொறுப்பிலே இருக்கிறார்கள் எபைதற்குக்கூட் பட்டியலில் விவரம் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைக் கூறுகிறேன். முன்னாள் எம்.எல்.ஏ. நல்லதம்பி அவர்களின் மகள் பெயரில் எடுத்த கடை இந்த 155 இல் ஒன்று. சைதைத் தொகுதி திராவிட முன்னேற்றக் செயலர் ஆர், எஸ், ஸ்ரீதர் எடுத்திருக்கிறார். சைதை தொகுதியினுடைய பொதுக் குழு உறுப்பினர் திரு. கிட்டு அவர்கள் எடுத்திருக்கிறார்கள். நான் இதைப் படித்துக் கொண்டே போனால் (குறுக்கீடு) ஒவ்வொரு தொகுதிக்கும் இருக்கிறது. (குறுக்கீடு) நான் சொல்லிக் கொண்டு வருகிறேன். இதை நான் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம் ......

**திரு அ. ரகுமான்கான் :** உதாரணம் என்று சொல்லிவிட்டு, தி.மு.க. கழகத்தைச் சேர்ந்தவர்களை மட்டும் குறிப்பிடுவது சரியல்ல......

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நான் அதைத்தான் சொல்கிறேன், பட்டியலைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அரசைப் பொறுத்தவரைக்கும் அவைக்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கானுக்கு இந்த 150 கடைகளின் உரிமையாளர்கள் யார், பங்குதாரர்கள் யார் என்ற பட்டியலை தரத் தயாராக இருக்கிறேன். நீங்களே பார்த்துக் கொள்ளலாம். காரணம், 150 கடைகளிலே' சென்னையிலே குறிப்பிட்டவர்களுக்குச் சலுகையாக அரசு செய்துவிட்டது என்ற குற்றச்சாட்டு வேண்டாம் என்பதற்காகச் சொல்கிறேன். அக்ஷன் -கம்- டெண்டரிலே வசதி படைத்தவர்கள் எப்படியும் எடுத்து விடுகிறார்கள் ; கொலூஷன் மூலமாக எடுந்து விடுகிறார்கள். இதிலே எல்லா கட்சிகளைச் சர்ந்தவர்களும் இருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் லைவர் அவர்களே சுட்டிக்காட்டினார்களே, அதைப் போல,

இதைப் பொறுத்தவரையிலும் கட்சி கிடையாது. நீதிமன்றத்திலே அவர்களே நடத்திய வழக்குகளை உதாரணமாக சொன்னார்களே, உண்மை இப்படி இருக்க, ஆளுங்கட்சியினர்மீது குற்றச்சாட்டைச் சுமத்தக் கூடாது என்பதற்காகத்தான் நடைமுறையை விளக்குவதற்காகத்தான் நான் சொல்கிறேன், பல்வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் இதிலே இருக்கிறார்கள்.

அதைப் போலவே, இன்னும் ஒரு சந்தேகத்தை எழுப்பி இருக்கிறார்கள். எந்த முறையிலே ஏஜென்டுகள் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்ற சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார்கள். சட்டத்திலே அது தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஏஜென்டுகள் மூலமாகத்தான் கொடுக்கப்படும் என்று இல்லை) Exclusive retail privilege is given only to the Corporation. This privilege is never accorded to an Agent or anybody else. இது மிகவும் தெளிவாக்கப்பட்டிருக்கின்றது. கார்ப்பரேஷனைப் பொறுத்தவரைக்கும் அதனுடைய பணியாளர்கள் மூலமாக நடத்தலாம், அதனுடைய பணியாளர்களை எந்த முறையில் நியமிக்க வேண்டுமோ அந்த முறையில் நியமிக்கலாம்; ஏஜென்டுகளை நியமிக்கலாம். ஏஜென்டுகள், ஏஜென்டுகள் என்று சொல்கிற பொழுதே ஒரு தவறான எண்ணம்—ஒருவேளை, தெளிவாக்கப்படாத காரணத்தால், புரியாத நிலையில் கூறப்படுகிறதோ தெரியவில்லை. அதிலே ஆக்ஷன்-கம் டென்டரிலே, எழுத்தின் மூலமாகக் கிடைத்தவர்கள் இலாப நோக்கத்தோடு, இலாபம் பெற்று விடுவார்களோ என்று எண்ணுகிறார்கள் என்று எண்ணுகிறேன். அது அப்படி அல்ல. உண்மைக்கு அது மாறானது. இந்த சிஸ்டத்தைப் பொறுத்தவரைக்கும் முன்பிருந்த நிலை, அரக்கினுடைய விலை, அதற்கு எக்சைஸ் டியூட்டி நிர்ணயிக்கப்படுகிறது, அதற்கு மேல் சேல்ஸ் டாக்ஸ் நிர்ணயிக்கப்படுகிறது; அதற்கு மேல் வாணிபக் கழகத்தினுடைய செலவு—டான்மாக் செலவு—நிர்ணயிக்கப்படுகிறது. அதற்கு மேல் ஏஜென்டுகள் கமிஷன் நிர்ணயிக்கப்படும். அதைப் பொறுத்தவரைக்கும் ஏஜென்டுகள்-ஆக்ஷன்-கம்-டென்டர் போல், அவர்களே விலையை நிர்ணயித்து விட்டு, இஷ்டம் போல விலையை நிர்ணயித்து விட முடியாது. ஏற்கனவே ஆக்ஷன் விடப்படுகின்ற நேரத்தில், ஆக்ஷனிலே ஒரு குறிப்பிட்ட தொகை அரசுக்கு வருவாயாகக் கிடைக்கிறது என்றால், ரூ. 120 கோடி, ரூ. 150 கோடி, ரூ. 200 கோடி கிடைக்கிறது என்றால், அந்த வருவாயிலிருந்து ஒரு சல்லிக் காசு கூட குறையாத அளவுக்கு, எப்படி அதை நிர்ணயிக்கலாம் என்ற முடிவுக்கு வந்து, Vend fee என்ற ஒரு கான்செப்ட் The right to sell is vested with the Government and sold this right is proposed to be granted to the Corporation. அதற்காக Vend fee என்ற முறையிலே குறைந்தபட்சம் ஒரு லிட்டருக்கு சராசரியாக -- கார்ப்பரேஷன் அதை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறது -- ரூ. 10 குறைந்தபட்சம் என்று நிர்ணயித்து, அந்த ரூ. 10-ஐ ரீடெயில் பிரைசோடு சேர்த்து, இறுதி விலை என்ன விலை என்பதையும் நிர்ணயித்து, 5 சதவீதமோ, 7 சதவீதமோ—எந்த ஒரு தொழிலாக இருந்தாலும் ஒரு பெட்டிக் கடைக்காரன் பொருளை வாங்கி விற்பவனாக





இருந்தாலுங்கூட, மளிகைக்காரன் பொருள்களை வாங்கி விற்கும் போது கூட 5 சதவீதமோ 10 சதவீதமோ, 15 சதவீதமோ அவர்களுக்கு பிராபிட் வைத்துக் கொள்வது நடைமுறையிலே இருக்கிற டிரேட் பிராக்டிஸ் அதை விட்டு, இது 5 சதவீதமோ 7 சதவீதமோ, 10 சதவீதமோ என்று அவர்களுக்கு மிகக் குறைந்த சர்வீங் சார்ஜ் என்ற ஒரு இலாபத்தையும் வைத்து, இறுதி விலை என்ன என்று நிர்ணயிக்கின்றபொழுது அந்த ஏஜென்டுகளே நடத்த இன்றைக்குக் கிட்டத்தட்ட 6,000 கடைகள் இருக்கின்றன. கள்ளச் சாராயத்தை ஒழிக்கவேண்டுமென்ற முறையில் பல இடங்களில் இல்லாத இடங்களில் கடைகளைத் திறக்க வேண்டுமென்ற கருத்தைக்கூட மாண்புமிகு உத்திராபதி அவர்கள் சொன்னார்கள், கள்ளச் சாராயத் தொல்லைகள் இருக்கிற காரணத்தினால்; விரிவாக்கப்பட்ட சுமார் 10,000 கடைகளை திறப்போமானால், 10,000 ஏஜென்டுகள் வருவார்களா என்பதுகூட இன்றைக்குச் சாதேகமாக இருக்கிறது, அச்சமாக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், எப்படி ஆவின் பாலை விற்பதற்கு நாம் பல இடங்களில் கடைகளைத் திறந்து அவர்களுக்கு அரசாங்கம் சில விதிகளை நிர்ணயிக்கின்றபொழுது, ஆவின் பாலை விற்க முன் வராத நிலை பல இடங்களில் ஏற்படுகிறதே, அதைப் போல........

(பிற்பகல் 1—30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்த வாணிபக் கழகத்தின் மூலமாக ஏஜென்டுகளை நியமித்து சில்லரை விலையில் அரசுக்கு விற்கப்படும் போது நீங்கள் நினைப்பது போல அல்லது யாரும் நினைப்பதுபோல அதிகமாக இலாபம் வரும் வாய்ப்பு இல்லை. பெட்டிக் கடைகளில் பொருள்களை வைத்து விற்பதைப் போலத்தான் அவர்கள் விற்க வேண்டும். அந்த அளவுக்கு வருவார்களா என்ற அச்சம் எங்களுக்கு இருக்கிறது. இந்தியன் மேட் ஃபாரின் லிக்கர் விற்பனை செய்ய லைசென்ஸ் பெற்றவர்கள் கட்டுப்பாடு இல்லாமல் விற்கிறார்கள். The retail price is not fixed ஒரு ஒயின் ஷாப்பில் அவர்கள் என்ன விலைக்கு வேண்டுமென்றாலும் சில்லரை விலையில் விற்கலாம். அதனால் அவர்களுக்கு அதிகமாக இலாபம் இருக்கிறது. ஆனால் சாராயக் கடையில் The retail price is being fixed. எந்த அளவுக்கு நிர்ணயம் செய்யப்படுகிறதோ அதைவிட அதிக விலைக்கு அவர்கள் விற்க முடியாது. அதிக விலைக்கு விற்றால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும், அதற்கான விதிமுறைகள் ஏற்படுத்தப்படும்.

ஏஜென்ட் என்று சொல்லும்போது ஏதோ குறிப்பிட்ட சாராருக்குக் கொடுப்பது அல்ல; அந்தமாதிரி நடைமுறையில் நடக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புதிய

முறையில் வாணிபக் கழகம் பொறுப்பை ஏற்று நடத்தும்போது ஆக்ஷன் முறையில் அல்லது டெண்டர் முறையில் இருந்த குறைபாடுகள் களையப்படும். ஏற்கெனவே இருந்த குறைபாட்டினால் ஆண்டுக்காண்டு வருவாய் பெருகவில்லை என்று சொல்ல மாட்டேன், ஆனால் பெருக வேண்டிய அளவுக்கு பெருகவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே தலைவர் அவர்கள் சொன்னதைப்போல 'ஆக்ஷன்-கம்-டெண்டர்' என்பது இந்தக் கட்சிக்குச் சொந்தம் அல்லது அந்த கட்சிக்குச் சொந்தம் என்பதல்ல. அரசுக்கு கிடைக்க வேண்டிய வருவாய் கிடைக்காதபடி அதிலே ஒரு கொல்லூஷன் உருவாகியது. அந்த கொல்லூஷனால் வரவேண்டிய வருவாய் வரவில்லை. 'அப்செட் பிரைஸ்' கூட வரவில்லை சில இடங்களில். அதனால் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது. அப்செட் பிரைஸ் கூட வராத காரணத்தால் 3 முறை, 4 முறை மறு ஏலம் விடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்படியும் இந்த கொல்லூஷனினால் அரசுக்கு வரவேண்டிய வருமானம் வரவில்லை. இந்த முறையிலே சென்ற ஆண்டு கூட 6 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டது. பழைய முறையில் இருந்த இப்படிப்பட்ட குறைபாடுகளைக் களையத்தான் இந்த புதிய முறையை ஏற்படுத்துகிறோம்.

'ஆக்ஷன்—கம்—டெண்டர்' முறையில் எங்கே கடை இல்லையோ அங்கே இந்த டெண்டர் எடுத்தவர்களே கள்ளச்சாராயம் விற்கிற கடைகளை நடத்தி வருகிறார்கள் பரவலாக என்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மீது தக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அரசு எதிர்பார்க்கிற அளவுக்கு ஒழுங்குபடுத்த முடியவில்லை, அரசு நினைக்கிற அளவுக்கு கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியவில்லை. டெண்டர் எடுத்தவர்களே கள்ளச்சாராய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறார்கள். உடல் நலத்தைக் குறைக்கும் கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் நோக்கத்தோடு ஏற்கெனவே 6000 கடைகள் இருந்தது. தற்போது 10,000 கடைகள் திறக்கப்படலாமா என்று வாணிபக் கழகம் யோசித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்ததைப்போல டெண்டர் முறையில் அதிகமான அமவுன்ட் பிட் பண்ணி எடுத்துவிடுகிறார்கள். பிறகு சரியாக, இழப்பு இல்லாமல் நடத்த வேண்டுமென்றால் கள்ளச் சாராயத்தை விற்றால்தான் ஈடுகட்ட முடியும் என்ற நிலை ஏற்படுகிறது. அதனால் அதிக பிட் அமவுன்டுக்கு சாராயக் கடைகளை ஏலத்தில் எடுத்தவர்கள் கள்ளச்சாராயத்தில் தீவிரமாக ஈடுபடுகிறார்கள். இந்த வாணிபக் கழகத்தின் மூலம் சாராயம் விற்கப்படுகிறபோது 'ரீட்டெயில் பிரைஸ்' நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த வாணிபக் கழகத்தினுடைய பணியாளாக இருந்தாலும் அதனுடைய ஏஜென்டாக இருந்தாலும் வாணிபக் கழகம் என்ன விலை நிர்ணயம் செய்கிறதோ அந்த விலைக்குத் தான் விற்பனை செய்ய வேண்டும். அதனால் விலை ஏறாது, அதிக விலைக்கும் விற்க முடியாது. விலை குறைவாக இருப்பதால், உபயோகிப்போர் இதையே வாங்கும் நிலை ஏற்படுவதால் கள்ளச்சாராயத்தை தடுக்க முடியும். கள்ளச்சாராயத்தை ஒழிப்பதில் இது ஒரு பயனுள்ள நடவடிக்கையாக, நல்ல பலனுள்ள நடவடிக்கையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து, இன்னொன்றைச் சொன்னார்கள். ஆர்பிட்ரேரியாக ஏஜெண்டுகளை நியமனம் செய்துவிடும் அரசு என்று சொன்னார்கள். அரசுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. The Corporation is an autonomous body. The proposal has been mooted by the Corporation. The proposal was sent to Government. The Government after careful consideration, have given consent to the proposal of the Corporation. இதைப் பொறுத்தவரையில் அதாவது வாணிபக்கழகத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு கம்பெனி. மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டியது போல் தொழில் ரீதியாக Principal and Agent என்ற முறையில் This is covered by the contract, which is well known to the Hon. Member Thiru Rahmankhan அந்த அளவிற்கு அவர்கள் அதில் பல வழிமுறைகளை வைத்து எந்த அளவிற்கு அவர்கள் டெப்பாசிட் கட்டவேண்டும், அவர்களுடைய சால்வென்சி எந்த அளவுக்கு இருக்கவேண்டும், மதுவிலக்குக் குற்றங்களில் ஈடுபட்டு தண்டனை பெற்றவர்களாக அவர்கள் இருக்கக்கூடாது, ஐ. பி. சி.யில் உள்ள குற்றங்களைக் கூட செய்து தண்டனை பெற்றவர்களாக இருக்கக்கூடாது, டேஞ்சரஸ் ட்ரக் ஆக்டின் கீழே எந்தத் தவறுகளையும் செய்து தண்டனை பெற்றவராக இருக்கக்கூடாது, ட்ரேட்மார்க் ஆக்டிலே குற்றங்கள் செய்தவர்களாக இருக்கக்கூடாது, அரியர்ஸ் அரசுக்கு இருக்கக் கூடாது, மதுவிலக்கு சம்பந்தப்பட்டவகையில் மட்டுமல்லாது மற்ற வகையிலும் அரியர்ஸ் அரசுக்கு இருக்கக் கூடாது, இப்படி பல்வேறு வழிமுறைகளை ஏஜெண்டுகள் நியமனம் செய்வதில் கடைபிடிக்கலாமா என்று வாணிபக் கழகம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எந்த முறையைக் கடைப் பிடித்தால் அது ஃபுல் ப்ரூஃப் ஆக இருக்குமோ அந்த முறையைக் கடைப்பிடித்து அரசினுடைய வருவாயைப் பெருக்கக்கூடிய வகையில் எப்படி இதை நடைமுறைக்குக் கொண்டுவரலாம் என்பதை வாணிபக் கழகம் முடிவு செய்யும். இதிலே அரசு இவருக்குக் கொடுங்கள், அவருக்குக் கொடுங்கள் என்று தலையீடு இருககாது என்பதை அரசின் சார்பில் உத்தரவாதமாகச் சொல்ல விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல் The retail price is being fixed. It may be very difficult for the Corporation to find out nearly 10,000 people. என்பதுதான் அரசினுடைய ஐயப்பாடு என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

வருமானத்தைப் பொறுத்தவரைக்கும் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுவிடக்கூடிய நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்று சுட்டிக் காட்டினார்கள். கண்டிப்பாக அந்த நிலை ஏற்படாது என்ற உத்தரவாதத்தைத் தர விரும்புகிறேன். முன்பு கூட உத்தமபாளையம், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களிலிருந்து வரவேண்டியது பற்றி ஆடிட் ரிப்போர்ட்டிலே சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே உத்தரவை அரசு போட்டிருக்கின்றது 9-7-1975-இல், அந்த அடிப்படையில் பல

பேர் பணத்தைக் கட்டவில்லை ஆக்ஷன் எடுக்கிறார்கள், பிறகு ரீஆக்ஷன் விடப்படுகின்றது. அந்த டிஃபரன்ஸ் கட்டப்படாத நிலை இருக்கின்றது. அரசுக்கு நிலுவை இருக்கின்றது. அரசுக்கு வரவேண்டிய நிலுவை பல இலட்ச ரூபாய் நிலுவை வராத நிலையில் இருக்கின்றது. பிறகு அரசு ஒரு உத்தரவிடுகிறது. The Collectors will work out the amount to be written off in each case and send a report to the Government. என்று சொல்லி ஒரு ஆணையை விட்டு அதிலே பல இலட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்படுகின்றது. இது அரசு அன்றைய சூழ்நிலையில் எடுத்திருக்கின்ற முடிவு. அத்தகைய நடவடிக்கைகளை தற்போதைய அரசு எடுக்கவில்லை. நிலுவைகளை எல்லாம் வசூலிப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. கடந்த காலத்தை விட தற்போது அரசினுடைய வருமானம் இதிலே பெருகவேண்டும் என்ற வகையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதே மாதிரி மதுவிலக்கு 1971 ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது. ஆனால் அப்போது 9கோடியே 36 இலட்சம் ரூபாய்தான் அராக் மூலம் அரசுக்கு வருவாய் இன்டியன் மேட் ஃபாரின் லிக்கர் மூலம் 5 கோடியே 18 இலட்சம் ரூபாய் வருவாய் வந்தது. 1972-லே 20 கோடி ரூபாயாக ஆகி 1973-லே 40 கோடியாக அராக்கிலே அரசுக்கு வருவாய் கிடைத்தது. ஐ எம்.ஃஎப்.எஸ்.-லே 6 கோடி 1972-லேயும், 8 கோடி 1973-லேயும் கிடைத்தது. அதனால் அப்போதைய அரசுக்கு வருவாய் குறைந்து இருந்தது. தற்போதைய அரசுக்கு வருவாய் அதிகமாக இருப்பதற்குப் பல விதமான காரணங்கள் உண்டு. இதை நான் ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இழப்பு ஏற்படக்கூடிய அளவுக்கு பல குறைபாடுகள் இருந்து சாராவிகள் மற்ற மாநிலங்களுச்கு செல்வதிலே முறைகேடுகள் இருந்து அதிலே பல இலட்சம் விட்டார்கள். ஒரு கோடிக்கு மேற்பட்ட லிட்டர்கள் தவறுதலாகச் சென்று அரசுக்கு இழப்பு ஏற்பட்ட காரணத்தால் அந்த மூன்றாண்டுகள் மதுவிலக்கு தளர்த்தப்பட்ட காலத்தில் அரசுக்கு அராக் மூலம் வந்த வருவாய் 69 கோடி ரூபாய்தான். அந்த சட்டத்திலே உள்ள சந்துபொந்துகளை அடைக்கின்ற வகையில் நாம் புதிய சட்டங்களைக் கொண்டு வந்ததன் காரணத்தால் 1981-ஆம் ஆண்டிலே மட்டுமே 68 கோடி ரூபாய் அரசுக்கு அராக் மூலமாகக் கிடைத்திருக்கின்றது. 1971, 72, 73 ஆகிய மூன்று ஆண்டுகளின் வருமானம் 69 கோடி ரூபாய். ஆனால் 1981-82-லே அதாவது மதுவிலக்கு தளர்த்தப்பட்ட ஓராண்டிலே கிடைத்த வருமானம் 68 கோடி ரூபாய். 1982-லே 106 கோடி ரூபாயாக உயர்ந்தது. 1983-லே 147 கோடி ரூபாயாக உயர்ந்து சென்ற ஆண்டிலே 135 கோடி ரூபாய் அராக்கிலே மட்டும் கிடைத்திருக்கின்றது. 33 கோடி ரூபாய் ஐ.எம்.எஃப்.எல்.லே வருவாய் வந்திருக்கின்றது. இந்த அளவுக்கு வருவாய் வருவதற்குக் காரணம் என்னவென்றால் வருவாய் இழப்புக்கு உதவிபுரியக்கூடிய சந்து பொந்துகளை, சட்டங்களிலும், விதிகளிலும் உள்ள சந்துபொந்துகளை அடைத்ததுதான். அதன் காரணத்தால்தான் அரசுக்கு வருவாய் வந்திருக்கின்றது.



(பிற்பகல் 1-40)

அரசுக்கு வருவாய் இழப்புக்கு யாருக்கும் சலுகை காட்டக்கூடிய செயல் முறையில் என்றுமே இராது என்பதற்காக இதை நான் சுட்டிக் காட்டுகிறேன். அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு வேங்கடரமணன் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். M.R.T,P. Act will be attracted. என்று சொன்னார்கள். அது தவறு. அதைப் பொறுத்த வரைக்கும் மாநிலப் பட்டியல் என்ட்ரி-8 பிரகாரம் மாநிலத்திற்கு உள்ள முழு அதிகாரம் This is a privilege and right enjoyed exclusively by the State Government அதன் காரணமாக அதிலே M.R.T.P Act சட்டரீதியாக வராது என்பதை தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

திரு. வேங்கடரமணன் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். மற்றொரு உறுப்பினரும், திரு வீரய்யன் என்று கருதுகிறேன், அவர்களும் கூட சொன்னார்கள். தூத்துக்குடியிலே ஜிஞ்சர் பெரி என்று ஒரு மது வகையினை சிலர் விற்றக் காரணத்தால் அரசுக்கு இழப்பு இரண்டு கோடி என்று சொன்னார்கள். அது தவறு. விற்றது உண்மை. கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. முதல்வர் அவர்களுக்கு மனு வந்தபிறகு உத்தரவிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே ஜிஞ்சர் பெரியைப் பொறுத்த வரைக்கும் மருத்துவர்களுடைய அனுமதியைப் பெற்று கடைகளிலே மருந்தாகக் கூட கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படி மருந்தாகக் கொடுக்கப்பட்டு வருகிற ஜிஞ்சர் பெரி சற்று அதிகமாக ஒரு வேளை, குடிக்கிறபோது அது போதை மருந்தாக இருந்துவிடும் என்று கருதுகிறேன். அதன் காரணமாக அதை மக்கள் வாங்குகிறார்கள் என்று கருதுகிறேன். அந்த நிலையிலே ஹைதராபாத்திலே இருக்கிற ஒரு தொழில் நிறுவனத்தின் மூலமாக ஜிஞ்ஜர் பெரியை தவறுதலாக தமிழகத்திற்குக் கொண்டு வந்து தூத்துக்குடியைச் சார்ந்த சிலர் விற்பனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். தமிழ்நாடு அரேக்ஷாப் ரூல்ஸைப் பொறுத்தவரைக்கும், விதிகளைப் பொறுத்தவரைக்கும் Rules are scrapped. அப்படி என்றால் பள்ளிகள், ஆலயங்கள் போன்ற பகுதியில் கடைகள் வருமே அதைத்தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அந்தப் பழைய சட்டத்தை ஒட்டி பழைய விதிகள் வகுக்கப்பட்டன. தற்போது சட்டம் திருத்தப்பட்டு விட்டது. The new rules are being framed in accordance with the provisions of the proposed amendment அதுதான் நடைமுறை. அந்த அடிப்படையில் விதிகள் தற்போது திருத்தப்பட்டு, ஆலயங்கள், பள்விகள் போன்ற இடங்களில் எல்லாம் அந்தக் கடைகள் இல்லாத அளவுக்கு அரசு நடவடிக்கையை இதுகாறும் எடுத்துக்கொண்டு வந்ததைப் போலவே எடுக்கும் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு சி. பொன்னையன்] [1985 ஜூன் 7

அருமைப் பெரியவர் அப்துல்சமத் அவர்கள் மது குடிப்பதன் தீமைகளை மக்கள் உணரச் செய்யக் கூடிய அளவுக்கு பிரச்சாரத்தை அரசு கன்ஸ்டிரக்டிவ்வாக செய்ய வேண்டும் என்று எடுத்துக் சொன்னார்கள். மதுவிலக்குக் கொள்கையை கைவிடாத நிலையில், அண்ணாவின் கொள்கையை ஈடேற்ற வேண்டும் என்ற நிலையில் ஏற்கெனவே நான் சொன்னதைப் போல. அரசாங்கத்தினுடைய வருவாயை பெருக்கவும், கள்ளச் சாராயத்தின் தீமையைக் களையவும் மதுவிலக்கை தளர்த்தி நடைமுறைக்கு வருகிற நிலையில், ஒரு புறம் இந்தக் கொள்கை தளர்த்தப்பட்டிருந்த போதிலும், மதுவிலக்கின் அவசியத்தை உணர்த்தி பிரச்சாரத்தை அரசு அதிக அளவிலே கன்ஸ்டிரக்டிவ்வாக செய்ய நடவடிக்கை எடுக்கும் என்பதையும் எடுத்துச் சொல்லி அத்தோடு என் உரையை முடிக்கிறேன்.

திரு அ. ரகுமான்கான்: தலைவர் அவரகளே, இன்றைக்கு சாராய கடைகளை கார்ப்பொரேஷனே எடுத்துக் கொள்கிறது. அதனுடைய எம்ப்ளாய்ஸ் மூலமாக என்று சொல்லிவிட்டு, அதிலே ஒரு வாக்கியம் இணைத்துக் கொள்கிறார் அமைச்சர் அவர்கள் ஏஜெண்ட் மூலமாக சாராயக் கடைகளை நடத்துவதிலே எந்த விதமான பிரச்னையும் எழாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது directly through the employees of the Corporation என்ற வகையில் கார்ப்பொரேஷனுடைய எம்ப்ளாய்ஸ் மூலமாகவே அதை நடத்தலாமே. அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஏஜெண்டுகளை போடுவதற்கு பல இடங்களில் ஆட்களே கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்று. ஏஜெண்டுகளைப் போட முடியுமோ என்ற சிக்கல் எல்லாம் இருக்கிறது என்று சொல்கிறபோது. ஏன் அதை எம்ப்ளாய்ஸ் மூலமாகவே செய்யக் கூடாது? (குறுக்கீடு) முடித்து விடுகிறேன். இன்னும் சொல்லப் போனால் படித்து விட்டு வேலை இல்லாமல் இருக் க்கூடிய 12 லட்சம் 13 லட்சம் இளைஞர்களை எம்பிளாய்மென்ட் மூலமாக அப்சார்வ் பண்ணி அவர்களிடத்திலே ஒப்படைக்கக்கூடிய முயற்சிகளைக் கூடச் செய்யலாம். ஆனால் அவைகள் எல்லாம் இங்கே சொல்லப்படவில்லை.

இதிலே என்ன சொல்லியிருக்கிறது என்று சொன்னால் through the Agents appointed by the State Corporation on its behalf and on such terms and conditions as the State Corporaton may specify. இனிமேல்தான் ஏஜெண்ட் என்று சொல்பவக எப்படி இருப்பார்? ஏஜெண்டிற்கும் கார்ப்பொரேஷனுக்கும் இடையே அந்த ஷாப்பை நடத்துவதிலே என்ன ஒப்பந்தம்? *** ஏஜெண்டுகள் கடையை வைத்திருக்கிறார்கள் என்றால் இப்படிப்பட்ட கடைகளை நடத்துவதால் அவர்களுக்கு லாபம் உண்டா இல்லையா? அதுதான் கேள்வி. சாராயத்தை விற்பதன் மூலமாக ஏஜெண்டிற்கு லாபம் போய் சேருகிறதா, இல்லையா? பணம் போய் சேருகிறதா இல்லையா? அந்த வாய்ப்பை உங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஏன் செய்துவிடக் கூடாது? அந்த அபாயம் இதில் இருக்கிறது என்பதுதான் என்னுடைய கூற்று.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கும் என்பதை



1985 ஜூன் 7]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே. நான் இன்னொரு பட்டியலை எடுத்துப் படித்தேனேயானால் இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். அப்படிப்பட்ட சலுகைகளைச் செய்வது அரசினுடைய நோக்கமில்லை என்பதற்காகச் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: ஏஜெண்டிற்கு எவ்வளவு பெர்செண்ட்? அவர்களுக்கு எவ்வளவு வருமானம்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஒருவேளை மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் நான் விளக்கமாக விளக்கியபோது கவனிக்காமல் இருந்து விட்டாரோ என்றுகூட அச்சப்படுகிறேன். காரணம் சாதாரணமாக ஒரு பெட்டிக் கடையிலே, மளிகைக் கடையிலே இருக்கிற பொருள்களுக்கு கூட 15 சதவீதம் லாபம் தரப்படுகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: * * என்று சொன்னார்கள். இப்போது * * கிடையாது. உறுப்பினர் ரகுமான்கான் (* * ) சும்மா ஆடுமா அல்லது எப்படி ஆடும் என்று அறிய விரும்புகிறேன்.

திரு அ. ரகுமான்கான்: சில வகைகளில் ஆடுவது இயற்கையானது. ஆனால் * * இயற்கையானது தான். எந்த விதம ன நோக்கமும் இல்லை.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: நான் சொன்னது, கார்ப்பரேஷன் தன்னுடைய எம்ப்ளாயிஸ் மூலமாக, ஏஜெண்ட் மூலமாக அதனால் நியமிக்கப்படுகிற ஏஜெண்ட், அரசு நியமிக்கிற ஏஜெண்ட் அல்ல. கார்ப்பரேஷன் முடிவு செய்கிற விதிகளுக்கு உட்பட்டு அதனால் நியமிக்கப்படுகிற ஏஜெண்ட் நடத்துகிறபோது ரீடெய்ல் பிரைஸ் என்னவென்பது நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது.

(குறுக்கீடு) But first let me complete. First of all you should listen to me. Then only your healthy argument can be strengthened.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது கார்ப்பரேஷன் அட்டானமஸ் பாடி என்று சொல்கிறார்கள் அவர்கள் சொல்கிற ஆங்கிலம் விளங்குகிறது. அட்டானமஸ் பாடி என்பது இண்டிபெண்டன்ட்தான். ஆனால் நான் கேட்கிறேன், Corporation is controlled by the Government. அட்டானமஸ் பாடி என்றாலும் வார்த்தையில் தான் இருக்கிறது. கார்ப்பரேஷன் அட்டானமஸ் பாடியாக இருந்தால் அமைச்சர் அவர்கள் சொல்வது நடக்காதா? அமைச்சருடைய விருப்பம் நிறைவேற்றப்படாதா? அட்டானமஸ் பாடி என்று தியரியிலே சொல்லலாம். ஆனால் நடைமுறைகள் இருப்பது என்ன என்று தான் கேட்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் அட்டானமஸ் பாடிகளுடையநடைமுறைகளில் தலையிடுவதில்லை. தலையிடாது என்ற உறுதியை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையிலும், 1971லிருந்து 1973 வரையிலும் மதுவிலக்கை தளர்த்தியிருந்தபோது, ஐ.எம்.எப்.எல்.யார் யாருக்கு கொடுத்திருக்கிறார்கள் என்ற பட்டியல் இருக்கிறது. அந்த முறையை நாங்கள் கடைப்பிடிக்க மாட்டோம். அதிலே Retail price is not being fixed. ஒரு கடையிலே ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம், இரண்டு லட்சம் லாபம் வருகிற நிலை இருந்தது. அப்படி இல்லை இது. விதிமுறைகளை கடைப்பிடிக்காது குறிப்பிட்ட சிலருக்கு பேவரைட்ஸ் என்ற முறையிலே தரப்பட்ட பட்டியலை நான் தருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: ஏஜண்ட் தேவையில்லை என்று தான் சொல்கிறேன். ......

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: Thiru Rahmankhan should have enough tolerance to listen to my explanation இங்கே ரீடெய்ல் பிரைஸ் பொறுத்தவரையிலும் நாம் பிக்ஸ் பண்ணி விடுகிறோம். ஐ.எம்.எப்.எல்-க்கு ரீடெய்ல் பிரைஸ் பிக்ஸ் பண்ணாமல் ஒரு மாதத்திற்கு பல லட்சம் லாபம் பெறக்கூடிய கடைகள் இருந்ததைப் போல நாம் இல்லாமல், அராக்கைப் பொறுத்தவரையிலும பிரைஸ் என்னவென்று பிக்ஸ் பண்ணி, அதற்கு மேலே விற்கக் கூடாது, விலை நிர்ணயித்த பிறகு என்று வைத்திருக்கிறோம். ஒரு பெட்டிக் கடைக்காரனுக்கு, ஒரு மளிகைக் கடைக்காரனுக்கு கிடைப்பதைப் போல, சாதாரணமாக எந்தத் தொழிலைச் செய்பவனும் 15 சதவீதம் லாபம் இல்லாமல் வியாபாரம் செய்ய மாட்டான். இல்லாவிட்டால் அவனுக்கு சாப்பாட்டுக்குக் கூட கிடைக்காது. அதிலே குறைந்த அளவு லாபம் எப்படி கொடுப்பது என்பதைப்பொறுத்துகூடநான்எடுத்துசொன்னேன். கார்ப்பரேஷன் அதை பரிசீலித்து வருகிறது, என்பதை எடுத்துச் சொன்னேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைப்பதைப் போல

.. .. ..

திரு. அ. ரகுமான்கான்: அன்எம்ப்ளாய்ட் 17 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை கொடுங்களேன்.....

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினருடைய பரிந்துரையை வாணிபக் கழகத்திற்கு அரசு சொல்லும்.

திரு. ஆ. கா. அ. அப்துல்சமத்: தலைவர் அவர்களே, மதுவிலக்கு இந்த அரசினுடைய அடிப்படை கொள்கையென்று அமைச்சர் அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தியதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன் மதுவிலக்கு முற்றாக அமல்படுத்துவதற்கு அதற்கு தேவைப்பட்ட நிதிப் பெருக்கத்திற்கு வழிவகை செய்த பிறகு, அது செய்யப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர்



அவர்கள் அறிவித்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மதுவினுடைய தன்மையே தொட்டவரை என்றும் விட்டுவிட்டது என்பது நாம் காணமுடியாத காட்சியாகும். மதுவிலாலே தங்கள் வருமானம் பெருகிக் கொண்டே போகிறபோது அதை விடுவதற்கு என்றுதான் அரசுக்கு மனம் வருமோ தெரியவில்லை.

(பிற்பகல் 1-50)

ஆகவே வரவு-செலவு திட்டத்தை தயாரிக்கும்போது, மதுவிலக்கினாலே ஒரு வரவு இருக்கிறது என்பதையே மறந்துவிட்டு வருவாயைப் பெருக்குவதற்கு வழிவகை செய்வதற்கு தக்க பொருளியல் நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அடுத்த ஆண்டிலாவது அதை அமல்படுத்துவதற்கான ஒரு ஆய்வை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பெரியவர் அப்துல்சமத் அவர்கள் கூறுகின்ற ஆலோசனையை அரசு ஏற்கனவே ஆய்ந்து வருகிறது. தக்க நடவடிக்கை ஆய்வின் அடிப்படையில் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 28/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

## பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

திரு. கோ. வீரய்யன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"(1) பிரிவு 2 (b) (iv)-ல் உள்ள (d) (ii)-ல் இனம் (A)-ல் வரும் "நேரடியாகவோ, அல்லது" என்ற வார்த்தைகளை நீக்கிவிட்டு, "மட்டும்" என்ற வார்த்தையை சேர்த்துக் கொள்ளவும்

(2) பிரிவு 2 (b) (iv)-ல் உள்ள (d) (ii)-ல் இனம் (B) மற்றும் (C) மற்றும் அதைத் தொடர்ந்துள்ள விளக்கத்தை நீக்கவும்."

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 136399

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது. [திரு. கோ. வீரய்யன்] திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''. தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று பிரிவு-2 நிறைவேற்றப்பட்டது..

பிரிவுகள் 3 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1985-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.28/1985) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள்இத்துடன் முடிவுற்று, 10-6-1985 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

202 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாம் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ்/ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

—எமிவுமில்லை—

136399

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATION.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Madras-8.
Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-
rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
5 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.